# நாவலர்
# ஈழமேகம்
# பக்கீர்த்தம்பி
# நினைவுச்சுவடுகள்



கலாபூஷணம்
யூ.எல். அலியார் எம்.ஏ

பைத்துல் ஹிக்மாஹ்

13812
920

34
2009.07.09

# நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி நினைவுச் சுவடுகள்

அமீரலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை
26 APR 2005
AMIRALI PUBLIC LIBRARY
PRADESHIYA SABHA
SAMMANTHURAI

தொகுப்பு:
**கலாபூஷணம் யூ.எல்.அலியார்**

இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்

REFERENCE SECTION
உசாத்துணைப் பிரிவு

AMIRALI PUBLIC LIBRARY
PRADESHIYA SABHA
SAMMANTHURAI

**வெளியீடு:**
பைத்துல் ஹிக்மாஹ்
53, கீச்சார் வீதி
சம்மாந்துறை. 02
இலங்கை.
(தொலைபேசி: 067-2260116, 2260270)

அமீரலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை

## Bibiliographical Data

**Title:** Naavalar Ealamegam Pakkeerthamby Ninaivu Cuuvadukal (Memories of Navalar Ealamegam Pakkeerthamby)

**Subject:** Biography
**Compiled & Edited by:** U,L,Aliyar
**Copyright:** © Editor
**Book Size:** 1/8
**Font Size:** 11 Points
**Pages:** **v, 111**
**Copies:** 1000
**Computer Typesetting:** **Alfa Computers, Sammanthurai.**
**Printiers:** Evergreen Printers,
93, Trinco Road, Batticaloa.
**Publishers:** 'Baithul Hikmah', Sammanthurai
**First Edition:** march. 2005
**Price:** **Rs. 120**

இலங்கைத்தேசிய நூலகம் – வெளியீடுகளில் உள்ள பட்டியற் தரவு

அலியார், யூ.எல்.

நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி நினைவுச் சுவடுகள்
யூ.எல். அலியார், சம்மாந்துறை, தொகுப்பாசிரியர். 2005

ப. v, 111 செ.மீ. 21


**ISBN: 955-95831-3-1** விலை: ரூ 120

AMIRALI PUBLIC LIBRARY
PRADESH SABHA
SAMMANTHURAI

ஈன்ற தாய் நாட்டின்
இன்பெயர் தனைத்தாங்கி
ஆன்ற கலை பரப்பி
ஆயுளைத் தத்தம்செய்த

**ஈழ மேகம்** என்னும்
எழுச்சிக் குரல்வளத்தின்
இனிய நினைவுகளால்
என்றும் கசிந்துருக
உள்ளன்பு வைத்து
இறையருள்வேண்டிநின்று

உள்ளுருகும் நெஞ்சங்கள்
அன்பர்கள் நிறைவுக்காய்
இந்நூல் இனிது
பல்காலும் பயன்தரவே
தந்தோம் சமர்ப்பணமாய்
கொள்வீர் தகவுடையீர்!



**தொகுப்பாசிரியர்**

ACCESSION NO:- 13812
C. S. NO: 920

சுவடுகள் .....

பக்.

1. முன்னுரை 1

2. வாழ்த்துரை 5
**எம்.எல்.ஏ. காதர், துணை வேந்தர், தெ.கி.ப.**

3. வாழ்த்துரை 7
**க. பரமேஸ்வரன், செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு (வ.கி.மா.)**

4. அண்ணாவின் வாயால் ஈழமேகம் ஆனவர் 9
**எஸ்.டி. சிவநாயகம், பத்திராசிரியர் (தினபதி-சிந்தாமணி)**

5. ஆற்றல் வாய்ந்த அற்புதக் கலைஞர் 10
**செ. இராசதுரை (முன்னாள் மட்டுநகர் முதல்வர்)**

6. இனிய நண்பர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி 11
**எம்.ஈ.எச். முகம்மதலி (முன்னாள் மூதூர் முதலவர்)**

7. நாவலர் கவிஞர் ஈழமேகம் பற்றிய வாழ்க்கைக் குறிப்பு. 12
**தொகுப்பாசிரியர்**

8. அறிஞர் அண்ணாவினால் ஆரத்தழுவி பொன்னாடையும், புகழாரமும் சூட்டப்பட்ட, இனிய நண்பர் ஈழமேகம் 22
**ஹாஜி உஸ்மான் சாஹிப்**

9. ஈழமேகத்தின் மழையும் துளிகளும் 25
**கவிச்சுடர் அன்பு முகையதீன்**

10. ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்களின் மனித நேயப்பண்புகள் 30
**எஸ். வேலாயுதன்**

11. இரண்டாயிரம் மேடைகள் கண்ட இணையற்ற கலைஞர் 36
**அ.ஸ. அப்துஸ்ஸமது**

12. இஸ்லாமிய நற்சிந்தனையாளர் நாவலர் ஈழமேகம் 39
**மௌலவி எம்.எச்.எம். புகாரி**

13. ஒரு தலைமுறையின் முன்னோடி 43
றமீஸ் அப்துல்லாஹ்

14. ஈழத்தின் புகழ்மிகு நாவலர் 46
அ.லெ.மு. றாசிக்

15.. வரகவி ஈழமேகம் 49
மருதூர்க்கொத்தன்

16. இந்தியத் தமிழகத்தின் காளமேகம் மட்டக்களப்புத் தமிழகத்தின் ஈழமேகம் 53
எம்.எம்.எம். மஹ்றூப் கரீம்

17. இறைவனின் அருட்கொடை ஈழமேகம் 58
மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத்

18 நாவலர் ஈழமேகம் - சில நினைவுகள் 61
மருதூர் வாணன்

19 நாவலரும் நானும் 62
ஈழக்குயில் இத்ரீஸ்

20 ஈழமேகம் இன்னும் மரணிக்கவில்லை 9
(மர்ஹூம்) அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரப்

22 இலக்கிய மேடைப் பேச்சுக்களால் அனைவரையும் கவர்ந்த ஈழமேகம் 73
கலாநிதி கே.எம்.எச். காலிதீன்

23 ஈழமேகத்தின் மழையும் துளிகளும் 75
அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல்

24 பக்கீர்த்தம்பி ஓர் இலக்கியம் 80
கவிஞர் ஏ.இக்பால்

25 இன்சொற் புலவன் ஈழமேகம். 82
சாரணா கையூம்

27 **மறைவின் மறுகணம் உதிர்ந்த கண்ணீர்ப் பூக்கள்** 86

28 **இரங்கலும் பிரிவாற்றாமையும்** 96

அமீர் அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை

# முன்னுரை

*எல்லையில் அருளும் நிகரிலாக்கருணையும்*
*நிறைந்த வள்ளல் நீதியின் அதிபதி*
*வல்லவன் அல்லாஹ் உன்னினைவகலா*
*வழியின் ஒளியாய் துணைபுரிவாயே*

நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி மறைந்து சுமார் இருபது வருடங்களாகும். இத்தருணத்தில் அன்னார் பற்றிய ஒரு நூலை வெளிக் கொணருவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

பொதுவாக அறிஞர்களின் பெருவாழ்வு இளைய தலை முறையினருக்கு முன்மாதிரியாகவும், வாழ்வுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகவும், வளமூட்டும் படிப்பினையாவும் அமைவது இயல்பு.

ஓர் அறிஞன் உயிர் வாழும் காலத்தில் அவன் சிந்தனைக ளையும் சாதனைகளையும் அசட்டைசெய்து அவன் மறைந்த பின் மாசாலைக் கண்ணீர் வடித்து, அவனுக்குப் புகழாரம் சூடி, சிலை வடித்துச் சிங்காரிப்பது காலங் காலமாக வரும் நடைமுறையாகும். இந்த நடை முறைக்கு மாற்றமாக 'தோன்றிற் புகழொடு தோன்றி' புகழொடு வாழ்ந்து அரிய பல விருதுகள் பெற்று வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் மக்களால் கௌரவிக்கப்பட்ட ஒரு மாமேதை யாகமகோத்தமராக மிளிர்ந்த வர்தான் நாவலர்- கவிஞர்- 'ஈழமேகம்' பக்கீர்த்தம்பி.

இருபதாம் நூற்றாண்டின் பின்னரைக்கூற்றில் எம்மோடு வாழ்ந்து மறைந்துபோன இப்பெரியாரின் வாழ்வும்,வளமும்,கலையும், கவித்துவ மும், சொல்லாற்றலும், வழிகாட்டலும் இன்றுள இளம் தலைமுறை யினரால் அறியப்படாதவையாக ஆகிவிடக் கூடாதே என்ற ஆதங்கம்தான் இவ்வாக்கத்துக்கு முனைப்பாக அமைந்தது. சம்மாந் துறைத் தாயகத் தில் மட்டுமன்றி கிழக்கிலங்கையையும் கடந்து, நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் அவர் ஆற்றிய பணிகளும் படைத்த சாதனைகளும் இன்றைய இளைஞர்க்கு ஆதர்ஷமாக அமைந்துள்ளன. சீர்திருத்தம், சமூக வாஞ்சை, ஆன்மீக நோக்கு என்பன அவரது வாழ்க்கைத்தத்துவங் களாக மிளிர்ந்தன. அவற்றைத் தம் கவித்துவம், மனிதநேயம், எழுத்தாற்றல், சொல்லாற்றல், ஜனரஞ்சகம் என்பவற்றின் மூலம் வெளிப்படுத்தினார். அவரது எழுத்துநடையும், உரைப்பாங்கும், கவிதைப்போக்கும் தனித்துவமானவை. மக்களின் உள்ளத்தைப்

பிணித்த அவர்தம் வாழ்வு நெறி எம்மவர்க்கு பசுமையான பதிவுகளாக பிரகாசிக்கின்றன.

இத்தகைய மனித நேயமிக்க நல்ல மனிதனின் இழப்பு நிகழ் காலத்தில் ஒரு வெற்றிடத்தைத் தோற்றுவித்துள்ளது.அவரது எழுத்துக்களும், வானொலிச் சொற்பொழிவுகளும் சுவடுகளாக அமைந்த- போதிலும் அவை அலுமாரிகளின் அடித்தட்டில் கறை யான்களுக்கு இரையாகிவிடக்கூடாது. அவை உயிர்ப்புடன் உலவ வேண்டும். அவற்றின் மூலம் ஈழமேகம் நினைவுகூரப்படல் வேண்டும். அன்னாரின் அபிமானிக- ளிடையே நிலவி வந்த இந்நன்னோக்கு நினைவுப் பணிமன்றமாக உருவெடுத்தது.

அன்னாரின் மறைவின்போது அபிமானிகள் காட்டிய அனு தாபமும் தொடர்பு ஊடகங்கள் வெளிப்படுத்திய இரங்கல்களும் எந்த அளவு மக்கள் உள்ளத்தில் அவர் இடம்பிடித்திருந்தார் என்பதைக் காட்டிற்று. தொடர்ந்து காலத்துக்குக்காலம் சிற்சில நிகழ்வுகளை நடாத்தி தமது நினைவாஞ்சலிகளை சமர்ப்பித்துள்ளனர். சிறு பிரசுரங் கள் வெளியீடு, நினைவுச் சொற்பொழிவுகள், சஞ்சிகைகளின் நினைவுச் சமர்ப்பணம், நூல் சமர்ப்பணம் என்பன மறக்கமுடியாத நினைவு நிகழ்வுகளாகும். அந்த வகையில் ஈழக்குயில் இத்ரீஸ் நன்றிக்குரியவர். இவர் வருடாந்தம் ஒரு நிகழ்வின் மூலம் ஈழமேகத்தை நினைவு கூர்ந்தார். இவர் இது தொடர்பாக வெளியிட்டுள்ள பிரசுரங்- களாவன, ஈழக்குயிலின் இதயத்தில் நீ(1994), அறிவியல் துறையில் முஸ்லிம்கள் ஆற்றிய அரும்பணி (1995), ஈழக்குயிலின் நான் அறிந்த ஈழமேகம் (1997) ஆகியனவாகும். ஈழமேகத்துடன் கொண்டிருந்த அபரிமிதமான அன்பையும், அபிமானத்தையும் அவரது முயற்சிகள் வெளிக்காட்டின. மேலும் சில சஞ்சிகைகள் ஈழமேகத்தின் நினைவாக விசேட கட்டு ரைகள், படங்களை வெளியிட்டு அன்னாருக்கு அஞ்சலி செலுத்தின. அவற்றுள் நாம் அறிந்தவை, சாய்ந்தமருதுவிலிருந்து வெளிவந்த இளநிலா (1985), மருதமுனை மருதூர் வாணனின் சமாதானம் (யூலை 1988) ஆகியவையாகும். தவிர சம்மாந்துறை வாசகர் வட்டம், கவிஞர் வீ.ஆனந்தனின் முனைப்போடு நடாத்திய நினைவுக்கூட்டங்களும் இலக்கிய முயற்சிகளும் மறக்க முடியா- தவையாகும். எவ்வாறேனும் நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பியின் கலை இலக்கிய நலன்கள் பற்றியும் மனிதநேயப் பண்புகள் பற்றியும் அவை சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றியும் காத்திரமான ஒரு நூல் வெளியிட-ப்படவேண்டும் என்ற அவா பலரிடையே முளைவிட்டிருந்தது என்பதை நாம் மறக்கமுடியாது. இருப்பினும் அதனைச் செயற்படுத்துதற்கு முறையான அமைப்பு இருக்கவில்லை.

1985ம் வருடம் நாவலர் மறைந்தபோது வெளியிடப்பட்ட அனுதாபச் செய்திகளையும் இரங்கற்பாக்களையும் கொண்டு ஒரு பிரசுரம் வெளியிடுவதென எண்ணிச் செயற்பட்டபோது, நாவலரின் ஆற்றல், சாதனை, முன்மாதிரியான வாழ்க்கைப் பாங்கு என்பவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் கனதியான நூல் ஒன்று வெளியிடப்பட வேண்டும் என்ற அபிப்பிராயம் பலரினால் தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னரே இநநூல் முயற்சியில் கருத்தூன்றிச் செயற்பட்டோம். ஒரு காலகட்டத்தில் இலக்கிய உலகில் கொடிகட்டிப் பறந்த ஒரு பெரியார் பற்றி, அறிஞர்களின் கருத்துக்களையும் எண்ணப்பதிவுகளையும் நினைவுச்சுவடுகளாக திரட்டி ஒரு நூல் வெளியிடுவதே நாம் அன்னாரின் நினைவாகச் செய்யும் ஆக்கபூர்வமான பணி என முடிவு செய்யப்பட்டது.

நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பியின் சமகால அறிஞர்கள், நெருங்கிப்பழகியவர்கள், அபிமானத்துக்குரிய சீடர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், நணபர்கள், அன்பர்கள் என்பவர்களிடமிருந்து ஆக்கங் களைப் பெற்றுத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது நல்ல வரவேற்பு கிடைத்தது. தாம் வெளிநாட்டில் இருந்தபோதிலும முன்னாள் மட்டுநகர் முதல்வர் திருவாளர் செ.இராசதுரை, நாவலரை நினைவு கூர்ந்து வாழ்த்துச் செய்தி அனுப்பியமை மறக்கமுடியாதது. இவ்வாறு மற்றும் பல அறிஞர்கள் பத்திரிகை விளம்பரத்தைக் கண்ணுற்று ஆக்கங்களையும், நினைவுக்குறிப்புக்களையும் அனுப்பியிருந்தார்கள்.

இருந்தபோதிலும், இந்நூல் சிலரின் எழுத்துக்களின்றி நிறைவுற மாட்டாது எனக் கருதத்தக்க சில அறிஞர்ப் பெருமக்களிட-மிருந்தும் ஆக்கங்கள் கோரப்பட்டன. இரு வருடங்களாக நினைவூட்டல்களும் அனுப்பப்பட்டன. இறுதிவரை சில நினைவூட்டல்கள் பயன் தராமற் போனமை துர்ப்பாக்கியமே. பக்கீர்த்தம்பி கொடுத்த பயிற்சியால் பக்குவமானவர்கள், காட்டிய நெறியால் கவிஞரானவர்கள், சொல் லாற்றலால் வல்லமை பெற்றவர்கள் என்போர் மறைந்த பெரியாரின் நினைவுகளுக்காக சிறிது அவகாசம் எடுக்காதபோது அவற்றை எதிர் பார்த்து இன்னும் இம்முயற்சியை தாமதமாக்கக்கூடாது என்று உணரப் பட்டது. நிச்சயமற்ற நாளைக்காக திரட்டிய ஆக்கங்களை காலாவதி-யாக்கக்கூடாது என்ற நல்லெண்ணமே இந்நூலாக்கமாகும். இடம்பெறும் ஆக்கங்கள் அனைத்தும் **2001** ஜனவரிக்கு முற்பட்ட வையே என்பதை வாசகர் புரிந்து கொள்வார்கள்.

ஈழமேகம் இறையடி எய்திய ஒரு வாரத்திற்குள் (24-03-85) சம்மாந்துறைப் பொதுமக்கள் ஏற்பாடு செய்த அஞ்சலிக் கூட்டத்தில் பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர். மறைந்த பெரியாருக்கு நினைவுப்பணி மன்றம் அமைத்துப் பணியாற்றவேண்டும் என அங்கு முடிவு செய்யப்பட்டது. எனினும் காலத்தால் நினைவுகள் மறக்கடிக் கப்பட்டன. தீர்மானங்கள் காற்றில் அள்ளுண்டு சென்றன. அவரது கலைநெறிகளும், சாதனைகளும் கூட மறக்கடிக்கப் படுமோ என்றும் அஞ்சத்தோன்றியது.பல பிரயத்தனங்- களின்பேரில் பதினைந்து வருடங்களுக்குப் பின்னர் மன்றம் அமைக்கப்பட்டமை மகிழ்ச்சிக்-குரியதே. மன்றத்தினால் 2001 பெப்ரவரியில் பாடசாலை மாணவரி-டையே ஈழமேகம் நினைவுதின கலை இலக்கியப் போட்டிகள் நடாத்தப்பட்டு ஜுலை 16இல் நினைவுதின விழாவும் நிகழ்வுற்றது. 21ம் நூற்றாண்டின் இலக்கிய ஆய்வாளருக்கு இம்மன்றம் பணியாற்றும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

2000ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட் டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட இலக்கியப் பெருவிழாவில் விழா நிறைவு அங்கமான, கலைஞர்க்கு விருது வழங்கிக் கௌரவிக்கும நிகழ்வுக்கு 'ஈழமேகம் பக்கீர்த்தம்பி அரங்கு' எனப் பெயர் சூட்டிக் கௌரவித்தமை பெரு நன்றியுடன் நினைவுகூரத்தக்கதாகும்.

இவ்வாக்கத்திற்கு வாழ்த்துரை வழங்கியோர்க்கும் விடயதானம் நல்கியோர்க்கும், இந்நூலாக்கத்தில் அவ்வப்போது ஆலோசனை வழங்கிய அன்பர்களுக்கும், எழுத்துக் கோப்பு, வடிவமைப்பு, அச்சு என்பவற்றில் பங்கேற்றோர்க்கும், நூல் வெளியீட்டில் ஆதரவு வழங்கிய அனைவர்க்கும் நன்றிகள் உரித்தாகுக. 2001 இல் இந்நூல் வெளிவருவதற்காய் எடுக்கப்பட்ட முயற்சிகள் 2005 இல் நிறைவுறுவது இறைவன் சித்தமே.

**யூ.எல்.அலியார்,**
தொகுப்பாசிரியர்

பைத்துல் ஹிக்மாஹ்,
53, கீச்சார் வீதி, சம்மாந்துறை-2
18-03-2005

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஜனாப் எம்.எல்.ஏ.காதர் அவர்கள் மனமுவந்தளித்த வாழ்த்துரை

புதியதொரு நூற்றாண்டிலே கால்வைத்திருக்கின்றோம். புதிய திட்டங்களும் செயல்களுமாய் புதியதோர் உலகம் செய்யப் புத் துணர்ச்சி கொள்ளவேண்டிய காலகட்டம் இது.

அதேவேளை, கடந்து வந்த காலங்களைக் கருத்திற் கொள்ள வேண்டிய கட்டமும் இது.

எங்களை இந்த இடத்தில் இந்த நிலைமைக்கு கொண்டு வந்து நிறுத்திய கடந்த காலத்தைத் திரும்பிப் பார்ப்பதில் இரண்டு கட்டாயத் தேவைகள் உண்டு.

ஒன்று, கடந்த காலம் எங்களுக்கு ஊட்டவல்ல படிப்பினை யைப் பெற்றுக்கொள்வது. மற்றயது, நன்றி மறவாமை.

**'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்நன்றி கொன்ற மகற்கு'**

இந்த இரண்டாவது தேவையை நிறைவேற்ற முனைந் திருக்கிறார்கள் 'நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி நினைவுப் பணிமன்ற'த் தினர்.

அந்த முயற்சியில் முதலாவது தேவையும் நிறைவேறக் கூடியதாக 'நினைவுச் சுவடுகள்' அமைய வேண்டும்.

பக்கீர்த்தம்பியவர்கள், நல்லாசிரியராய்த் திகழ்ந்தவர். மேடை, பத்திரிகை, வானொலி முதலான ஊடகங்களை நல்லபடி கையாண்ட நாடறிந்த பேச்சாளர், கவிஞர், மார்க்கப்பணியாளர், சம்மாந்துறை கலாபிவிருத்திக் கழகத்தின் பிதாமகர், அக்கழகத்தின் மூலம் இளந் தலைமுறையொன்றைக் கலை, இலக்கியப் பணியில் ஈடுபடப் பழக்கிவிட்ட வழிகாட்டி, இவற்றுக்கெல்லாம் மேலாக 'நல்ல மனிதர்'. நாங்கள் பெருமிதம் உறத்தக்க வகையில் எங்கள் பிரதேசத்திற்கருக் கொண்டெழுந்து, நாடு முழுதும் அறியும் படியாகப் புகழ்வானில் விரவி, தமிழகம் வரையிற் சென்று, காளமேகமாய் முழங்கிக்

கவிதையாயும் உரையாயும் பொழிந்து, அது கண்டு தமிழகத்தவரால் 'ஈழமேகம்' என்று பாராட்டப் பெற்றவர்.

**'திறமான புலமையெனில் வெளிநாட்டோர்**
**அதைவணக்கம் செய்தல் வேண்டும்'**

**அறவழிக்கீதமாய்** அமைந்த ஈழமேகத்தின் இசை முழக்கம் .அம்மேகம் கவிதையாய்ப் பொழிந்த **மழையும் துளிகளும்.** அதன் பொழிவால் மலர்ந்த **உரைமலர்** மூன்றும் அவர் விட்டுச் சென்றவை.

ஈழமேகத்தின்புகழை நிலைநிறுத்துவனவாய் அமைந்த அவர்தம் அம்மூன்று நூல்களோடு, நான்காவதாய் அவரைப் பற்றியதான **'நினைவுச் சுவடுகள்'** பதிவு பெற வாழ்த்துகிறேன்.

***எம்.எல்.ஏ.காதர்***
**துணைவேந்தர்**

**தென் கிழக்குப் பல்கலைக் கழகம்**
**'பல்கலைக் கழகப் பூங்கா'**
**ஒலுவில்** 16-11-2000

**வடக்கு கிழக்கு மாகாண**

**கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை**

**அமைச்சின் செயலாளர்**

## உயர் திரு க.பரமேஸ்வரன் அவர்கள்

# மனமுவந்து வழங்கிய வாழ்த்துரை

தமிழக இலக்கிய வரலாற்றில் காவிய காலத்துப் புலவன் காளமேகம் 'இம்' மென்னுமுன்னே எழுநூறு பாடல்களைப் பாடியதாக அறிந்திருக்கினறோம். ஈழத்தில் கடந்த நூற்றாண்டில் எமது கண் முன்னே வாழ்ந்த ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்கள் கவி பாடுவதில் மட்டுமன்றி சொல்லாற்றலிலும் திறமை படைத்தவர் என்பதை தமிழகம் வரை சென்று அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் எமக்குக் காட்டுகின்றன.

நாவலர் பக்கீர்த்தம்பி அவர்கள், கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு கவிச்சுடர். ஈழத்தின் பெருமைதனை தமிழகம் வரை கொண்டு சென்று நிலைநாட்டிய கலங்கரை விளக்கம். ஆம்!... அவரது நாவன்மையின் ஒலி நயத்தையும், பொருட் புலமையையும் கண்டு வியந்த பேரறிஞர் அண்ணா 1961 இலேயே அவரை ஈழமேகம் என்று அழைத்து இலக்கிய வானில் ஒரு எழுகதிரோனாக தமிழ் இலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்தார்.

கவிபாடுவதிலும் செந்தமிழ் சொல்மாலை தொடுத்து உணர்ச்சிப் பெருக்கில் ஊற்றெடுக்கும் சொற்பொழிவுகளிலும், தன்னை இனங்காட்டிக் கொண்ட நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்கள மன்த நேயத்தை மனதில் கொண்ட ஒரு மகானாக வாழ்ந்தவர். அவரால் எமது இன்பத் தமிழ் மொழி பெருமையடைந்தது. அந்த நாவலரால் எமது தேசம் எழுச்சி பெற்றது. அவரது வாழ்வும் வரலாறும் இந்த நாட்டில் வளர்ந்து வரும் இளைய தலைமுறையினர்க்கு ஒரு பாடப்புத்தகமாக விளங்குகின்றது.

கடந்த நூற்றாண்டில் வாழ்ந்து சாதனைகள் படைத்த அந்த மாமனிதனை, இந் நூற்றாண்டின் நினைவுகளாய் எமது உள்ளத்தில நினைத்துப் பார்ப்பதில் ஒரு சுக அனுபவம் தெரிகிறது... அதிலே ஒரு இலக்கிய சுகம் எங்கள் உதிரத்தினூடாகப் பாயும்பொழுது ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்களை எப்படி மறந்துவிட முடியும்? அந்த அறிஞர்ப் பெருமகனை நினைவு கூரும் வகையில் அன்னார்

பற்றிய ஒரு வரலாற்று ஆவணத்தைத் தொகுத்து நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி நினைவுச் சுவடுகள் என்ற நூலாகவெளியிடுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. அத்தகைய ஒரு புலவனின் நினைவுச்சுவடு காலங்காலமாக எமது மக்களின் உள்ளங்களில் ஊறி உணர்வூற்றுக்-களாய் ஊற்றெடுக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**க.பரமேஸ்வரன்**
**செயலாளர்**
23-11-2000

# அண்ணாவின் வாயால் ஈழமேகம் ஆனவர்

இந்த மாமனிதரைச் சந்தித்து ஐம்பத்திரண்டாண்டுகள் ஓடி விட்டன. ஆனாலும் இன்னும் நினைவு பசுமையாகவே இருக்கிறது.

கிழக்கு இலங்கை தந்த ஒரு சிறந்த கவிஞர், சிறந்த பேச்சாளர், சிறந்த ஆசிரியர், சிறந்த மனிதாபிமானி-எல்லாவற்றிற்கும் மேலாக, பழகியவர்களோடெல்லாம் இனிய முகத்துடன் அன்பாக உறவாடிய நண்பர் அமரர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி. அவர்களைக் கனிவுடன் இன்று நினைவுகூருவதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

மட்டக்களப்பில் உதயம் என்ற சஞ்சிகையை 1947ஆம் ஆண்டில் நான் வெளியிட்டபோது ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்களுக்கும் எனக்கும் நட்பு ஏற்பட்டது. பிரசுரத்துக்கு ஒரு கவிதையைத் தந்தார். பின்னர் அக்கரைப்பற்றில் கூட்டுறவுத்துறையில் வட்டாரப் பரிசோதகராகப் பணியாற்றிய காலையில் கவிஞர் ஈழமேகத்துடனான தொடர்பும் பிணிப்பும் நெருக்கமாயின. அடிக்கடி அளவளாவி உவகை கொண்டோம்.

ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்கள் பாடசாலையின் அதிபராக இருந்து ஆற்றிய சேவை அளப்பரியது. அதைவிட மேலானது நாடு போற்றும் ஒரு நல்ல கவிஞராக தமிழ் மொழிக்கும், தமிழர் இஸ்லாமியர் சமுதாய மேம்பாட்டுக்கும் அவர் செய்த இலக்கியப் பணியாகும்.

ஆற்றல் நிறைந்த மேடைப் பேச்சாளரான அவர், இந்தியாவில் அறிஞர் அண்ணாவின் முன்னிலையில் சொற்பெருக்காற்றும் வாய்ப்பு ஒருகால் அவருக்குக் கிடைத்தது. ஈழமேகம் என்று அண்ணா அவர்கள் திருவாயால் பாராட்டிப்பட்டம் பெற்றவர் கவிஞர் பக்கீர்த்தம்பி மேகம் பொழிவது போல் நீரோட்டமாகப் பேசும் திறன் அவருக்கு ஈழமேகம் என்ற பட்டத்தை ஈட்டிக் கொடுத்தது. இது இலங்கையர் ஒருவர் நாட்டுக்குத் தேடித்தந்த கௌரவமாகும். கவிஞர் ஈழமேகத்தின் உயிரோட்டமான கவிதைகள் பல தொகுதிகளாக வெளிவரவேண்டும். அந்தப் பெரும்பணியை அவர் பிறந்த கிராமத்துச் செல்வந்தர்களும், அவரிடம் கல்வி கற்ற மாணவர்களும் நிறைவேற்றி வைக்கவேண்டும் என்பதே என் அபிலாஷையாகும்.

அவர் ஞாபகார்த்தமாக ஒரு நினைவுமலரை வெளியிட முன்வந் திருக்கும் அவருடைய மருகர் ஜனாப் யூ.எல். அலியார் எம்.ஏ. அவர் களை மிகவும் பாராட்டுகிறேன்.

**எஸ்.டி. சிவநாயகம்**
நூலாசிரியரும் பத்திரிகையாளரும்
10-07-99

# ஆற்றல் வாய்ந்த அற்புதக் கலைஞர்

ஈழமேகம் பக்கீர்த்தம்பி ஆசிரியர் அவர்களை ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அனைவரும் அறிவார்கள். எழுத்தாளர்கள், கவிஞர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் அனைவரும் அவரை அறிவார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் மாணிக்க கவிதைகள் படைத்த சிறந்த கவிஞர் அவர். இலங்கையில் அவர் கவிதைகள் வெளிவராத பத்திரிகைகள் இல்லையென்று சொல்லலாம். ஏன் இந்தியாவிலும் தமிழகத்தின் பத்திரிகைகள் அவர் கவிதைகளை வெளியிட்டிருக்கின்றன. எளிய சொற்களை கவிதைகளில் பதித்து அவற்றுக்கு எழில் வடிவம் தந்தவர். வயற்புற உழவர்களின் வாய்ச்சொற்களுக்கு வண்ணக் கவிதைகள் படைத்தவர். வயற்பரப்பில் நெல் அடிக்கும் மங்கையர்கள், உரல் இடிக்கும் வாலைக்குமரிகள், அம்மியில் அரைக்கும் அழகு மங்கையர்களின் அன்றாட பேச்சுத் தமிழை அவர் கவிதைகளில் அலங்கரித்த அழகு! அப்பப்பா!இன்று நினைத்தாலும் நெஞ்சு இனிக்கின்றது. அவரோடு பழகியவர்கள் அவரை எளிதில் மறக்கமாட்டார்கள். அவர் அடக்கமும், பணிவும் அவரோடு நட்புறவு கொள்ள அனைவரையும் தூண்டும். அழகான அவர் சிரிப்பு என் கண்ணில் இன்னும் தெரிகின்றது. பாட்டெழுத நேரங்காலம் என்று காத்திராது ஓடுகின்ற பஸ்களிலும், உயர் கவிதை வடிக்கும் ஆற்றல் வாய்ந்த அற்புதக் கவிஞர் ஈழமேகம் அவர்கள். அவர் கவிதைகள் நூல் வடிவம் பெறவேண்டும் என்பது என் ஆசை. என் வாழ்க்கையில் மறக்க முடியாத இனிய நண்பர்களில் ஒருவர் ஈழமேகம்.

**செ.இராசதுரை**
மட்டுநகர் முன்னாள் முதல்வரும்
முன்னாள் பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சரும்
10-12-1999

இது உங்கள் நூல்

# இனிய நண்பர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி

கிழக்கிலங்கையின் முடிசூடா மன்னராக திகழ்ந்து திறமை யான பேச்சுவன்மையாலும், எழுத்து வன்மையாலும், இயற்கையில் சிறந்த கவி ஆற்றலாலும் ஒருங்குசேர உவமைக்கோர் எடுத்துக் காட்டாக, திறமைசாலியாக விளங்கிய ஓர் இனிய நண்பர் தான் நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்கள்.

கவிஞர் திலகமான அவர்கள் இலங்கையிலும், இந்தியாவிலும் தமது ஆற்றலை வெளிப்படுத்தி பட்டம் பல பெற்று கிழக்கிலங்கைக் குப் பெருமை தேடித்தந்தவர்.

திருமலை மாவட்டத்தில் குறிப்பாக கிண்ணியா, மூதூர், தோப்பூர் போன்ற இடங்களுக்கு அடிக்கடி விஜயம் செய்து மக்கள் விழிப்புணர்வு பெறவேண்டுமென அயராது பாடுபட்டவர். இஸ்லாமிய உணர்வுடன் நாளும் பொழுதும் சிந்தித்துச் செயலாற்றிய அன்னாருக்கு அவர் சாதனைகளை நினைவு கூரும் நூல் வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இப்பெரியாருக்கும் எனக்குமுள்ள அந்தநாள் தொடர்பை என்றுமே மறக்கமுடியாது.

நினைவுகூரும் அன்பர்கள், அபிமானிகள் அனைவருக்கும் நன்றியும் சலாமும் உரித்தாகட்டும்.

**அல்ஹாஜ் எம்.ஈ.எச். முகம்மதலி**
முன்னாள் மூதூர் முதல்வரும், முன்னாள்
மாலைத்தீவுக்கான இலங்கைத்தூதுவரும்
01-09-1999

## நாவலர் ஈழமேகம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

**இளமை**

இயற்பெயர் பக்கீர்த்தம்பி

தந்தை முகம்மது இஸ்மாலெவ்வை வட்டை (நெற்காணி) விதானையாகக் கடமையாற்றியவர். இவரது மூதாதையர் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள். ஊரில் செல்வாக்குடன் வாழ்ந்தவர்.

தாய் - பாத்திமா

இலக்கியமும் இஸ்லாமிய ஞானமும் வாய்க்கப் பெற்ற பெண்மணி.

பிறந்த திகதி - 06-05-1923

பிறந்த ஊர்- சம்மாந்துறை

**கல்வி**

ஆரம்பக்கல்வி- சம்மாந்துறை மெதடிஸ்த மிஷன் பாடசாலை (தற்போது தாறுல் உலூம் வித்தியாலயம்)

இடைநிலைக்கல்வி - அட்டாளைச்சேனை சாதனா பாடசாலை (S.S.C வரை)

ஆசிரியர் பயிற்சி - அட்/ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை. 1945-1946

ஆசிரியராக முதல் நியமனம்- 01-02-1947

முதலாவது பாடசாலை - காத்தான்குடி அ.மு.க பாடசாலை தொடர்ந்து

01-04-1948 சம்மாந்துறை ஆண்கள் பாடசாலை

20-01-1953 சம்மாந்துறை கனிட்ட பாடசாலை

01-07-1956 மல்கம்பிட்டி அ.மு.க.பா (அதிபராக)

01-01-1962 சின்னக்கிண்ணியா அ. மு. க. பா.

01-05-1964 குச்சவெளி அ.மு.க.பா

05-07-1965 அல்லை அ. மு. க. பா.

01-02-1966 பெரிய பாலம் - மூதூர் அ.மு.க.பா

01-07-1968 அல்லை அ.மு.க.பா

07-07-1970 சம்மாந்துறை தாறுல் உலூம் வித்தி.

05-05-1983 ஓய்வு பெறல்

குடும்பம் - விவாகம் 17-10-1949

மனைவி - ஸீனத்தும்மா

பிள்ளைகள் - பௌஸியா (ஆசிரியை).

அப்துல் நஸீர் ( டாக்டர்)

ஜமீல் (தபால் அதிபர்)

அப்துல் றாசிக்(விற்பனைப் பிரதிநிதி)

## கலை இலக்கிய ஈடுபாடு

1) இளவயதிலிருந்தே தமிழார்வம் மிக்கவர். அபார பேச்சுத்திறனும் இலக்கியத்தில் ஈடுபாடும் மிக்கவர். சமூகத்தில் புரையோடிக்கிடந்த மூடக்கொள்கைகள், அநீதி, அக்கிரமங்களுக்கெதிராக பேசியும் எழுதியும் வந்தார். **தயாளன், புரட்சி நேசன்** போன்ற புனைபெயர்களில் இவரது எழுச்சிக் கருத்துக்கள் வெளிவந்தன.

2) தேசிய ரீதியில் அவரது இலக்கிய ஆர்வம், கலைத்திறன், கவித்திறன், தமிழ்ப்பற்று என்பன வெளிவருவதற்குக் காரணமாக இருந்த களம் அவர் உருவாக்கிப் போஷித்துவந்த சம்மாந்துறை **கலாபிவிருத்திக் கழகமாகும்.** சமூகப்பற்றும், கலைஞானமும், இலக்கிய ஈடுபாடும் கொண்ட தம்மாணவர்களையும் மற்றவர்களையும் ஒன்றிணைத்து அவர் இக்கழகத்தை அமைத்தார். இக்கழகம் கலை விருத்தியையும், சமூக சீர்திருத்தத்தையும் நோக்கமாகக் கொண்டது. இந்நோக்கத்துக்காக இளைஞர்களால் உருவாக்கப்பட்ட சம்மாந்துறையின் முதற்கழகம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இக்கழகத்தால் 1963 இல் வெளியிடப்பட்ட **அறவழிக்கீதம்** சமூக சீர்திருத்தக்கருத்துக்களைக் கொண்ட கவிதைத் தொகுதியாகும். அவரது நெறிப்படுத்தலில் நாடறிந்த நாவலர்களும், பாவலர்களும், கவிஞர்களும், கலைஞர்களும் உருவானார்கள். பாடசாலைகள் தோறும் பேச்சுப்போட்டி என்றும், நாடகங்கள் என்றும் கட்டுரைப்போட்டிகள் என்றும் களைகட்டின. 'கம்பன் வீட்டுக்கட்டுத் தறியும் கவி பாடும்' என்ற வார்த்தைக்கொப்ப பாடசாலையில் பயிலும் மாணவர்களும் இளம் ஆசிரியர்களும் கவிஞர்களாகவும், பேச்சாளர்களாகவும் தம்மை வளர்த்துக் கொள்வதற்கு பக்கீர்த்தம்பி ஆசிரியர் ஊட்டிய ஞானமும், காட்டிய நெறியும் உரமாய் அமைந்தன எனில் மிகையாகாது.அவர் தம் தாயகத்தில் மட்டுமன்றி தாம் கல்விச் சேவையாற்றிய பிற ஊர்களிலும் உருவாக்கிய இலக்கியப் பரம்பரையே பிற்காலத்தில் ஈழத்து இலக்கிய வானில் பிரகாசித்தது எனலாம்.கலாபிவிருத்திக் கழகத்தின் **கலாபாசம்** என்ற சஞ்சிகையும் அன்று அன்னாரின் நெறிப்படுத்தலில் வெளிவந்ததாகும். பாவலர் பஸீல் காரியப்பர், யூ. செயின், ஏ.எச்.எம்.அப்துல்லா, யூ.எம்.முஸ்தபா, எஸ்.வேலாயுதன் போன்ற கவிஞர்களும், கலைஞர்களும் பக்கீர்த்தம்பியின் பக்திமிக்க மாணவர்களாவர். பிற்காலத்தில் ஈழக்குயில் இத்ரீஸ், வீ.ஆனந்தன் போன்றோர் பற்றுமிக்க சீடர்களாக இலக்கிய மாணவர்களாக தமது ஆக்கங்களை வெளிப்படுத்தினர்.

3) நாடறிந்த பேச்சாளராக அவரை அடையாளப்படுத்திய சந்தர்ப்பம் 1952 இல் கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை பேச்சுப்

போட்டியாகும்.இலங்கை முஸ்லிம் லீக் செனட், முஹர்ரம் புத்தாண்டு நினைவாக நடாத்திய இப் பேச்சுப் போட்டியில் இவர் முதலிடத்தைப் பெற்றார். கொழும்பு சாஹிறா கல்லூரி கபூர் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவின்போது அன்றைய அமைச்சர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவினால் தங்கப் பதக்கம் சூடப்பெற்றார். இப்பதக்கத்தை அல்ஹாஜ் பளீல் ஏ கபூர் அன்பளிப்புச் செய்திருந்தார்.

4) மேற்படி நிகழ்வினைத் தொடர்ந்து இறையருள் பெற்ற சிறந்த மேடைப்பேச்சாளராக,கவிஞராக, இஸ்லாமிய மார்க்கப் பிரசங்கி-யாக விளங்கியதால் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் அழைப்புக்களை ஏற்றார். சமகாலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாக்களோ, கூட்டங்களோ, மேடைகளோ ஈழமேகம் பக்கீர்த்-தம்பியின் உரையின்றி நிறைவுறாது என்ற அளவுக்கு அவரது ஜனரஞ்சகம் உச்ச நிலையிலிருந்தது. அவரை அழையாத கிராமங்களே கிடையாது என்று கூடக் குறிப்பிடலாம். குறிப்பாக மீலாத் மேடைகள் இவரது வரவுக்காக சன சமுத்திரத்-தினால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். நாவலரின் உரை நடுநிசியில் அமையி-னும் அதுவரை தூக்கமின்றி அபிமானிகள் கூட்டம் காத்திருக்கும். இலங்கை வானொலியின் நற்சிந்தனைகள், இஸ்லாமியப் பேச்சுக்கள், கவியரங்குகள் என்பவற்றில் இவருக்கு முதன்மை இடம் அளிக்கப்பட்டது. இலங்கை வானொலியில் இஸ்லாமிய நற்சிந்தனை வழங்கிய முன்னோடி அறிஞர்களில் இவரும் ஒருவர். இவர் நிகழ்த்திய நற்சிந்தனைகள் மீள் ஒலிபரப்புச் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. மேடையில் ஏறி நாவை அசைத்தால் போதும். பேச்சுக்கள், கவிதையுடன் கலந்து, நாட்டியல் வழக்குடன் குழைந்து சிம்மக்குரலென வெடித்து சோணாமாரியாகச் சொரிந்து கொண்டிருக்கும். அவற்றில் அறிவுக்கு விருந்திருக்கும். தேடலுக்குத் திரவியமிருக்கும். செவிக்கு நல் இதமிருக்கும். உணர்வுக்கு உயிர் ஊட்டும் உந்தல் இருக்கும். தமிழ் அன்னைக்கு அணி சேர்க்கும் அலங்காரமிருக்கும். சுவைப்ப-தற்கும் நல்ல நகையிருக்கும். பார்த்து ரசிப்பதற்கும் நல்ல பக்குவமிருக்கும். மனித நேயம் மலிந்திருக்கும். மொத்தத்தில் நல்ல படிப்பினையிருக்கும். இப்பண்புகளால் ஈர்க்கப்பட்ட அபிமானிகள், அறிஞர் பெருமக்கள் உரையுண்டு மகிழ அன்னாருக்கு அழைப்பு விடுத்துக் கொண்டேயிருந்தனர்.

5) ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தெட்டில் மட்டுநகரில் ஒரு மீலாத் விழா. மட்டக்களப்பு வர்த்தகர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இவ்விழாவுக்கு சிறப்புச் சொற்பொழிவாற்ற இறையருட்கவிமணி பேராசிரியர் கா. அப்துல் கபூர் எம். ஏ. தமிழகத்திலிருந்து அழைக்கப்-பட்டிருந்தார். முற்றத்து மல்லிகையாக பக்கீர்த்தம்பிக்கும் அழைப்பு.

பேராசிரியரும் வாத்தியாரும் சமமாவரா? முடிவு, வாலை வாருதிக்கு முன் உமறுப்பிள்ளையின் நிலைதான். பக்கீர்த்தம்பியின் சொற்பொழிவைக் கேட்டு பேராசிரியர் பிரமித்துப்போனார். இத்தகைய ஆற்றல் வாய்க்கப் பெற்ற ஒருவர் இலங்கையில் இருப்பது குறித்து அதிசயித்தார். இந்த நிகழ்வு தமிழக மீலாத் மேடைகளில் பேச இலங்கை-யிலிருந்து அறிஞரை அழைக்கும் வழமைக்குக் கால்கோளாயமைந்தது. பேராசிரியர் பக்கீர்த்தம்பிக்குப் பகிரங்கமாகவே அழைப்பு விடுத்தார்.

6) ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தோராம் ஆண்டில் தமிழகக் கலைஞர்கள், அறிஞர்கள், அபிமானிகளின் அழைப்பை ஏற்று அறிஞர் பக்கீர்த்தம்பி தமிழ் நாடு பயணமானார். அங்கு சென்னை, காயல் பட்டணம், அதிராம்பட்டினம், திருச்சி, கீழக்கரை, நாகூர், வேலூர்,மதுரை போன்ற இடங்களில் ஏற்பாடு செய்யப்- பட்டிருந்த நூற்றுக்கணக்கான மீலாத் மேடைகளிலும், இலக்கிய மன்றங்களிலும், ஆய்வரங்குகளிலும், கவியரங்கு- களிலும் கலந்து தன் ஆற்றலை வெளிப்படுத்தினார். ஒரு சந்தர்ப்பத்தில் அறிஞர் அண்ணாத்துரையுடன் ஒரே மேடையில் பிரசன்னமானார். பக்கீர்த்தம்பியின் சொற்பெருக்கு அண்ணாவைக் கவர்ந்தது. காளமேகத்தின் சாயலில் கவிமழையும் இடையிடையே பெய்து சொற்பெருக்காற்றிய சிறப்பு அண்ணாவுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. *ஈழ நாட்டிலிருந்து வருகை தந்திருக்கும்* ***ஈழமேகமே*** என வாயாரப் புகழ்ந்தார். இது முதற்கொண்டு பக்கீர்த்தம்பி ஈழமேகமானார்.

7) தாயகம் மீண்ட அன்னாரை அவரது இலக்கிய மாணாக்கர் பரம்பரையும் ஆசிரியர் சமூகமும் இணைந்து வரவேற்று வாழ்த்திய-தோடு பொன்னாடை போர்த்தி கௌரவித்தது.மேலும் அவரது மேடைப்பேச்சுக்கள், வானொலிப் பேச்சுக்கள், பத்திரிகைக் கட்டுரைகள் ஆகியவற்றைத் திரட்டி **உரைமலர்** எனும் நூலை கலாபிவிருத்திக்கழகம் வெளியிட்டது.

8) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்து மூன்றில் சம்மாந்துறை எழுத்தாளர் சங்கம் அவருக்குப்பொன்விழா எடுத்துப் பொன்னாடை போர்த்தி பொற்கிளி வழங்கி கௌரவித்தது.

9) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்து ஐந்தில் இலங்கை சாகித்திய மண்டலம் அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்த தோடு **புலவர் நாயகம்** என விருதும் வழங்கியது.

10) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டு ஜனவரியில் தமிழ் நாடு காயல் பட்டணத்தில் நடை பெற்ற மூன்றாவது உலக இஸ்லாமிய தமிழாராய்ச்சி மாநாட்டில் அறிவியற்றுறையில்

முஸ்லிம்கள் ஆற்றிய அரும்பணி என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்ததோடு கவியரங்கு நிகழ்வில் கவிமழை பொழிந்து பாராட்டைப்பெற்றார். இதற்காக தாயகம் மீண்ட அவருக்கு சம்மாந்துறை ஆசிரியர் சங்கம் **கவித்துவம் பெற்ற காயல்மேகம்** எனும் பட்டம் வழங்கியது.

11) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து மூன்றில் சம்மாந்துறைப் பொதுமக்கள் பல்வேறு கழகங்கள் ஒன்றிணைந்து அவருக்கு வைரவிழா எடுத்தது. இவ்விழாவில் அவருக்கு **நாவலர்** பட்டம் வழங்கப்பட்டது. அறிஞர் பெருமக்கள், அரசியல் தலைவர்கள், எழுத்தாளர்கள் கூடியிருந்த பேரவையில் இவ்விருதினை முன்மொழிந்தவர் புலவர்மணி ஆமு.ஷரிபுத்தீன். வழிமொழிந்து வாழ்த்தியவர். வித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராசா அவர்களாவார். நாவலரின் கவிதைத்தொகுதியான **மழையும் துளிகளும்** நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூல் வெளியீட்டின் முழுப்பொறுப்பையும் சம்மாந்துறைப்பற்று ப.நோ.கூ. சங்கம் ஏற்றிருந்தது.

12) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து இரண்டாம் ஆண்டிலிருந்து மரணிக்கும் வரை அம்பாறை மாவட்ட இலக்கியப்பேரவை உறுப்பினராக இருந்து பணியாற்றினார்.

## எழுத்தாக்கங்கள்

1. உரைமலர் 1961
2. அறவழிக்கீதம் 1963.
   (சம்மாந்துறைக் கவிஞர்களின் சமூக சீர்திருத்தக் கவிதைகளின் தொகுப்பு)
3. மழையும் துளிகளும் 1983

## சமூக சேவையும் மனித நேயமும்

1) அவரது மனித நேயமிக்க நல்ல பண்புகள் எதிரியைக்கூட நாணயமடையச்செய்தன.தன்னை நொந்தவர்களைக்கூட மன்னித்து மனந்திறந்து பழகும் சுபாவமுடையவர். தீங்கு செய்தாரைக் கண்டிக்கும் அதேவேளை அவருடன் மனிதத்தன்மையுடன் பழகுவார். இதனால் எல்லோரும் இவர் பால் ஈர்க்கப்பட்டனர். மக்கள் மத்தியில் ஏற்படும் பிணக்குகளுக்கு சமாதானத்தீர்வு பெற மக்கள் இவரை நாடி வருவர். இதன் பேறாகவோ என்னவோ 1983இல் இவருக்கு **சமாதான நீதவான்** (ஜே.பீ) பட்டம்



இது உங்கள் நூல் ... வைத்திருக்கவும்

வழங்கப்பட்டது. இது கிடைக்கப்பெற்ற பின்னர் நேரம் காலம் பாராது மக்கள் இவரை நாடினர். ஊரில் சமய ரீதியான அபிப்பிராய பேதம் ஏற்பட்டு பெரும் பிளவு ஏற்படவிருந்த ஒரு சூழ்நிலையில் இவரது அயராத உழைப்பினால் அது தவிர்க்கப்பட்டு அனைவரும் சமாதானமானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இனங்களிடையே நல்லுறவு பேணுவதிலும் இவர் முன்னின்றார். தமிழ் அறிஞர் என்ற வகையில் இந்துக்களும் இவரை மதித்தனர். அவர்களின் விழாக்களிலும் இவர் பங்கு கொண்டு இலக்கிய மணம் வீசினார்.

2) அரசியலில் தமக்கென ஒரு கோட்பாட்டைக் கொண்டிருந்த போதிலும் அதில் தீவிர ஈடுபாடு காட்டாதவாறு மனிதநேயம் அவரை ஆட்கொண்டிருந்தது. எனினும் அரசியல்வாதிகள் தமக்கு ஆதரவு தேடும் மேடைகளில் ஈழமேகத்தைப் பயன்படுத்- துவதில் கண்ணும் கருத்துமாயிருந்தனர். ஒரே நாளில் இரு எதிரணி மேடைகளில் தரிசனம் தந்து தனது ஜனரஞ்சகப் பேச்சால் மக்களைக் கவர்ந்தார். குறிப்பிட்ட ஒரு கட்சிக்கெனத் தன் ஆற்றலை முடக்காத ஓர் அதிசயப் பிறவியாக அவர் விளங்கினார். அழைப்பை கௌரவிக்கும் அரிய மனித நேய நற்பண்பு அவரிடம் மேலோங்கியிருந்தது. இதனை உணராத அவரது அபிமான மாணவர்களே எதிரணி மேடைகளிலிருந்து தனிப்பட்ட முறையில் அவரைத்தூஷித்ததுமுண்டு. கள்ளங்கபடமில்லாத வெள்ளை உள்ளம் கொண்ட அன்னார் சில சந்தர்ப்பங்களில் அரசியல் வாதிகளின் துன்புறுத்தல்களுக்கு உள்ளானதுமுண்டு. சொந்த ஊரிலிருந்து மூதூர் பகுதிக்கு இடமாற்றமும் மூதூரிலேயே பல இடமாற்றங்களும் இவருக்கு வழங்கப்பட்டன. அவர்களின் அரசியல் மணக்க கறிவேப்பிலையாகத் தம்மை அர்ப்பணித்த கவிஞருக்கு அது உப்பாகக் கூடப் பயன்படவில்லை. இக்கசப்பான அனுபவங்க- ளின் போதுகூட அவரது மனிதநேயப்பண்புகளே மேலோங்கியிருந்தது. மட்டு நகர் முன்னாள் முதல்வர் திரு.செ. இராசதுரையுடன் கொண்டிருந்த தொடர்பு அரசியலுக்கு அப்பாலானதாக இருந்தது. இலக்கியத்தொடர்பு அவர்களைப் பிணைத்தி-ருந்தது. அண்ணன்தம்பி உறவு அவர்களிடம் காணப்பட்டது. தான் அமைச்சராக இருந்த- போதிலும் அடிக்கடி அழைப்பு விடுத்து அரவணைத்தார். தமது மொழி இலக்கிய முயற்சிகள் பற்றிக்கலந்-துரையாடினார். இது போன்ற நெருங்கிய உறவு முன்னாள் மூதூர் முதல்வர் ஜனாப் எம்.ஈ.எச்.முஹம்மது அலியுடனும் இருந்தது. இவ்வுறவுகள் அரசியலுக்கு அப்பாற் பட்டவையாக விளங்கின.

3) இலக்கியப்பணிகளுடன் சமயப்பணிகளிலும் பங்கு கொண்டார் ஈழமேகம். 1973 இல் உருவான சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் நிர்வாகப் பேரவையில் ஆரம்ப உறுப்பினராக இருந்து இறுதி வரை அதன் அபிவிருத்திக்காக உழைத்தார்.

4) மாணவர் மத்தியில் பேச்சாற்றலை வளர்க்கும் வகையில் பேச்சுக்களை எழுதியும் நெறிப்படுத்தியும் வந்ததோடு கவிதை எழுதும் ஆர்வமுடைய மாணவர்க்கு வழிகாட்டியாகவிருந்து உதவினார். மேலும் இளங்கவிஞர்களின் கவிதைகள் பத்திரிகையில் வெளிவர அறிமுகமும் செய்தார்.

5) ஓய்வு பெற்ற பின் கல்முனை அல்ஹாமியா அரபுக்கலாசாலையின் போதனாசிரியராக இருந்து தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்பித்து வந்ததோடு மாணவர் ஒழுக்க மேம்பாட்டுக்கும் பணிபுரிந்தார்.

## பிரமுகர்கள் தொடர்பு

தனது சொல்லாற்றல், எழுத்தாற்றல், இனிமையான சுபாவம் என்பவற்றினால் கவரப்பட்ட பலர் ஈழமேகத்தின் அபிமானிகளாகவும் நண்பர்களாகவும், அன்பர்களாகவும் ஆனார்கள். இலங்கையின் பல பாகங்களிலும் தொடர்பு வைத்திருந்தனர்.தமிழகத்திலும் பலர் நண்பர்களானார்கள். இவர்களைப் பலவாறு வகைப்படுத்தலாம்.

1. தமிழ்அறிஞர்கள்
2. அரசியல் பிரமுகர்கள்
3. எழுத்தாளர்கள்
4. இலக்கிய ஆர்வலர்கள்
5. இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் ஆகியோர்

தமிழகத்தில் அறிஞர் அண்ணாத்துரை முதற்கொண்டு பேராசிரியர் கா. அப்துல் கபூர், பேராசிரியர் ஆ.கா.அ.அப்துஸ்ஸமது, மௌலவி எம். அப்துல் வஹாப், திருச்சி குலாம் றசூல், அல்ஹாபிஸ் செய்யது அகமது, காயல் மௌலவி முகம்மது ஹுஸன், பேராசிரியர் சி.நெய்னார் முஹம்மது போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது.

இலங்கையைப் பொறுத்தவரையில் முன்னாள் மட்டுநகர் முதல்வர் திரு.செல்லையா இராசதுரை அவர் அரசியலில் பிரவேசிப்பதற்கு முன்பிருந்தே மேடைப் பேச்சுக்களால் நாவலருடன் பிணைப்புற்றிருந்தார். இந்த உறவு அவர் பிரதேச அபிவிருத்தி அமைச்சராக இருந்த போது மிக நெருக்கமாக இருந்தது. 4-8-81 இல் அமைச்சர் ஈழமேகத்துக்கு எழுதிய ஒரு கடிதத்தில் இந்த உறவை உறுதிப் படுத்தியிருந்தார். *'எத்தனையோ ஆண்டுகள் எண்ணங்களால் இலட்சியக கனவுகளால், கவிதை உணர்வுகளால் நாம் பிணைக்கப்பட்டிருந்தோம்.*

அம்பாறை மாவட்ட ... சம்மாந்துறை பிரதேச சபை

*இன்று நேற்று ஏற்பட்டதல்ல இந்தப் பிணைப்பு'* குறிப்பிடத்தக்க மற்றுமோர் பிரமுகர் மூதூரின் முன்னாள் முதல்வர் ஜனாப் எம்.ஈ.எச். முஹம்மதலி இவர்களிடையே இருந்த பிணைப்பு, மனிதாபிமானம், சகோதர பாசம் *'எனக்கு ஆலோசகராகவும் அனுதாபியாகவும் இருந்து பல உதவிகள் புரிந்த பெருமகன்'* என அவரது அனுதாபக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். ஈழமேகத்தின் பன்முகப் பண்புகளால் ஈர்க்கப்பட்டதன் பேரில் நெருங்கிய தொடர்புகள் வைத்திருந்த பிரமுகர்கள், இலக்கிய ஆர்வலர்கள் அறிஞர்கள் ஏராளமானவர்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பின்வருவோராவர். முன்னாள் அமைச்சர் கௌரவ எம்.ஏ.அப்துல் மஜீது, முன்னாள் அமைச்சர் கௌரவ எம்.எம். முஸ்தபா, முன்னாள் அமைச்சர் கௌரவ ஏ.ஆர். மன்சூர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கேட்முதலியார் எம்.எஸ். காரியப்பர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.எம். ஜலால்தீன், அமைச்சர் கௌரவ எம்.எச்.எம்.அஷ்ரப், மர்ஹூம் எம்.எம். அப்துல் காதர் (நீதிபதி), மர்ஹூம் எம்.ஏ.எம். ஹுசைன் (மாவட்ட நீதிபதி), ஜனாப் அலாவுதீன் (நீதவான்), ஜனாப் ஓ.எல்.எம். இஸ்மாயில் (சட்டத்தரணி), புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன், கவிஞர் அப்துல் காதர் லெப்பை, பேராசிரியர் எம்.எம்.உவைஸ், பண்டிதர் வி.சி. கந்தையா, வித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராசா, இளம்பிறை றஹ்மான், அண்ணல் சாலிஹ், கவிஞர் நீலாவணண், அ.ஸ. அப்துஸ் ஸமது, மருதூர்க்கொத்தன், திருவாளர் ஆர். சிவகுரு நாதன், திருவாளர் எஸ்.டி. சிவநாயகம், கவிஞர் அன்பு முகையதீன், பித்தன் ஷா, பேராசிரியர் சு.வித்தியானந்தன், மௌலவி சலாஹுத்தீன், மௌலவி ஏ.எம். மருத் ஆலிம், தோப்பூர் அப்துர் றஹ்மான் மௌலவி, அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல், ஹாஜி உஸ்மான் சாஹிபு, கவிஞர் ஏ. இக்பால், கவிஞர் பாண்டியூரன், கவிஞர் பஸீல் காரியப்பர் கலாநிதி நு்.மான், கவிஞர் யுவன் மருதூர் வாணண் போன்றோர் ஆவர். கவிஞர் ஈழமேகத்தின் கவிதை ஆற்றலால் வழிகாட்டலால் வளர்ந்த எத்தனையோ இளங்கவிஞர்களும் இலக்கியவாதிகளும், பத்திரிகையாளர்களும் அபிமானத்தோடு இன்னும் தமது குருவை நினைவு கூருகின்றனர்.

நாவலர் ஈழமேகம் இறையடி எய்தியபோது வெளிவந்த இரங்கற்பிரசுரங்களும் அனுதாபச் செய்திகளும் பத்திரிகைகளில் வெளிவந்த ஏராளமான செய்திகளும், கவிதைகளும், கட்டுரைகளும் நிகழ்வுற்ற இரங்கற்கூட்டங்களும் எண்ணில் அடங்காதன. இவை நாவலரின் அபிமானிகள், ஆர்வலர்கள் இலங்கையின் மூலைமுடுக்கெல்லாம் இருந்துள்ளனர் என்பதையே எடுத்துக்காட்டியது. தனியொரு மகனுக்கு கிடைத்த இந்த அளவு அனுதாபமும் அபிமானமும் உண்மையில் அவர் சம்பாதித்த மனித நேயத்தின் பரிமாணத்தையே காட்டியது. இங்கே துயில்கின்ற வசந்தத்தை தரிசித்தோம்!

## ஆன்மீகத்துறை:

ஒரு பேச்சாளராகப் பிரபல்யம் பெற்ற காலத்திலிருந்து அவா மக்கள் மத்தியில் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தும் வழக்கத்தையும் கொண்டிருந்தார்.தாம் செல்லும் வெளியூர்களிலும்கூட பள்ளிவாசலில் தொழுகையைத் தொடர்ந்து இஸ்லாமிய வாழ்க்கை முறைபற்றி மக்கள் மத்தியில் சிந்தையையும் செவியையும் கவரும் வித்தில் எடுத்துக் கூறுவார். சமூகத்தில் காணப்பட்ட தீனுக்கு மாற்றமான நடத்தைகள் குறித்து கண்டித்தும் வந்தார். அந்திம காலங்களில் தமது ஓய்வு நேரத்தை புனிதை குர்ஆனைப் பாராயனம் பண்ணுவதிலேயே கழித்தார். தாம் செல்லுமிடமெல்லாம் குர்ஆனைச் சுமந்து செல்வார்.மரணம் எய்தும்போது இவர் 10 ஜுஸ்உக்களை மனனம் செய்திருந்த செய்தி மரணத்தின் பின்னரேயே மனனத்தைச் சரிபார்த்த ஹாபிஸ் ஒருவரால் வெளியிடப்பட்டது. அவரது நடை உடை பாவனை அத்தனையும் இஸ்லாமிய ஆசாரப்படியே அமைந்திருந்தன.

## இறையடி எய்தல்

நீண்ட காலமாக இரத்த அழுத்த நோயால் பீடிக்கப்பட்டிருந்தார். மேடைப்பிரசங்கங்களை குறைத்துக்கொள்ளுமாறு வைத்திய ஆலோசனை இருந்தும் மீலாத் காலங்களில் தம்மை அறியாமலேயே ஓர் உந்தல் அவரை மேடைகளுக்கு அழைத்துச் சென்றது. 17-03-85ம் நாள் திங்கட்கிழமை காலை தனது வீட்டிலிருந்து மகளிடம் விடை பெற்றுக்கொண்டு பதுளை பயணமானார். அங்கு படல்கும்புறை வைத்தியசாலையில் வைத்தியராக பணி புரிந்த தன் மகன் டாக்டர் நஸீரையும் அங்கு தங்கியிருந்த தன் மனைவியையும் பார்த்துவரவே அவர் புறப்பட்டார். அன்று மாலை வைத்தியசாலை விடுதியை அடைந்த சில கணப்பொழுதில் அவர் இறையடி சேர்ந்தார். நல்லடக்கம் மறுநாள் மாலை சம்மாந்துறை கைர் பள்ளிவாசல் மையவாடியில் நிகழ்ந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் ஜனாஸா நல்லடக்கத்தில் கலந்து அவரது ஆன்ம ஈடேற்றத்திற்காக பிரார்த்தனை புரிந்தனர்.

## பேரிழப்பு

சமகால இலங்கை எழுத்தாளர், கவிஞர், பேச்சாளர் மத்தியில் தனித்துவமாக பிரகாசித்த ஒரு கலைஞர், அறிஞர், மனிதப்புனிதராக வாழ்ந்த ஈழமேகம் பக்கீர்த்தம்பியின் மறைவு புதிய தலைமுறைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். சமகாலத்தில் துடிப்புள்ள இளைஞர் மத்தியில் இலக்கிய ஆர்வத்தை ஊட்டி இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்திய



இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்

ஒரு தந்தையாக, சகோதரனாக, நண்பனாக, நல்லாசானாக, நல்ல மனிதராக நாவலர் விளங்கினார்.

## சுவடுகள்

ஈழமேகம் இவ்வுலக வாழ்வை நீத்தாலும் அவர் இன்னும் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். நீங்காத நினைவுகளாக பல சுவடுகளை அவர் விட்டுச்சென்றுள்ளார். அவை,

- எழுத்தில் வடித்துள்ள மூன்று நூல்கள்
- வானொலி உரைப்பதிவுகள்
- பத்திரிகை ஆக்கங்கள்

தவிர, அவரது பேச்சுப்பாணி இன்றும் மக்களால் பின்பற்றப் படுகின்றன. சீறாச்செய்யுளைத்தழுவிய அவையடக்கப்பாடல் அவருக்கே உரிய தனித்துவமாகும். கவிதையும் பாடலும் உரையும் கலந்த நடை, நாடக பாணியில் அமைந்த பேச்சு நடை என்பன அவரை எம்மனக்கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றன. மீலாத் மேடைகளில் மெய் சிலிர்க்க வைக்கும் அவரது உரையும் வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் நகைத்துணுக்குகளும் மறக்கொணாதவை. குறிப்பாக இராக்காலங்களில் அவர்பயன்படுத்தும் தொடர் 'மாதமோ சித்திரை, நேரமோ பத்தரை நீங்களோ நித்திரை.......' இன்றும் பாமரர் வாயிலும் பயின்று கொண்டிருக்கின்றது.

## அறிஞர் அண்ணாவினால் ஆரத் தழுவி பொன்னாடையும், புகழாரமும் சூட்டப்பட்ட, எனது இனிய நண்பர் "ஈழமேகம்"

**- ஹாஜி உஸ்மான் சாஹிப்**

பாடல் பெற்ற திருத்தலத்தைக் கொண்டிலங்கும் திருகோணமலையிலே 1960 களில் மீலாத் விழாக்கள் இலக்கியச் சந்திப்புகள், இனிய தமிழ் விழாக்கள், நூல் வெளியீட்டு வைபவங்கள் என்றால் அங்கே ஈழமேகத்தின் இடியோசை தப்பாமல் ஒலிக்கும்.

ஆம்! அந்தக்காலம் ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்கள் திருகோணமலைப் பகுதியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலம். திருமலை நகரிலிருந்து பல மைல்களுக்கப்பாலுள்ள கிண்ணியாவில் அவர் ஆசிரிய சேவையில் ஈடுபட்டிருந்தாலும், அம்மாவட்டம் முழுவதும் அவர் புகழ் கொடிகட்டிப்பறந்த வேளை அது.

நான் திருகோணமலை இந்துக்கல்லூரியில் படிப்பை முடித்துவிட்டு உயர் கல்வி பெற முயன்றுகொண்டிருந்த காலை. தமிழ் நாட்டில் அறிஞர் அண்ணா ஏற்படுத்திய எழுச்சிக்குரல் கேட்டு அதன் காரணமாக தி.மு.க.வில் இணைந்து எழுத்து, பேச்சுக்- கலைகளில் நான் ஆர்வம் காட்டிவந்த நேரம் அது.

அவ்வாறான கட்டத்தில் சிம்மக்குரலில் அல்லது வெண்கலக்குரலில் இடியோசை போன்று நாதமெழுப்பிடும் நம்மவர், நல்லவர் எம்மவர் ஈழமேகத்தின் தொடர்பு கிடைத்தால் எப்படியிருக்கும்?

இவ்வாறுதான் இனியவர் ஈழமேகத்திற்கும் எனக்கும் தொடர்பு ஏற்பட்டது. அப்புறம் எந்த மனிதரை நான் மதித்துப் போற்றி வந்தேனோ, அம்மனிதராகிய சி.என்.அண்ணாத்துரை, எனது இனிய நண்பருக்கு பொன்னாடை போர்த்தி, ஈழமேகம் எனப்பட்டம் சூட்டியபோது நான் பெரிதும் புளகாங்கிதம் அடைந்தேன்.

ஏன் இந்த நாடே பெருமைப்பட்டது!. மீலாத் விழாக்களிலும், விசேட கூட்டங்களிலும், மகாநாடுகளிலும் பிரதம உரை நிகழ்த்த பேச்சாளர்களை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருந்தவர்கள் நாம். இப்படிப்பட்ட ஒரு நிலையில், இந்த இலங்கைத் திருநாட்டிலிருந்து, இந்திய நாட்டிற்கு வரவழைக்கப்பட்டு, அங்கே பேரறிஞர் ஒருவரால் பாராட்டிப் பட்டம் சூட்டப்பட்டதென்றால், நாம் மட்டுமல்ல நமது நாடே பெருமைப்படுவதில் ஆச்சரியமில்லை!. அதிலும் அப்பெருமகன் எமது மண்ணின் மைந்தன் என்கிற போது! எமக்கெல்லாம் இறும்பூதெய்துகிறதல்லவா?

காலங்கள் உருண்டோடின, பின்னொரு சமயத்தில் நான் எனது பிறந்தகமான கல்முனையில் நிரந்தரமாகக் காலூன்றிய போது, சம்மாந்துறையிலிருந்து கல்முனைக்கு அவர் வரும்போதெல்லாம், என்னுடைய அலுவலகத்திற்கு வந்து, அளவளாவிச்செல்வது அவர் வழக்கமாக இருந்து வந்தது.

அதுமட்டுமல்லாமல் திருகோணமலையிலிருக்கும் காலத்தில் எனது அப்பாமார்களான மர்ஹூம்கள், சம்மாந்துறை டாக்டர் மீராலெவ்வை, யாசீன் வாவா வட்டவிதானை ஆகியோரது சுகதுக்கங்களை, இவர்மூலம் நான் அடிக்கடி அறிந்து கொள்ளவும், என்னுடைய சுகதுக்கங்களை அடிக்கடி அவர்கள் தெரிந்து கொள்ளவும் இவர் ஓர் இணைப்புப் பாலமாக விளங்கினார்.

தி.மு.க. விற்கு முழுக்குப் போட்டு விட்டு, நான் ஜமாஅத்தே இஸ்லாமியில் இணைந்து, தஃவாப்பணி புரிந்தகாலை என்னுடைய தலைமையில் அவரும்,அவருடைய தலைமையில் நானுமாகச் சொற்பொழிவுகள் நிகழ்த்திய நிகழ்வுகள் பலவுள.

1974ம் ஆண்டு என நினைக்கிறேன். அப்போதைய அரசாங்கம், ஹஜ்ஜுக்குச் செல்லும் யாத்திரிகர்களுக்குக் கட்டுப்பாடு விதித்தபோது அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டமும் பொதுக்கூட்டமும் கல்முனை பழைய பேருந்து நிலையத்தில் நடைபெற்றன. அக்கூட்டத்திற்கு நான் தலைமை தாங்க, நண்பர் ஈழமேகம் அவர்கள் இடியோசையாம் தன்னுடைய வெண்கலக்குரலில் முழக்கமிட்டார். அந்த ஓசையின் அலைகளானவை, இன்றும் என் செவிகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கின்றன. (அதன் பின்னர் சிறிது காலத்திற்குள்ளாக, அல்லாஹுத்தஆலா எமதுநாட்டு நிலைமையை மாற்றி, வசதி படைத்த அனைவரும் தங்கு தடையின்றி ஹஜ்ஜை நிறைவேற்றும் சூழலை ஏற்படுத்தினான். அல்ஹம்துலில்லாஹ்)

1979 என்று கருதுகின்றேன், சம்மாந்துறை மகளிர் வித்தியாலயத்தில், தோழர் 'ஈழமேகம் தலைமையில் நான் பேசினேன். அப்போது என்னை அவர் அறிமுகம் செய்த பாங்கு ஒரு தனி அலாதியானதாய் அமைந்திருந்தது.


நான் (இந்திய) தி.மு.க. விலிருந்து பின்னர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தொண்டனாக விளங்கிய வரலாற்றினை விபரித்து அதன் பிற்பாடு, இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியில் இணைந்து ஆற்றிவரும் பணிகளையிட்டும், ஈரான் இஸ்லாமியப் புரட்சிக்கு அளித்துவரும் பங்களிப்பினையிட்டும் அவர் சிலாகித்துக் கூறினார். உலக நாடுகளில் உருவாகிவரும் இஸ்லாமியப் புரட்சிகள்' என்னும் மகுடத்தில் நான் உரையாற்றினேன். அதன் இறுதியில் அவர் விதந்துரைத்தார்.

இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்

'கல்லாவில் அமர்ந்து கட்டுக்கட்டாய்க் காசு எண்ணிடும் எமது தோழர், அதனூடே இவ்வுயர் பணியிலும் காலத்தைச் செலவிட்டுவருவது எனதுள்ளத்தையும் உசுப்புகிறது. போற்றுகிறேன்! புகழுகிறேன்!! புழகாங்கிதம் அடைகிறேன்!!!' என்றார்.

ஆம்! அப்படிக்கட்டுக்கட்டாய் எண்ணும் பணம் என்னுடையதல்லாதிருந்தபோதிலும், அவ்வாறே இன்றுவரை நான் எண்ணிக்கொண்டேயிருக்கிறேன். எனது தேவைகளும் பூர்த்தியாகிக் கொண்டே வருகின்றன. அவர் சொல் நிலைத்து நின்றே நிலவுகிறது. மர்ஹூம் ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்கள் ஆன்மீகம், இலக்கியம், எழுத்து, பேச்சு முதலான துறைகளில் அடைந்திட்ட பாண்டித்தியத்தை இப்பிரதேசத்தில் இனனொருவர் பெறுவர் என்பது அரிது.

அன்னாரின் ஆன்மீக ஈடேற்றத்திற்கு அல்லாஹ் அருள் பாலிப்பானாக!!!



**காயல்மேகம் பாராட்டுவிழாவின் போது சம்மாந்துறை ஆசிரியர் சங்க சார்பில் அதிபர் எம்.எல்.அலியார் வாழ்துகிறார்.**

# ஈழமேகத்தின் மழையும் துளிகளும்

**- கவிச்சுடர் அன்பு முகையதீன்**

ஈழமேகம் எம். ஐ. எல். பக்கீர்த்தம்பி அவர்கள் மறைந்து பதினைந்து வருடங்கள் நகர்ந்து விட்டன. அவரோடு உண்டு உறங்கிய நினைவுகளும், ஒரே மேடையில் அமர்ந்திருந்து உரையாற்றிய சம்பவங்களும், கவிதை எழுதி அதை படித்துக்காட்டி மகிழ்ந்த நிகழ்ச்சிகளும் இன்னும் நெஞ்சைவிட்டு நீங்க மறுக்கின்றன.

ஒரு காலத்தில் பேச்சுலகில் அவர் விடிவெள்ளியாக விளங்கினார். அவரது பேச்சைக் கேட்பதற்கென்றே ஒரு கூட்டம் திரளும். அவர் தனக்கென ஒரு தனி பாணியை வைத்துக்கொண்டு மேடைகளில் முழங்கினார். பேச்சுலகில் சிறந்து விளங்கினார். எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பேச்சுக்கலைக்கு அழகும் மெருகும் ஊட்டி அக்கலையை முன்னெடுத்துச் சென்ற தளபதியாக ஈழமேகத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

நீண்ட காலமாக ஒரு பேச்சாளராக பிரபலமான பக்கீர்த் தம்பி அவர்கள் ஈழத்து கவிதைச்சோலைக்குள் பறந்து வந்து பாடத்தொடங்கினார். அவர் உள்ளத்தை நெகிழச்செய்து உணர்ச்சி களைத் தட்டிவிட்டு அவரை பாட வைத்த அந்த சம்பவம் பற்றி இவர் கூறுவது எமது கவனத்துக்குரியதாகும். 'எனது ஊர் இயற்கை யாகவே மருதநிலத்தால் சூழப்பட்டது. எனது ஊரைச்சுற்றி எப்போ தும்மே பசிய வயல் வெளிகளைக் காணலாம். இந்த இயற்கை வனப்பு என்னை எந்த அளவுக்குக் கவர்ந்ததோ இங்கு வீசும் வெங்கானக் கோடையும் அந்த அளவுக்கு என்னைத் தாக்கிற்று. பயங்கரமான கோடையும் அதனால் ஏற்படும் தண்ணீர்ப் பஞ்சமும் தாய்க்குலம் தண்ணீருக்காக கண்ணீருடன் குடம் சுமக்கும் காட்சியும் என்னிதயத்தில் எரிமலையை வெடிக்கச் செய்தன. அதனால்தான் எனது முதல் கவிதையே மழைவளம் வேண்டும் அல்லாஹ் எனப்பிறந்தது' என்று தனது உள்ளத்தைத் திறந்து காட்டுகிறார். பாரதியின் வார்த்தையில் கூறுவதானால்,

'ஆடுதல் பாடுதல்
சித்திரம்-கவி
யாதியினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட் டென்றும்
நடப்பவர்-பிறர்
ஈன நிலை கண்டு துள்ளுவார்'

என்பதற்கேற்ப, சமூகத்தின் ஈன நிலை கண்டும், இழிநிலை பொறுக்காதும் கொதித்தெழுந்து கவிமழை பொழிந்தவர்தான் ஈழமேகம்.

ஆரம்பமுதலே இவர் எழுதிய கவிதைகளில் ஒருவித உணர்ச்சியும், தாகமும், வேகமும் இருப்பதை அவதானிக்கலாம். பழகுவதற்கு மிக இனியவராக பக்கீர்தம்பி இருந்த போதிலும் அவர் எழுத்தும் பேச்சும் ஈட்டி போலவே இருக்கும். மழையின்றி மக்கள் படும் அவல நிலை கண்டே இவர் கவி ஊற்று திறந்தது என்கிறார். இந்தக் கோடையின் கொடிய ஆட்சியைக் கூறவந்த ஈழமேகம்,

*'நாடி நரம்பு தளர்ந்து உலர்ந்திட*
*நாவுவரண் டுமிழ் நீருமே வற்றிட*
*ஆறிடுமேடு அலைக லோய்ந்திட*
*ஆவி துடித்துயிர் ஆலாய்ப்பறந்திட*
*கத்தரி கொச்சிப் பயிர்களும் செத்திட*
*காய்கறித் தோட்டமும் காய்ந்து வரண்டிட*
*கோடுறு கானகம் கூட வரண்டிட*
*கோடைவரட்சி கொடுமை மிகைத்ததே'*

அமீர் அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை

இப்படிக்கோடையின் அகோரத்தன்மையை அடுக்கிக்கொண்டே போகிறார். ஈழமேகம் தனது முதற்கவிதையிலேயே கோடைகாலக் கொடுமையைக் கூறுவதுடன் நிறுத்திக்கொள்ளாது மழை பெய்யாத தற்குக் காரணம் அறநெறி பொயத்ததோ? ஏழைகளுக்குச் செய்யும் கொடுமைதான் இதற்குக் காரணமோ? என்று கேட்பதும் அருமையாக அமைந்திருக்கிறது. ஈழமேகத்தின் முதற் கவிதைக்குள்ளேயே ஓர் ஆற்றல் மிக்க உணர்ச்சிக்கவிஞன் மறைந்திருப்பதை அவதானிக்கலாம்.

ஈழமேகம் நிறையக் கவிதைகளும், கட்டுரைகளும் எழுதியிருக்கிறார். 1961ம்ஆண்டு அவரது வானொலி சொற் பொழிவுகளையும், பத்திரிகைகளில் வெளிவந்த சில கட்டுரைகளையும் தொகுத்து **உரை மலர்** என்ற நூல் வெளிவந்தது. 1983ம் ஆண்டு அவரது நாற்பது கவிதைகளை மட்டும் கொண்டதாக மழையும் துளிகளும் கிடைத்திருக்கிறது. ஈழமேகத்தை உரைத்துப் பார்ப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் எமக்குக் கிடைத்துள்ள ஆவணம் இவை இரண்டும்தான். இதுவரை வெளியிடப்படாத அவரது கட்டுரைகளும் கவிதைகளும் நூல்வடிவம் பெறுமாய் இருந்தால் எமது மண்ணில் மகத்தான கவிஞன் வாழ்ந்து மறைந்தான் என்பதை இளம் தலை முறையினர் மனங்கொள்ளத்தக்கதாக இருக்கும்.

'மழையும் துளிகளும்' என்ற கவிதைத்தொகுதியில் உள்ள பெரும்பாலான கவிதைகள் சமயக்கருத்துக்களையும், சமூக சீர்

திருத்தக் கருத்துக்களையும் கருவாகக்கொண்டே உருவாக்கப் பட்டுள் ளன. காதல் எந்தக்கவிஞனையும் விட்டுவைக்கவில்லை. ஈழமேகமும் அதனால் ஈர்க்கப்பட்டிருக்கிறார் என்பதை இடையிடையே பார்க்க முடிகிறது.

கவிஞர் சமய வரம்புக்குள் தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர். தான் வாழ்ந்து கொண்டிருக்கும் சமய சமூக கட்டுப்-பாட்டை மீறாது அக்கருத்துகளுக்கு புது வடிவம் கொடுத்து கவிதை பொழிந்த போதிலும், தன்னை ஒரு மனிதாபிமானக் கவிஞனாக காட்டத் தவறவில்லை. தனக்கு அப்பால் உள்ள மக்களுக்காக இரக்கப்பட்டு நிற்பதையும், அவர்களுக்காக குரல் கொடுப்பதையும் அவர் கவிதைக்குள் காணலாம். இத்தொகுதியில் உள்ள 'தேனீரும் செங்குருதியும்' என்ற கவிதையை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். மலைநாட்டில் வாழும் தோட்டத் தொழிலாளர் இன்றும் உரிமையற்று இன்னல் படுகிறார்கள். அவர்களுக்காக இரக்கப்படுபவர் எமக்குள் மிகக்குறைவு. கவிஞர் ஈழமேகம், அவர்கள் அனுபவிக்கும் அவல நிலையை எடுத்துக் கூறியதோடு மட்டும் நின்றுவிடாது, அவர்களுக்காக இரக்கப்படுவோர் இல்லையா? என்று கேட்பது அந்த அப்பாவி மக்கள் மேல் எமக்கும் அனுதாபம் பிறக்கும்படி செய்து விடுகிறார்.

'கொட்டு மழை உந்தனுக்கு பன்னீராமோ
குளிர்காற்றும் கொடுவெயிலு முன்னைச் சுட்டு
சட்டியினிற் புழுவாக நீ துடிக்க
தமிழன்னை யுனைப் பார்த்துக்கண்ணீர் சிந்த
வட்டவளை நுவரெலியா அட்டன் மாதும்
வாய்விட்டு உன்நிலையை யெடுத்துக் கூறும்
பட்டியலே நாடறிந்த கதையென்றாலும்
பரிதாபப் படுவோர்கள் உனக்காரப்பா!

மனிதன் எவ்வளவுதான் முன்னேறிவிட்டாலும் அவன் மனத்திலே மாற்றம் ஏற்படாதவரை, அவனுடைய இழிகுணங்களை விட்டு விடுதலை பெறாதவரை எவ்வித நன்மையும் ஏற்படப் போவ தில்லை. என்பதில் ஈழமேகம் நம்பிக்கையை வைத்திருந்தார். ஓர் அமைதியான, எப்போதும் மக்கள் சந்தோஷமாக, சமாதானமாக வாழும் உலகையே அவர் கனவு கண்டார். மதி கெட்டு, மானங்கெட்டு, வெட்கம் கெட்டு வாழும் உலகை அவர் வெறுத்தார். போரிடும் உல கத்தை வெட்டிச்சாய்க்க அவர் விரும்பினார். புதியதோர் உலகத்தை காண்பதற்கு ஆசைப்பட்டார்.

'மதிகெட்டு உடல் கெட்டு மானங்கெட்டு
மனிதனே மிருகமாய் மாறிக்கெட்டு
விதிகெட்டும் வினைகெட்டு வேஷம்கெட்டு
விண்ணார்ந்த புகழ்கெட்டு வெட்கம்கெட்டு
கதிகெட்டு நீதிகெட்டுக் கவலைகெட்டு
கண்கெட்டு அலைகின்றார் புத்திகெட்டு
பதிகெட்ட குடியினாற் பண்பே கெட்ட
பாவங்கள் மாறுமோ உலகை விட்டு'

ஒரு காலத்தில் ஈழமேகம் பேசாத மீலாத் மேடைகள் இருந்ததே இல்லை. அவர் பேசாத மீலாத் மேடைகள் சோபை இழந்து காட்சி தரும். தமிழகத்தில் நடந்த மீலாத் மேடைகளிலும் அவர் பேச்சால் பல அறிஞர்கள் கவரப்பட்டார்கள். மீலாத் விழாக்களின் பேரால் நடக்கின்ற அனாச்சாரங்களைக்கண்டு அவர் உள்ளம் குமுறியது. வெடிகுண்டாக அவர் கவிதை வீசப்பட்டது.

'ஆடறுப்பார் ஒரு கூட்டம் போத்தல் கஞ்சா
அபின்கரைப்பு சாராயம் பிரண்டி கள்ளு
ஏடறியாப் பேச்சாளர்களுக் குணவுமட்டும்
எழுச்சியோடு உபசாரம் பிரமாதந்தான்
வாடகைக்காய் வந்த பேச்சாளரெல்லாம்
வழியனுப்பி விட்ட பின்னர் மேடைகட்டி
நாடகம் கூத்தோடு கும்மாளம் போட்டு
நடிப்பதுதான் மீலாது நபிவிழாவா?

இத்தொகுதியில் உள்ள கவிதைகளைப்பற்றி வேறொரு பார்வையில் நிறையச் சொல்லலாம். ஆனால் கவிதைத் தொகுதியின் தலைவாசலில் நின்று அன்பாக அவர் சொல்லும் வார்த்தைகளுக்கு நாம் காது கொடுக்க வேண்டியுள்ளது.

'எழுத்தாளன் மனச்சாட்சியின் குரல்' என்று யாரோ ஓர் அறிஞன் சொன்னதுபோல் நான் கண்டவற்றை, எனது இதயத்தை நெருடிய வற்றை, என் மனச்சாட்சிக்கு சவாலாக நின்ற சங்கதிகளை உங்கள் உணர்ச்சிக்கு தர எண்ணினேன். இதில் வெற்றி தோல்வியின் முக்கியத்துவத்தை விட எனது உணர்ச்சியை, அந்த உணர்ச்சியால் எழுந்த தார்மீக ஆவேசத்தை வாசகர்கள் புரிந்து கொள்ள முனைவதையே எனது அங்கலாய்ப்பாய்க் கொண்டுள்ளேன்.'

இதை வைத்துக்கொண்டு கவிஞரின் கவிதைத்தொகுதியை இன்னுமொரு முறை நோக்கினால் ஈழமேகம் தனது உணர்ச்சிகளை


இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்

இத்தொகுதிக்குள் பெய்து வைத்திருக்கிறார் என்பது மெய்தான். இவர் வாழ்ந்த காலத்தின் குரலாக மழையும் துளிகளும் திகழ்கிறது.

ஈழமேகத்தின் கவித்துவத்தைப் பற்றிக் கூறவந்த மூத்த பத்திரிகையாளர் அன்புக்குரிய எஸ் டி சிவநாயகம் அவர்கள் கூறுவது உண்மை வெறும் புகழ்ச்சியல்ல.

*'மேகம் என்பது மூன்று காரியங்களைச் செய்யும். ஒன்று மின்னும், இரண்டு முழங்கும், மூன்று பொழியும். அது காளமேகமாக இருந்தாலும் சரி, ஈழமேகமாக இருந்தாலும் சரி. இந்த மூன்று காரியங்களையும் செய்தே ஆகவேண்டியதுதான். நம்மிடையே வாழும் 'ஈழமேகம்' என்று பெயர் கொண்ட கவிஞர் பக்கீர்த்தம்பி அவர்களிடமும் நாம் மின்னலையும் காணலாம், முழக்கத்தையும் காணலாம். தீமையைக்கண்டால் அவர் நெருப்பாக மின்னுவார். அநீதியைக்கண்டல் அவர் கொதிப்போடு முழங்குவார். இந்த உணர்ச்சிகளையெல்லாம் திரட்டி அவர் ஈற்றில் கவிதை மழையாக பொழிந்து தள்ளுவார். கவிதை மழையாகப்பொழியும்போது அங்கு இதம், இனிமை, குளிர்ச்சி எல்லாம் தென்படும். அவர் உள்ளத்தில் உணர்ச்சிப்பிழம்பும் உண்டு. மகிழ்ச்சிப்பிழம்பும் உண்டு. இந்த இரண்டின் ஒருமித்த கலவைதான் ஈழமேகம் என்ற கவிஞனின் வெளிப்பாடு, தோற்றம், அண்டம், அகண்டம், அடக்கம் எல்லாம்.'*

'கவிஞன் பிறந்தபின் கவிதை பிறக்கும்
கவிஞன் மறையினும் கவிதை உலவும்
மறைந்தும் மறையா மாபெரும் புகழை
அடையும் கவிஞர் ஆயிரத்தொருவர்'

அந்த ஆயிரம் கவிஞர்களுக்குள் ஈழமேகமும் ஒருவர் என்பது உண்மை.

# ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்களின் மனித நேயப்பண்புகள்

- வி. எஸ். வேலாயுதன்

நாவலர் ஈழமேகம் எம். ஐ. எல். பக்கீர்த்தம்பி ஐயா அவர்கள் சம்மாந்துறை அன்னையின் தவப்புதல்வர். தமிழ் சிறப்பளித்த சான்றோர். 'கல்விக்களஞ்சியம். கற்றவர்க்கேறு- சொல்வித்துவப் பிரசாரகன்' கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் மிக்க நல்லாசிரியர். சம்மாந்துறையில் ஆசிரிய பரம்பரை ஒன்றை உருவாக்கிய பெருமைக் குரியவர். தனக்கென வாழா பிறர்க்குரியாளன் தன்னலமற்ற சமூகத் தொண்டன். இன மத வேறுபாடுகளினின்றும் நீங்கிய நிலைமையாளர். இத்துணைப்பெருமையும் பெற்றியும் அமைந்த ஒருவரிடம் கல்வி கற்கும் வாய்ப்புக்கிடைத்ததைப் பெரும் பேறாகவே கருதுகிறேன்.

பக்கீர்த்தம்பி ஐயா அவர்கள் பழகுவதற்கு இனிமையும், எளிமையும் கொண்ட இயல்பினர். நவில்தொறும் நூல்நயம் போன்ற பண்பினர். இன்சொல் உரைத்து எங்கள் அனைவரது உள்ளங்களையும் வென்றவர். வகுப்பறையில் கண்டிப்பாகவே இருப்பார். கற்பித்தலுக்குப் புறம்பான நேரங்களில் மாணவரோடு மனந்திறந்து பேசுவார், தோழமை பூண்டு நட்புரிமை பாராட்டுவார். உறவு முறை சொல்லிச்செல்லமாக அழைப்பார். ஆயினும் தக்க சமயத்தில் குற்றங் கடிந்து குணங்கூறி நல்லாற்றுப்படுத்துவார். அன்னாரின் இத்தகு சீரிய குணசீலங்களை எண்ணுந்தோறும் 'நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய் பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்' என்ற சுப்பிரமணிய பாரதியாரின் பாடல் வரிகள்தாம் நினைவுக்கு வருகின்றன.

ஈழமேகம் ஐயா அவர்கள் மாணவரிடம் ஒழுங்கு, கட்டுப்பாடு, கீழ்ப்படிவு ஆகிய நற்பழக்கவழக்கங்களை வளர்ப்பதிலேயே கருத்தாக இருந்தவர். பாடவேளை தோறும் நன்னூலாசிரியர் கூறும் நல்மாணாக்கர் இயல்புகளை அடிக்கடி வலியுறுத்திக்கூறுவார். மாணாக்கன் பாடங்கேட்க ஆயத்தனாகி ஆசிரியரை அணுகியதும் அவர் இருவென்று கூறிய பின் இருந்து, படியென்று சொன்னபின் படித்து, பசித்துண்பவனுக்கு உணவில் உண்டாகும் வேட்கையைப் போன்று பாடங்கேட்டலில் ஆர்வமுடையனாகி, சித்திரப்பாவையைப் போன்று அசைவின்றிச் செவி வாயாகவும், மனமானது கொள்ளுமிடமாகவும், கேட்டவற்றின் பொருளை மறவாது உள்ளத்திலிருத்தி, ஆசிரியர் 'போ' என்ற பின்னரே மாணாக்கன் போவானாம். இவ்வுண்மையை நன்னூலாசிரியர்

பின்வருமாறு கூறுவார்.

'..........................................................
இருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்னவார் வத்தனாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவாயாக் நெஞ்சுகலி னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர்'

(நன்னூல்)

நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி ஐயா அவர்கள் சம்மாந்துறையில் இஸ்லாமிய கலாச்சார விழுமியங்களைக் கட்டிக்காத்த சாதாரண குடும்பத்தைச்சேர்ந்தவர். அவர் பாமர மக்களோடு அன்பாகப் பழகுவார். ஏழை மக்களுடன் தோழமை பூண்டொழுகுவார். தம்மை 'ஏழை பங்காளன்' என்று பெருமையோடு பேசிக்கொள்வார். "**பக்கீர்**" என்றால் ஏழை என்றும், தம்பி என்றால் இளையவன் எனவும் பொருள் காண்பார். எனவே பக்கீர்த்தம்பி என்பதன் பொருளை ஏழையினும் ஏழை எனக்கண்டு இன்புறுவார். இதனை வகுப்பறையில் எங்களிடம் பல சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்திக்கூறி மகிழ்வார்.

சம்மாந்துறை நெல்லரிசிக்கு மட்டுமல்லாது பொன்னாங்கணிக்கும் பிரபலமான இடமாகும். சம்மாந்துறைப்பொன்னாங்கணி தனிப்பெரும் உருசி மிக்கதாம். அது ஏழை மக்களின் இனிய உணவுமாகும். 'இன்றைய சோற்றுக்குப் பொன்னாங்கணி மாத்திரந்தான் கறியாக கிடைத்ததாயினும் அதனை இறைவன் தந்த கொடை' எனக் கருதவேண்டும் என்பார் ஈழமேகம் ஐயா. பிறரிடம் கூறும் போது பொன்னாங்கணியுடன் வேறும்பல உயரிய கறி வகைகளையும் சேர்த்துக்கூறி இறைவனின் கொடைத்திறத்தை மாட்சிப்படுத்தவேண்டும் அப்பொழுதுதான் இறைவனின் அருட்பார்வை நம்மீது விழும். 'எளிய உணவை நாம் கொடுக்கவும், அவனோ அதனை இன்முகத்தோடு ஏற்றுப்பிறரிடம் நம்மைப் பெருமைப்படுத்தியல்லவா கூறுகிறான் இவனே மெய்யன்பனாவன்' என்று இறைவன் தமது அருட்பெருங்கருணையை நம்மீது செலுத்துவான். அடுத்து வரும் நாட்களில் அறுசுவையுடன் கூடிய உண்டியையும் தந்தருளுவான் என்று இறை நம்பிக்கையும், இறையுணர்வும் ததும்பக்கூறுவார். பக்கீர்த்தம்பி ஐயா அவர்களின் இக்கூற்றானது எல்லாச்சமயத்தவர்களுக்கும் எக்காலத்திற்கும் ஏற்றதொன்றாம்.

ஏறத்தாள நாற்பத்தைந்து ஆண்டு முற்பட்ட நிகழ்வுகள். அந்த நினைவுகள் இன்றுகாறும் என் இதயத்தைவிட்டு அகலாதன

வாகவே உள்ளன. சம்மாந்துறை மகா வித்தியாலயத்தில் யான் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திர (எஸ்.எஸ்.ஸி.) வகுப்பில் பயின்று கொண்டிருந்த காலகட்டம் அது. அக்காலை ஐயா அவர்களிடம் தமிழ் மொழி கற்கும் பேறு எனக்குக்கிடைத்தது. அவரிடம் வேறு சில பாடங்களையும் கற்றதாக நினைவு. அந்த வகுப்பில் தமிழ் மாணவர் ஓரிருவர்தாம். ஏனையோருள் அதிகமானோர் ஐயா அவர்களின் நெருங்கிய உறவினராவர். ஆயினும் அவர் எனது முன்னேற்றத்தில் அதிக அக்கறையும் கரிசனையும் உடையவராகவே இருந்தார். பரீட்சையில் அவரது பாடங்களில் எனக்கே கூடிய புள்ளிகளும் பாராட்டும் கிடைக்கும். ஒரு சந்தர்ப்பத்தில் பாடசாலை-யிலேயே தம்மைக் கவர்ந்த நன்மாணாக்கன் யானே எனக் குறிப்பால் உணர்த்திக்கூறியதும் அனைத்து மாணவர் பார்வையும் என் மீது விழலாயிற்று. இதிலிருந்து ஈழமேகம் பக்கீர்த்தம்பி ஐயா அவர்கள் இன மத பேதங்களைக் கடந்த பெருந்தகையாளர், 'சமன்செய்து சீர்தூக்கும் கோல் போல்' நடுவு நிலைமை பிறழாது வாழ்ந்த சான்றோர் என்பது மறுக்கொணா உண்மையாகும். ஐயா அவர்கள் பாடசாலையில் மட்டுமல்லாது பொது வாழ்விலும் நடுவு நிலைமை தவறாத ஒருவராகவே வாழ்ந்தவர் என்பதை அன்னாரது நன்மக்கள் வாயிலாக அறியலாம். இதனைத் திருவள்ளுவர் பின்வருமாறு கூறுவார்.

> 'தக்கார் தகவிலர் என்பது அவரவர்
> எச்சத்தால் காணப்படும்'
>
> -திருக்குறள்

ஈழமேகம் ஐயா அவர்கள் நகைச்சுவையாக பேசி மாணவரை நல்லாற்றுப்படுத்துவதில் வல்லவராக இருந்தார். அவரது நகைச்-சுவையான பேச்சுக்கள் கருத்தாழமும் பொருட்சிறப்பும் உடையனவாக இருக்கும். அவர் ஒரு வகுப்பில் கற்பிக்கும்போது அடுத்தடுத்த வகுப்புக்களையும் தம்பால் ஈர்த்து விடுவார். சில சந்தர்ப்பங்களில் மாணவரோடு ஆசிரியரும் தம்மை மறந்து அவரது பேச்சுக்களைச் செவிமடுத்து இன்புறுவர். ஒருநாள் எங்களுக்கு அடுத்த வகுப்பில் ஐயா அவர்கள் தமிழ் கற்பித்துக்கொண்டிருந்தார். வாசிப்பும் மனனமும் வாராது இடர்ப்பட்ட மாணவனொருவன் வகையாக அவரிடம் அகப்பட்டுக்கொண்டான். அவனைப்பார்த்து,

> 'வெண்பா விருகாலிற் கல்லானை வெள்ளோலை
> கண்பார்க்கக் கையாலெழுதானைப் - பெண்பாவி
> பெற்றாளே பெற்றாள் பிறர் நகைக்கப்பெற்றாளெ
> ற்றெற்றோமற் றெற்றோமற் றெற்று'



இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்

என்ற ஔவையாரின் பாடலைப்பாடவும் அவன் நாணிக்கோணிக்குறுகி நின்றான். நாங்களெல்லோரும் கொல்லென்று சிரித்துவிட்டோம்.

நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி ஐயா அவர்கள் நனி சிறந்த மேடைப்பேச்சாளர் என்பதைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும். சொற்சோர்வில்லாது வார்த்தைகளை ஒன்றன் பின் ஒன்றாக, விரைந்து வேகமாக அடுக்கிச்செல்வார். கோடையிடி போல் சபையோர் அதிரும் வண்ணம் தமிழ் முழக்கம் செய்யும் ஆற்றல் உள்ளவர் அவர். பகைவரும் ஐயா அவர்களின் பேச்சை மயக்குண்டு நிற்பர். நாவலர் ஐயா அவர்களின் பேச்சு கேட்போரைத் தம் வயமாக்கும் தன்மையதாம். அன்றியும் அவர் சொற்பொழிவை முன்கேளாதவரும் கேட்க விளைந்திடுவர். இவ்வுண்மையை,

'கேட்டார் பிணிக்கும் தகை அவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்'

என திருவள்ளுவ நாயனார் கூறுவார். உணர்ச்சி மிகு அவரது உரைகள் அன்றையச் சமூகச் சீர்கேடு, பிற்போக்கு என்பவற்றை களையும் நோக்குடன் அமைந்தனவாம். ஐயா அவர்கள் தமது நாநலம் என்னும் நாவன்மையால் சம்மாந்துறையை விழித்தெழச் செய்த பெருமைக்குரியவர் என்பதை மறுக்கொணா உண்மையாகும்.

அவர் மேடைப்பேச்சில் மட்டுமல்லாது வானொலிப்பேச்சிலும் வல்லவராகத் திகழ்ந்தார். அவர் வானொலியில் பேசுவதென்றால் ஏற்கனவே வகுப்பில் எங்களிடம் சொல்லி வைத்து விடுவார். இன்று போலாது வானொலிப்பாவனை அரிதாக இருந்த அந்நாளில், பல சிரமங்களுக்கு மத்தியிலும் நாங்கள், அவரது பேச்சைத் தவறாது கேட்டுவிடுவோம். பின்னர் வகுப்பில் அது பற்றிக் கலந்துரையாடிப் புகழாரம் சூட்டுவோம்.

அன்று இறுதிப்பரீட்சைக்குச் செல்லுமுன்னர் பாட ஆசிரியர் களிடம் சென்று ஆசீர்வாதம் பெறுவது வழக்காறு மட்டுமன்றிப் பிரதான கடமையாகவும் கருதப்பட்டது. அநேகமாகப் பரீட்சைக்கு முதல் நாள் நிகழ்வாக இது அமையும். தேர்வுக்கு முந்நாள் இரவு நாங்கள் ஐயா அவர்களின் வீட்டுக்குச் சென்றோம். எங்கள் அனைவரையும் அவர் இன்முகந்தந்து வரவேற்று உபசரித்து இதோபதேசம் புரிந்தார். ஒரு விடயத்தை மட்டும் வலியுறுத்திக் கூறினார். 'விடியற்காலையில் வெறுங்குடங்கள் தரிசனத்திற்கு வருமுன்னர் புறப்பட்டு விடுங்கள்' என்பதே அவர் கூறிய அறிவுரையாகும். அக்காலை பரீட்சை சாய்ந்த மருதில் நடைபெற்றதால் நாங்கள் பெரும்பாலும் துவிச்சக்கர வண்டியில்தான் பிரயாணம் செய்வோம். ஐயா அவர்களின் அறிவுரைக் கிணங்க, நாங்கள் அதிகாலையிலேயே பயணத்தை ஆரம்பிப்போம்.

பரீட்சை முடிந்த பின்னரும் நாங்கள் அவரை அணுகி விடையளித்த விதத்தைக் கூறி ஐயந்தெளிந்து ஆறுதல் பெறுவோம்.

1962 ஆம் ஆண்டின் பின் யான் தினகரன் பத்திரிகையில் தொடர்ந்து சில காலம் சமயக் கட்டுரைகளை எழுதி வந்தேன். ஐயா அவர்கள் என்னைப் பாராட்டி மேலும் எழுதுமாறு உற்சாகம் ஊட்டினார். அத்துடன் நில்லாது தினகரன் ஆசிரியரிடத்திலும் என்னைப்பற்றிப் பிரஸ்தாபித்திருந்தார். 1973 ஆம் ஆண்டு எனது பிரிய தந்தையார் இறை பதமெய்திய செய்தியைக் கேள்வியுற்று எனது வீரமுனை வீட்டுக்கு வருகை தந்து ஆறுதல் வார்த்தைகள் கூறிச்சென்றதை என்னால் யாண்டும் மறக்கவியலாது. இவற்றை யெல்லாம் நான் இங்கு கூறக்காரணம் நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி ஐயா அவர்கள் இன மத பேதங்களைக் கடந்து நின்ற பெருந்தகை யாளர் மட்டுமல்லாது மனித நேயமிக்க நற்பண்புகளையுடைய பெரியார் என்பதை நிரூபணம் செய்வதற்காகவேயாம்.

இங்ஙனம் ஐயா அவர்களைப்பற்றியும் அவர் தம் குணசீலங் களைப் பற்றியும் எவ்வளவோ எழுதிச்செல்லலாம். ஈண்டு விரிவஞ்சி அவற்றை விடுத்து ஒன்றை மட்டும் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன். நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி ஐயா அவர்களைப்பற்றி எண்ணுறும் போது திருமுருகாற்றுப்படையிலே முனிபுங்கவர் களைப- பற்றிய வருணனைதான் என் நினைவுக்கு வருகிறது. ஐயா அவர்களிடம் பகையோ நீண்ட கோபமோ சற்றும் இருந்ததில்லை. எல்லாவற்றையும் கற்றுத் துறைபோனவர்களுக்கும் தெரியாத நுட்பங் களை உணர்ந்தவர் அவர். அவருடைய கல்வியோ கரை கடந்தது. கற்றவர்களுக்கு அவரையே தலை எல்லையாகச் சொல்லவேண்டும். காமம் கடுமையான கோபம் இவையில்லாதவர். துன்பம் என்பதையே அறியாத இயல்புடையவர். இக்கருத்தைச் சொல்லும் மேற்படி வருணனை அடிகள் வருமாறு,

'..................................இகலொடு
ஏற்றம் நீக்கிய
மனத்தினர், யாவரும்
கற்றோரறியா
அறிவினர், கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய
தலைமையர், காமமொடு
கடும்சினம் கடிந்த
காட்சியர், இடும்பை
யாவதும் அறியா இயல்பினர்'
- (திருமுருகாற்றுப்படை)

அமீர்அலி பொது நூலகம்
பிரதேச சபை - மீராவோடை

காட்சியர், இடும்பை
யாவதும் அறியா இயல்பினர்'
-(திருமுருகாற்றுப்படை)

பக்கீர்த்தம்பி ஐயா அவர்கள் சம்மாந்துறைக்கு மட்டும் சொந்தமானவராகலாம். ஆனால் நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி ஐயா அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகிற்கு உரித்தானவர் ஆவர். தமிழ் நெஞ்சங்கள் உள்ளவரை அவர் நாமம் நிலைத்திருக்கும்.

வாழி ஈழமேகம்!
அவர் புகழ்,
'பல்லாண்டு பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு' வாழியவே!!



**காயல்மேகம் பாராட்டு விழாவின் போது, சம்மாந்துறை ஆசிரியர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் அதிபர் ஜனாப் காதர் மீராசாஹிபு அவர்கள் பொன்னாடை போர்த்துகிறார்.**

# இரண்டாயிரம் மேடைகள் கண்ட இணையற்ற கலைஞர்

- அ.ஸ.அப்துஸ்ஸமது

1982ம் ஆண்டில் நான் வானொலி இலக்கிய மஞ்சரியை நடத்திக் கொண்டிருந்த போது கலைஞர் பலரைச் செவ்வி கண்டேன். அவர்களுள் ஈழமேகம் பக்கீர்த்தம்பியும் ஒருவர். அவரிடம் நான் கேட்ட கேள்வியொன்றுக்கு அவர் அளித்த பதில் என்னைப்பெரிதும் வியப்பில் ஆழ்த்தியது.

நீங்கள் சிறந்த பேச்சாளராகவும் கவிஞராகவும் இருக்கிறீர்கள். இதுவரை எத்தனை மேடைகளில் பேசியும் பாடியும் இருப்பீர்கள்? என்பது நான் கேட்ட வினா. அதற்கு இவர் தந்த விடை, 1952ம் ஆண்டு வை எம் எம் ஏ நடத்திய பேச்சுப் போட்டியில் தங்கப்பதக் கத்தைப் பெற்றது முதல் இன்றுவரை இரண்டாயிரத்துக்கும் அதிகமான மேடைகளில் தோன்றி இருக்கிறேன். என்று அவர் கூறினார். முப்பது ஆண்டுகளில் இரண்டாயிரம் மேடைகளில் தோன்றிய கலைஞர்கள் இலங்கையில் யாரும் இருக்க முடியாது. இது பக்கீர்த்தம்பியின் அரிய சாதனையாகும். சொன்மாரி என்றும் கவிமாரி என்றும் மாறி மாறி அலுக்காமல் களைக்காமல் அவர் மேடைகளில் பங்கேற்றார்.

இன்று அறுபது வயது நிரம்பியவராக ஆசிரியப்பணியினின்றும் ஓய்வு பெறும்அவர்ஓர்இளைஞரைப்போல இன்னும் கவிதைகள் எழுதிக் கொண்டேயிருக்கிறார். கூட்டங்களில் பேசிக் கொண்டேயிருக்கிறார். கலைக்கு முதுமை ஏது? ஓய்வு ஏது? முப்பது வருடங்கள் கலைக் கன்னியோடு இன்ப வாழ்க்கை நடத்தியவர் ஜனாப் பக்கீர்த்தம்பி. பேச்சுத்துறையில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றவர். இஸ்லாமிய விழாக்களிலும் இலக்கியக் கூட்டங்களிலும் இவரது பேச்சுக்கள் மக்களால்மிகவும் இரசிக்கப்பட்டன. இஸ்லாமிய வரலாற்றுச் சம்பவங் களை இவர் உணர்ச்சி பாவத்தோடு பேசும் பாங்கே தனித்துவமானது.. இலக்கியக் கூட்டங்களில் கவிதைகள் இவர் நாவில் நர்த்தனம் புரியும். இலக்கிய நயம் தோய இவர் பேசும் அழகு கேட்போருக்கு ஓர் இன்பக்கிளுகிளுப்பைத்தரும். நகைச்சுவை என்பது இயல்பாக வருவதொன்று. அதை நான் எப்படிக் கையாள்கிறேன் என்று கூறமுடியாது என்று கூறும் பக்கீர்த்தம்பியின் பேச்சாற்றலின் வெற்றி அவர் கையாளும் நகைச் சுவையில்தான் இருக்கிறது. 1961ல் இந்தியாவுக்குச் சென்ற ஜனாப் பக்கீர்த்தம்பி வேலூர், நாகூர், அதிராம்பட்டினம் முதலாம் பத்துக்குத் மேற்பட்ட இடங்களில் மீலாது

வைபவங்களில் பேசிப் புகழ் பெற்றார். அறிஞர் அண்ணாவுடன் ஒரே மேடையில் பேசினார். அறிஞர் அண்ணா அவர்களால் ஈழமேகம் என்று பெயர் சூட்டப்பெற்று பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டார்.

பேச்சு இவரைக் கலையுலகத்துக்கு அறிமுகம் செய்தாலும் இவர் கவிதைத்துறையிலும் ஈடுபடத்தொடங்கினார். அதுவும் இவருக்கு கைவந்த ஒரு கலையாயிற்று. 1962ல் அறவழிக்கீதம் என்ற ஒரு சிறு நூலோடு கவிதைத்துறைக்கு அறிமுகமான ஜனாப் பக்கீர்த்தம்பி இலங்கை சர்வகலாசாலை கொழும்பு வளாகம் நடத்திய கவிதைப் போட்டி, இலங்கை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் என்பன நடத்திய கவிதைப் போட்டிகள் மற்றும் ஹிஜ்றா கவிதைப்போட்டி முதலான பல கவிதைப் போட்டிகளில் பங்குபற்றி பரிசுகளையும் வெற்றிக் கோப்பைகளையும் பெற்றார். சொன்மாரி பொழியும் மேகத்திற்கு கவிமாரி பொழிவது சிரமமான காரியம் அல்ல என்பதை இவர் பல கவியரங்குகளில் காட்டியிருக்கிறார். இவருடைய அறுபதா வது ஆண்டு சேவை நலம் பாராட்டு விழாவில் மழையும் துளிகளும் என்ற இவரது கவிதை நூல் வெளிவந்தது.

இவரது கவிதைகளில் சமூக உணர்வு நிறைந்து காணப்படும். துடுக்காகவும் துணிவாகவும் கருத்துக்களைச் சொல்லிவிடுவார். இவரது கவியரங்குக் கவிதைகளில் சந்தவின்பம் மிகுதியும் காணப்படுவதால் அரங்குகளில் அது முதன்மை பெற்று விளங்கும். சில கவிதைகளைக் கிராமியப் பாங்கான வர்ணங்களில் பாடுவார். அது சாதாரண பொது மக்களையும் வெகுவாக கவர்ந்துவிடும். கவிஞரின் பாநலத்தை இங்கு ஒரு பாவில் பார்ப்போம்.

ஏழைகளின் கொடிய பசி தாகந்தன்னை
ஏழடுக்கு மாடியிலே வாழுவோரும்
பேழையுறை முத்து நிகர் சீமான்களும்
பேடிகளும் கூடவே உணரச் செய்ய
வாழவைக்க ஆதியிறை எமக்களித்த
வரலாறு கூறவந்த வண்ண நோன்பு
பாளை மணம் வீசுமிள மங்கை நல்லாள்
பண்பினிலே பூத்தவிளம் பூவோ நோன்பு

நோன்பின் மாண்பைக் கூறவந்த கவிஞர், ஏழடுக்கு மாடியிலே வாழ்வோரும் பேழையுறை முத்து நிகர் சீமான்களும் ஏழைகளின் கொடிய பசியை உணரச் செய்ய வந்தது என்று கூறும் கருத்து தம் சகோதரர்களை மறந்து செல்வ போகத்தில் வாழும் ஓர் உயர்

வர்க்கத்தாரை ஆக்ரோஷத்துடன் சாடி நிற்பதைக்காட்டுகிறது. இதை அவர்கள் உணர்ந்தால் நோன்புக்கு அடுத்த கடமையான சகாத்தை அவர்கள் உணர முற்படுவார்கள். இஸ்லாத்தில் வர்க்க முரண்பாடு ஒழிந்து சமத்துவம் நிலவும் என்பதை இங்கு எவ்வளவு நாசூக்காக கூறினார் கவிஞர்.

எதைக்கூறவந்தாலும் இலக்கிய நயமும் பக்கீர்த்தம்பியை விட்டு போகாது. "பாளை மணம் வீசுமிளம் மங்கை" என்ற சொற்றொடர் இங்கு விவரித்துச் சொல்ல முடியாதது. அனுபவத்தால் உணர்ந்து இரசிக்கக்கூடியது. அவளது பண்பிலே பூத்த இளம் பூ நோன்பு என்கிறார் கவிஞர். உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு என்பர். அதுபோல அடக்கம், பொறுமை, இறையச்சம் என்பனவெல்லாம் அமைந்தது பெண்மை. இந்தப் பண்புகள் எல்லாம் பூத்து நிற்கும் மலர்தான் நோன்பு என்று கூறும் கவிஞரின் கற்பனைத்திறன் பாராட்டுதற்குரியது. நாம் எடுத்துக்கூறிய சமூக நோக்கு, கற்பனைத் திறன், இலக்கியச்சுவை என்பன கவிஞர் பக்கீர்த்தம்பியின் கவிதை யாற்றலின் வெற்றியாகும்.சம்மாந்துறை மக்கள் கலை உள்ளம் படைத்தவர்கள். அவர்களுக்குக் கிடைத்த செல்வங்களை மதிக்கத் தெரிந்தவர்கள். பக்கீர்த்தம்பி பரிசும் பாராட்டும் பெற்றுவந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் அவரைப் பாராட்டி கௌரவித்துள்ளனர். இந்தப் பொற்பதியில் பிறந்த பக்கீர்த்தம்பியின் புகழ் பல்லாண்டு வாழ்க.

(நன்றி: தினகரன்- 12 ஜூன் 1983)



**பொதுமக்கள், கல்விமான்கள் புடைசூழ ஈழமேகம் விழா மேடைக்கு அழைத்துச் செல்லப்படும் காட்சி.**

# இஸ்லாமிய நற்சிந்தனையாளர் நாவலர் ஈழமேகம்

**- கலாபூஷணம் மௌலவி எம்.எச்.எம். புஹாரி (பலாஹி)**

நாவலர் ஈழமேகம் எம்.ஐ.எல். பக்கீர்த்தம்பி அவர்கள் ஒரு சிறந்த கவிஞர். பொருள் பொதிந்த இன்தமிழ்க்கவிதைகளால் புகழ் பெற்றவர். அத்துடன் அவர் ஒரு நாவலர். அழகு தமிழ் அடுக்கு மொழியில் கேட்போரைக் கவரும் வண்ணம் சொல்லாற்றும் சொல்லில் வல்லார்.

ஒரு கவிஞர் என்ற வகையில் அவருக்குக் கிடைத்த புகழை விட ஒரு பேச்சாளர் என்ற வகையில் கிடைத்த புகழும் பிரபலமும் அதிகமானவை நாடு முழுவதும் பட்டி தொட்டிகளிலெல்லாம் அவர் உரையாற்றியிருக்கிறார். ஒரு காலத்தில் மீலாத் மேடைகளில ஈழமேகம் தான் முக்கிய பேச்சாளர். அவர் பேசுகிறார் என்றால் சிறியோர் முதல் பெரியோர் வரை அங்கு திரண்டு நிற்பர். இரவில் எவ்வளவு நேரமானாலும் அவர் பேசுவதைக்கேட்க மக்கள் காத்து நிற்பர். நள்ளிரவைத் தாண்டிய பின்னரும் அவர் பேசிக் கொண்டிருப்பார். மக்கள் வெள்ளம் அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும். இரவில் நீண்ட நேரம் அவர் பேசுகிறார் என்பதை அவரே தனது பேச்சில் சுவையாக குறிப்பிடுவார்.

**'நேரமோ பத்தரை**  
**மாதமோ சித்திரை**  
**நீங்களோ நித்திரை**  
**நானுமேன் கத்துறன்?'**

என்று பல மேடைகளில் சொல்லியிருக்கிறார். உண்மையில் யாரும் நித்திரையாக இருக்கமாட்டார்கள். பேச்சிலே லயித்துப்போய் இருப்பார் கள். அவர் சொன்னபிறகு மீண்டும் உசாராகிவிடுவார்கள். அவர் சொன்ன பிறகுதான் அப்போது நேரம் பத்தரை என்பதை உணர்ந்து கொள்வார்கள். நாவலர் ஈழமேகம் உரையாற்றும் மேடைகள் பெரும் பாலும் இஸ்லாமிய விழாக்களாக இருக்கும். அம்மேடைகளில் அவர் இஸ்லாமியக் கருத்துக்களை அள்ளி வழங்குவார். சிந்தையள்ளும் சீரிய கருத்துக்கள் அவர் நாவில் எப்போதும் தவழும். கணீரென்ற குரலில்கனிய தமிழில்-நகைச்சுவை ததும்ப இஸ்லாமியக் கருத்துக்களை அவர் சொரியும் போது, முஸ்லிம்கள் மட்டுமல்ல முஸ்லிமல்லாதோரும் அவர் பேச்சில் மயங்கி விடுவர். இஸ்லாமிய சிந்தனைகளை அவர் செந்தமிழிற் சிந்துவதே தனிச்சிறப்பானது.

இலங்கை வானொலியில் அதிகாலையில் ஒலிபரப்பாகும் இஸ்லாமிய நற்சிந்தனை நிகழ்ச்சியில் ஈழமேகம் அவர்கள் அடிக்கடி பங்கு பற்றினார்கள். உள்ளத்தைத் தொடும் உணர்ச்சி பூர்வமான உரைகளை மிகக் கூடுதலாக வழங்கியுள்ளார்கள். மனத்துக்கு இதமான அதிகாலைப்பொழுதில் இஸ்லாமியக் கருத்துக்களைக் கனிதமிழிற் குழைத்து வான் அலைகளின் ஊடே அவர் வழங்குவதை மக்கள் அனைவரும் கேட்டு மகிழ்வர். அவரது பேச்சுக்களில் காணப்படும் அரிய கருத்துக்கள் அவர் ஒரு சிறந்த சிந்தனையாளர் என்பதைப் புலப்படுத்தும். வானொலியில் அவர் நிகழ்த்திய இஸ்லாமிய நற் சிந்தனைகள் வெறுமனே காற்றோடு கலந்து போய் விடுவதை அவர் விரும்பவில்லை. பொன்னான அக்கருத்துக்கள் காலமெல்லாம் நிலைத்து நன்மை பயக்க வேண்டும் என விழைந்து, **உரை மலர்** என்ற பெயரில் அதனை நூலாக்கித்தந்தார். இந்நூல் இன்றும் நூலகங்களிலும், கலையகங்களிலும் பேணப்பட்டு வருகிறது. பாடசாலை மாணவர்கள் தமது பேச்சாற்றலை வளர்க்க இந்நூலைத் துணையாகக் கொண்டிருப்பதை இன்றும் காண்கிறோம். இஸ்லாமிய உரை நிகழ்த்தும் பலர் இந்நூலிலிருந்து மேற்கோள் பெறும் அளவுக்கு அவரின் இஸ்லாமியக் கருத்துக்கள் அமைந்துள்ளன.

நாவலர் ஈழமேகம் ஓர் ஆசிரியர். அதிபராகப் பல்லாண்டு காலம் நற்பணி செய்தவர். அவர் காலத்து அதிபர்கள் எல்லாம் பாடசாலைகளுக்கு மாத்திரம் முதல்வர்களாக இருக்கவில்லை. அவர்கள் பணி செய்த கிராமங்களுக்கும் அவர்கள்தான் தலைவர்கள்.

நாவலர் ஈழமேகம் அவர்களும் அதிபர்என்ற வகையில் பல கிராமங்களில் இஸ்லாமியப் பணி செய்துள்ளார். மாணவர்களுக்கும் பெற்றாருக்கும் இஸ்லாமிய உணர்வூட்டி அவர்களையெல்லாம் நன்னெறிப்படுத்தியுள்ளார்.

சொல்லாற்றல் மிக்க நாவலர், நாடறிந்த நல்ல கவிஞருமாவார். தமது தரமான கவிதைகளில் தகைசார்ந்த இஸ்லாமியக் கருத்துக்களைத் தவழவிட்டவர் அவர். அவரது கனிதமிழ்க் கவிதைகள் சிந்தனை முத்துக்களாக ஒளிர்ந்தன. கவிதைகள் என்ற பெயரில் வெறும் சொற்கூட்டங்களை அடுக்கி வைத்துக் கொக்கரிக்கும் போலிகள் போலல்லாது, எதையெல்லாமோ கருவாகத்தாங்கி உப்புச்சப் பில்லாத குப்பைகளைக் கீறுவோர் போலல்லாது, உணர்ச்சி மிக்க, உயர் கருத்தாழமிக்க மரபுக்கவிதைகளால் புகழ்பெற்றவர் நமது ஈழமேகம் வெறும் பசப்பு வார்த்தைகள் அவர் கவிதைகளில் காணப் படவில்லை. காதலையும் மோதலையும் அவர் பாடவில்லை.உயர்ந்த கருத்துக் கருவூலங்களை கவிதைக் தேனில் குழைத்துத் தந்தார். இஸ்லாமிய சிந்தனைகளைக் கவியாரமாகப் படைத்தார்.



இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்

1978ல் தென் இந்தியாவின் காயல் பட்டினத்தில் நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமியத் தமிழிலக்கிய ஆராய்ச்சி மகாநாட்டிற் பங்குபற்றச் சென்றோம். கவிஞர் ஈழமேகம் அவர்களும் எம்முடன் வந்தார்கள். அப்போது நாங்கள் கடல் மார்க்கமாகவே இந்தியாவுக்குச் சென்றோம் கப்பலுக்கான பயணச்சீட்டு எங்களுக்கு தனித்தனியே தரப்படவில்லை. நான் மற்றும் எனது ஊரான காத்தான்குடியைச் சேர்ந்த மஹ்மூதுலெப்பை ஆலிம், கவிஞர் ஈழமேகம், அவரின் அன்பு மருகர் (இந்நூலின் தொகுப்பாசிரியர் ஜனாப் யூ .எல். அலியார் எம்.ஏ.) ஆகிய எங்கள் நால்வருக்கும் சேர்த்து ஒரே பயணச்சீட்டு தரப்பட்டது.

அதனால் நாங்கள் தென் இந்தியாவில் தங்கியிருந்த நாட்களில் நால்வரும் ஒருமித்தே பயணம் செய்ய வேண்டியிருந்தது. இது கவிஞர் ஈழமேகம் அவர்களுடன் நெருங்கிப்பழகும் நல்ல வாய்ப்பை ஏற்படுத்தியது. ஒருவரின் இயல்புகளை நன்கு தெரிந்து கொள்வதற்கு அவருடன் பயணம் செய்து பார்க்க வேண்டும் என்பார்கள். ஈழமேகம் அவர்களின் தெளிந்த சிந்தனை, கவிதைத் திறன், குணநலன்கள், இஸ்லாமிய நடைமுறை போன்றவற்றை யெல்லாம் பயணத்தின்போது நன்கு அவதானித்தேன் .'தம்பி! தம்பி!!' என்று என்னை அன்பொழுக அழைத்து இனிக்க இனிக்கப் பேசினார்கள்.

1983ம் ஆண்டு கவிஞர் அவர்களுக்கு சம்மாந்துறையில் வைரவிழா எடுக்கப்பட்டது. அதில் கல்லுங்கனியாதோ கவி என்ற பொருளில் பாவலர் பஸீல் காரியப்பர் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கலந்து கவிதை படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அழகு தமிழ்க்கவிஞரைப் பாராட்டும் பெருவிழா மேடையில் அவருக்கு அருகில் இருந்து வாழ்த்தும் பாக்கியம் பெற்றேன். அதுதான் அவர்களது முகத்தைக்காணும் இறுதிச்சந்தர்ப்பமாக அமைந்துவிட்டது. அதன் பின் அவர்களை சந்திக்கவேயில்லை. அவர்கள் காலமான தினத்தில் நான் கொழும்பில் இருந்தேன். அதனால் அன்னாரின் ஜனாசாவில் கூட கலந்து கொள்ளக் கிடைக்கவில்லை.

அவர்கள் மறைந்து பல்லாண்டுகள் கழிந்து விட்டன. ஆயினும் அவர்களின் கல்விச் செல்வங்கள் நம் மத்தியில் செழித்திருக்கின்றன. அவர்களது இஸ்லாமிய சிந்தனை முத்துக்களை தாங்கிய உரைமலர் நம்முடன் உரையாடிக் கொண்டிருக்கின்றது. அவர்களது இஸ்லாமிய கருத்துக்கள் நம் இதயங்களில் நிறைந்திருக்கின்றன. அவர்களது நினைவாக மலர்ந்துள்ள இந்த **நினைவுச் சுவடுகள்** அவர் தம் நினைவுச் சின்னமாக மிளிர்கிறது.

அவர்களது ஆக்கங்கள் பல இன்னும் அச்சேறாமல் இருக்கலாம். அவற்றை அச்சுவாகனமேற்றி தமிழ்கூறு நல்லுலகில் பவனி வரச் செய்தல் அன்னாரின் நினைவாகச் செய்யும் அருமையான கைங்கரியமாகும். அவர்களின் உறவினர்களும் மாணவர்களும் ஏனையோரும் இப்பணியைச் செய்வார்களாக.



**பொன் விழாவின் போது பொன்முடிப்புப் பெறும் ஈழமேகம்**

# ஒரு தலைமுறையின் முன்னோடி

**- றமீஸ் அப்துல்லாஹ்**

ஈழமேகம் மறைந்துவிட்டார். இல்லை. இல்லை.. ஈழமேகம் மனித மனங்களில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இந்த மனிதர் அண்மைக்கால ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் குறிப் பிடத்தக்கவர். ஞாபகப்படுத்தப்படவேண்டியவர். இந்த தலைமுறையின் முன்னோடியான அவரை நாம் கட்டாயம் தெரிந்திருக்கவேண்டும்.

அந்தநினைவில்.....

நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி ஜே.பீ.அவர்கள் 1923ம் ஆண்டு வைகாசித்திங்கள் ஆறாம் நாள் அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை என்னும் முஸ்லிம் பகுதியில் பிறந்தார்.இவரது தந்தையார் வட்டைக்காவலரும், தலைவரி, நிலவரி அறவிடும் உத்தியோகத்தரும் ஆவர். தாயார் பாத்திமா. இவர் தமிழ்க்கல்வியும் ஹதீஸ் கலை ஞானமும் கொண்ட பெண்மணி. பக்கீர்த்தம்பி தன் ஆரம்பக்கல்வியை சம்மாந்துறை மிஷன் (தற்போதைய தாருல் உலூம் வித்தியாலய) பாடசாலையில் ஆரம் பித்தார். பின்னர் ஆசிரியராக, அதிபராக காத்தான்குடி, சம்மாந்துறை, கிண்ணியா, மூதூர், தோப்பூர், வெள்ளை மணல், குச்சவெளி போன்ற இடங்களில் சேவையாற்றி எங்கும் தமிழோதி பெருமை சேர்த்தார்.

ஈழமேகம் சிறுவயதிலிருந்தே போட்டிகளில் பங்கு பற்றுவார். இறுதியில் பெரும் புகழும் பாராட்டும் பெற்று பெருமை சேர்ப்பார். கட்டுரை, பேச்சு, கவிதை எனும் முத்துறையிலும் இவரது ஈடுபாடு பரவியிருந்தது. ஆரம்ப காலங்களில் மேடைப்பேச்சு, வானொலிப் பேச்சினிலே இவர் ஈடுபட்டிருந்தார். பின் கட்டுரை எழுதுவதிலும், கவிதைகள் படைப்பதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ஈழமேகம், ஈழமறிந்த, தென்னிந்தியா அறிந்த ஒரு பேச்சாளர், கவிஞர், கட்டுரை ஆசிரியர். தனக்கென்ற தனித்துவமான போக்கைக்கொண்டவர். சம்மாந்துறையின் இலக்கிய வளர்ச்சியில் இவருக்கு நியாயமான பங்குண்டு.

சம்மாந்துறை கலாபிவிருத்திக்கழகம் ஈழமேகத்தின் ஓர் சின்னம். அந்தப் பாசறையில் வளர்ந்தவர்கள் பலரே சம்மாந்துறையில் இன்னும் கவிஞர்களாக, தமிழாசிரியர்களாகத் திகழ்ந்து கலைப்பணி புரிகின்றனர். இங்கு இலக்கிய முயற்சியில் ஈடுபடும் அனைவருமே ஈழமேகத்தின் பரம்பரையினரே, எச்சங்களே, சிஷ்யர்களே. ஈழமேகம் சமூகக்களத்தில் வரிந்து கட்டிக்கொண்டு இறங்கி நின்று எந்த சீர்திருத்-

தப்பணியை மேற்கொள்ளாவிட்டாலும் தன் நா, பேனை என்னும் ஆயுதங்களால் சமூக அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுத்த ஒரு புரட்சி மகன். நாவலர் ஈழமேகம் தீமையைக்கண்டு கனலாய்க் கொதித்து அநீதியைக் கண்டு இடியோசை எழுப்பி உணர்ச்சிக் கொப்பளிப்புகளை மழையாகக் கொட்டிய மேகம் அவர். அவரது எழுத்துக்களில் அழகிய நடை, ஆற்றொழுக்கு, சொற்சுருக்கு, உள்ளத் தெளிவு, துள்ளற்பண்பு, தெள்ளு தமிழ் என்பன விரவிக் கிடக்கும். ஈழமேகத்தின் பேச்சோ ஒரு தனி ரகம். கவிதை ஒரு புது ராகம். ஈழமேகம் பேசத்தொடங்கினால் சொல்மழை அடுக்கடுக்காய்ப் பொழியும். கவிதை ஆறு பெருக்கெடுத்து ஓடும் சனக்கடல் அமைதியாய் தம்மை மறந்து அதில் நனைந்து நிற்பர்.

1952ல் துருக்கியின் தந்தை முஸ்தபா கமால் பாச்சா பற்றி முஹர்ரம் புத்தாண்டு போட்டியில் பேசி அகில இலங்கை ரீதியில் முதற் பரிசாக தங்கப்பதக்கம் பெற்றார். 1962ல் இந்தியாவில் அறிஞர் அண்ணாவுடன் ஒரே மேடையில் பேசி அவரால் **ஈழமேகம்** என்ற பட்டமும் பட்டாடையும் போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அதே ஆண்டில் சம்மாந்துறை கலாபிவிருத்திக் கழகம் ஈழமேகத்தின் மேடை, வானொலிப் பேச்சு, பத்திரிகைக் கட்டுரைகளை உள்ளடக்கி உரை மலர் என்னும் புத்தகத்தை வெளியிட்டு அவருக்குப் பொன்னாடை போர்த்தி பொற்கிளி வழங்கியது. 1973ல் கலாபிவிருத்திக் கழகம் அவரது பொன் விழாவைக் கொண்டாடியது. 1975ல் கல்முனை சாஹிறா வில் அன்றைய கலாசார அமைச்சர் அவர்களால் **புலவர் திலகம் ஈழமேகம்** என பட்டம் சூட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டார்.

1978 தைத்திங்கள் 13, 14, 15ம் திகதிகளில் தென்னிந்தியா வில் நடைபெற்ற அகில உலக இஸ்லாமிய தமிழிலக்கிய ஆராய்ச்சி மாநாட்டுக் கவியரங்கில் உடனுக்குடன் கவியியற்றி, அரங்கேற்றி **கவித்துவம் பதித்த ஈழமேகம்** என்ற பாராட்டும் சூட்டப்பட்ட ஈழத்தவராவர். இதேயாண்டு இலங்கை பல்கலைக்கழகம் நடாத்திய கவிதைப் போட்டியிலும் பாராட்டுப் பெற்ற ஒரேயொரு முஸ்லிம் பெருமகன். 1978 வைகாசியில் சம்மாந்துறை வட்டார ஆசிரியர் சங்கம் **கவித்துவம் பெற்ற காயல் மேகம்** பட்டமும் பொன்னாடையும் போர்த்தி ஈழமேகத்தை கௌரவித்தது. 1979ல் கொழும்பு பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் நடந்தேறிய அகில உலக இஸ்லாமிய தமிழிலக்கிய நான்காவது ஆராய்ச்சி மாநாட்டில் நடை பெற்ற கவியரங்கில் பாவோதி இரசிகர்களால் பாராட்டும் பரிசிலும் பெற்றார். இவ்வாறு பலவேறுபட்ட போட்டிகளிலும் விழாக்களிலும்

பாராட்டும் பரிசிலும் பெற்ற ஈழமேகம் இறக்கும் வரை பாராட்டைப் பெற்ற ஒரு பெருமகன்.

இவை அனைத்துக்கும் முத்திரையாக 1983ல் சம்மாந்துறை பல நோக்குக் கூட்டுறவுச்சங்க செந்நெல் பணியக வெளியீடான **ஈழமேகத்தின் மழையும் துளிகளும்** எனும் கவிதைத்தொகுப்பு குறிப்பிடத்தக்கது. இத்தொகுப்பில் ஈழமேகத்தின் கவியாளுமையைக் கண்டு களி கொள்ளலாம். இவர், தான் வாழும் பிரதேசம், இயல்பு, உணர்வுகளைத் தன் கவிதைகளில் பரிமாறிக் கொண்டார். அவரது உரைநடை ஆற்றலினை **உரைமலர்** என்னும் நூல் செப்புகின்றது. **அறவழிக்கீதம்** என்னும் நூலினையும் அவர் தொகுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆரம்ப காலங்களில் தயாளன், புரட்சி நேசன் எனும் புனை பெயர்களில் எழுதினார். பின்னர் ஈழமேகமாய், புலவராய் நாவலராய் நம்மிடையே வலம் வந்தார்.

நாவலர் ஈழமேகம் ஒரு வித்தியாசமான மனிதர். சாதுவானவர். மனிதப் பண்புகள் நிறைந்தவர். தன்னலம் கருதாதவர். காணி, பூமி, சொத்து, சுகம் போன்ற மனித ஆசைகளுக்கு அப்பாற்பட்டவர். கண்ணைக் கெடுத்தவராயினும் கண்ணெதிரே வந்தால் மன்னிக்கும மனம் கொண்டவர். கண்ணீர் விடுவதில் பெண்களையே மிஞ்சி விடுவார். இந்த மனிதர் தன் வரலாற்றை எழுத ஆசை கொண்டார். அது நிறைவுறவில்லை. ஆனால் அந்தப்பணி அவசியம் என்பதனை சம்மாந்துறை இலக்கிய உலகு புரிந்து கொள்ளவேண்டும். ஈழமேகம் இல்லாத மீலாத் விழாக்களே இல்லை. அவர் எளிமையாக, நாசூக் காக, நளினமாக உரையாற்றுவார். அவர் பேச்சால், கவிதையால், ஆக்கங்களால் இன்னும் வாழ்கின்றார். ஈழமேகத்தின மறைவு ஈழத்து இலக்கிய உலகுக்குப் பேரிழப்பு. பொதுவாக ஈழமேகத்தின் வரலாறு எழுதப்படவேண்டும். அவர் ஈழத்து இஸ்லாமிய தமிழ் இலக்கிய உலகில் வரலாற்றுப்பதிவினைப் பெறவேண்டியவர்.

(நன்றி: நேசன்- ஜனவரி 1983)

இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்

# ஈழத்தின் புகழ் மிகு நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி

- அ.லெ.மு. றாசிக்

அடி அடித்தொறும் வழுவலால் விதிவிலக்கறியேன்
படி படித்த செஞ்சொற் றமிழ் அறிஞர் முன் பகர்தல்
இடி இடித்திடும் ஆரவாரத்திற் கெதிரோர்
நொடி நொடிப்பது போலுமென் பேச்சு

என்ற அவையடக்கப்பாடலுடன் மிக அமைதியாகப் பேச்சை ஆரம்பித்தார் அப்பிரசங்கி. மிகவும் மெதுவாகத்தான் அவர் பிரசங்கம் ஆரம்பமாகியது. ஆனால் நேரஞ்செல்லச் செல்ல அவர் அவையிலிருந்தோரை தமது சொல்லாற்ற லினால் பிணிக்கத் தொடங்கினார். மதி மயங்கிய சபையினர் முன்னே அவர் இலக்கிய உவமான உவமேயங்களை தானும் சுவைத்து சபையோருக்கும் படைத்தார். இலக்கிய அணியும் அலங்காரமும் மாத்திரமன்றி சிந்தைக்கினிய நாட்டார் பாடல்ளும் மண்டபத்தை நிறைத்தன. அறிவுக்கு வளமூட்டும் அவ்வுரை மக்கள் உள்ளத்தில் புத்துணர்வை விதைத்துக் கொண்டிருந்தன. இஸ்லாமிய வரலாற்றுச் செய்திகளை அவர் அள்ளி வீசியது மட்டுமன்றி இடையிடையே நகைச்சுவைத் துணுக்குகளையும் தந்து சபையோர் உற்சாகமிழக்காது பேசிக்கொண்டிருந்தார்.

ஒரு நல்ல பேச்சு எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு இலக்கணமாய் அமைந்த அப்பேச்சினால் சபையோர் தம்மை மறந்தனர். கண்மூடி வாய் திறந்து காதுகொடுத்துக் கொண்டிருக்கும் சபையோர் மத்தியிலே அவர்,

மாதமோ சித்திரை... நேரமோ பத்தரை
நானுமோ கத்துறன்... நீங்களோ நித்திரை...

என்றாரே பார்க்கலாம். அவையோர் துயில் நீங்கி பதறி விழித்தனர். சிறந்ததோர் கச்சேரியைக் கேட்ட திருப்தியில் மக்கள் கலைந்து சென்றனர். இந்நிகழ்வு ஒருமுறை இருமுறையல்ல. எப்போதெல்லாம் அவர் மேடையேறுவாரோ? அப்போதெல்லாம் ஏற்படும் வழக்கமாகும்.

இவ்வாறு தம் சொல்லாற்றலால் மக்களை வென்றவர் புலவர் மர்ஹூம் எம்.ஐ.எல். பக்கீர்த்தம்பி ஆவார். தமிழகத்தின் தனிப்பெருந் தலைவன். தமிழ் உரைநடைக்கே புதுவழிகாட்டியவர். அறிஞர் அண்ணாத்துரையினால் **ஈழமேகம்** எனப்பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டவர்.

இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும் அம்மென்றால் ஆயிரமும் ஆகாதோ' எனப்பாடிய கவி காளமேகத்தைப் போல எமது ஈழமேகமும் ஓர் ஆசுகவியாவார்.

சிறுவர் முதல் பெரியோர் வரை தமிழ் இலக்கிய மணம் பரப்பும் கிழக்கு மாகாணத்தின் தெற்கே சம்மாந்துறையில் மட்டுமன்றி நாட்டின் பல பாகங்களிலும் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றிய பக்கீர்த்தம்பி அவர்களை அவர்களது மாணாக்கர் மட்டுமே அறிவர். ஆனால் பாவலராக நாவலராக உலா வந்த ஈழமேகம் அவர்களை தமிழ் கூறு நல்லுலகே நன்கறிந்தது.

இலங்கை வானொலியில் நற்சிந்தனைகள் வழங்கத் தொடங்கிய அவரை முஸ்லிம் சேவையினர் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். இலக்கியம், சமயம், இஸ்லாமிய வரலாறு எனப்பல தலைப்புக்களில் அவரை உரையாற்ற வைத்து நேயர்களுக்கு விருந்து படைத்தனர். இன்றும் சில சந்தர்ப்பங்களில் அவரது உரைகள் மறு ஒலிபரப்புச் செய்யப்படுகின்றன. அவரது உரைகள் அடங்கிய **உரைமலர்** நூல், மேடைப் பேச்சுக்கலை பயில்வோருக்கு நல்லதோர் வழிகாட்டி நூலாகத் திகழ்கின்றது.

1983ல் சம்மாந்துறைப் பொதுமக்கள் அவருக்கெடுத்த வைரவிழாவின்போது நாவலர் பட்டம் சூட்டிக் கௌரவித்தனர். அவரது **மழையும் துளிகளும்** நூலும் வெளியிடப்பட்டது. சமூக சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட அவரது கவிதைகள் உணர்ச்சி வளமிக் கவை.

'எச்சிலை வீசி எறிகின்ற சோற்றுக்குப்
பிச்சைகள் போடும் பெருஞ் சண்டை- இச்சகத்தில்
மாறாத வாழ்வு மலராதோ ஏழை பசி
ஆறாதோ ஐயகோவே' என்று பாடுகிறார்.

மேலும்,

ஆனையின்மேல் அம்பாரி கட்டியூர்ந்த
அரசர்களும் பசிக்கொடுமை தாங்கிடாமல்
மானமெல்லாம் தான்கெட்டு பிச்சை கேட்க
வைத்ததுவும் உலகறிந்த உண்மையாகும்
ஏனிதனைச் சொல்கிறேனென்றால் கல்வி
எவரையுமே தள்ளாது அவையின் முன்னே
சோறுகொடுத்தடிபணிந்து மதிப்பளிக்க
கொடுத்தும் அழியாத செல்வம் கல்வியொன்றே

என்று கல்வியைப்பற்றிக் கூறுகிறார்

பலநூறு கவிஞர்களையும் எழுத்தாளர்களையும், மேடைப் பேச்சாளர்களையும் உருவாக்கிய ஈழமேகம் மறைந்தாலும் அவரது இலக்கியப் பேரர்களாலும் ஆர்வலர்களாலும் மறக்கொணாது என்றும் நினைவு கூரப்படும் பெருமைக்குரியவராகத் திகழ்கின்றார்.

(1998 இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சி
உரையினைத் தழுவியது)



**1983ம் ஆண்டில் ஈழமேகத்துக்குஎடுக்கப்பட்ட விழாவின்போது மாலை அணிவித்து வரவேற்கப்படும் காட்சி**

# வரகவி ஈழமேகம்

*- மருதூர்க்கொத்தன்* **வி.எம். இஸ்மாயில்**

ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்கள் அசாத்தியமான ஆற்றல் வாய்ந்த அற்புதக்கலைஞர். அன்னாரை, பழகுதற்கு இனிய மனிதர், சொற்கொண்டல், கவிஞர், நல்லாசிரியனும் அதிபரும் என்ற நாற் கோணங்களில் ஆராயலாம்.

வயது வித்தியாசம் பாராது பெரியவர், சிறியவர் என்ற பேதம் நோக்காது அன்பாகவும், இனிமையாகவும், கலகலப்பாகவும் பேசும் அவரது சுபாவத்தில் குழந்தை மனம் குலவி நிற்கும். அடுக்கு மொழியில் அழகிய இனிய வார்த்தைகளால் முகஸ்துதி பண்ணி அவர் பேசுவது சுவைக்கத்தக்கதாக இருக்கும். மெய்ம்மறந்து சிரிக்க வும் வைக்கும். தானும் மகிழ்ந்து மற்றவரையும் மகிழ வைப்பதே அவரது வாழ்க்கைக் குறிக்கோளாகவிருந்தது. 'எல்லோரும் இன் புற்றிருப்பதுவேயல்லாமல் வேறொன்றும் அறியோம் பராபரமே' என்கின்ற பரந்த அடிப்படையைக் கொண்டது அது.

அகில இலங்கை முஸ்லிம் வாலிப இயக்கம் நடாத்திய நாடு தழுவிய பேச்சுப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றதோடு அவரது சொற்பொழிவுப்பணி தமிழ் கூறும் நல்லுலகெல்லாம் பரவியது. பொருள் பொதிந்ததாக அடுக்கு மொழியில் அங்கதச்சுவை மேலோங்கி நிற்க மணித்தியாலக்கணக்கில் அவர் பேசும்போது சபை அடங்கி அனுபவிக்கும். தமிழ்நாட்டின் சொற்கொண்டல் பேராசிரியர் கா.அப்துல் கபூர் அவர்களின் அழைப்பினபேரில் தமிழ் நாட்டின் பட்டி தொடடி யெல்லாம் அவரது சொன் முழக்கம் ஈழமுழக்கமாக எதிரொலித்தது. பேச்சிலே தனக்கொரு பாணியமைத்து அதிலே முத்திரை பதித்து எல்லார் மனதையும் தொட்டு நின்றார்.

கவிதை என்பது இறைவனால் அவருக்குக் கொடுக்கப்பட்ட அருட்கொடை. **வரகவி**. மனம் எழுந்த மாத்திரத்தில் எந்தப்பொருளிலும் பேப்பறும் பேனையும் எடுக்காமலே வாயால் கவிபாடி முடிக்க வல்லாண்மை கொண்டிருந்தார். எனது அனுபவத்தில் இரண்டு உதாரணங்களை என்னால் சொல்லமுடியும். கல்முனை நகரில் பழைய பஸ் தரிப்பிடம். நீலாவணனும் நானும் மட்டக்களப்புக்குப் பயணமாக வண்டியில் அமர்ந்திருக்கிறோம். கணீர் என்ற குரலில் கவிமழை எங்களை ஈர்க்கின்றது.

பாலாகச் சுவைக்க தேனாக இனிக்கப்
பாட்டெழுதும் நீலாவணனும்
முத்தாக நிறைந்த சத்தாகக் கதைசொல்லும்
மருதூரின் கொத்தனும்
ஒட்டிப்பிறவா இரட்டையர் போல
எங்கேயிப் பயணமோ?

இவைதான் அந்தப்பாட்டு வரிகள். கறுத்த அரைக்குடை தலைக்கு மேல் சேவிக்க பஸ் அருகில் நிற்கிறார் ஈழமேகம். வாதத்தால் எடுத்த எடுப்பில் கவி சொல்லும் வித்தரரத்தால் எவராலும் மடக்கமுடியாத ஜாம்பவான் என்பதன் குறியீடாக மடக்கமுடியாத கம்பி கொண்ட அரைக்குடை, கறுத்தக்குடை, பருத்தி நூல்கொண்டு நெய்த சீலைக்குடை. வெய்யில் புக முடியாத உத்தரவாதக்குடை. இருந்தும் முகத்தில் வியர்வை அரும்புகட்ட, அலைந்த களைப்பின் முகவரி திருத்திய முகம். தெற்றுப்பல் தெரிய சிரிக்கும் சிருங்காரப் புன்னகையுடன் ஈழமேகம் காட்சி தந்தார். அம்பாறை பஸ் பிடித்துச் சம்மாந்துறைக்குச் செல்லவந்த வரவு அது. இருந்த நாங்கள் எழுந்து கீழே இறங்கி மரியாதை செய்து குசலம் விசாரித்துக் கொண்டோம்.

அவர் அம்பாறை பஸ்ஸில் ஏற, நாங்கள் மட்டக்களப்பு பஸ்ஸில் பயணமானோம். நீலாவணண் சொன்னார் 'ஈழமேகம்- இந்த ஆளுக்கு எவ்வளவு பொருத்தமாக அமைகிறது. காளமேகம் இவருக்கு குற்றேவல்தான் புரிய வேண்டும்'என்று. 'இம்' என்ற உடனே எதுகை மோனை சல்லாபிக்க, சந்தவின்பம் களை கட்டி நிற்க, தளை தட்டாத சீரொழுங்காக, அடிவரையறை செய்து பாடும் வல்லமை பெற்றிருந்த ஈழமேகம் எம். ஐ. எல். பக்கீர்த்தம்பி அவர்கள் தனக்கு நேர் தானேயாகித் துலங்கிய கவி வள்ளலாவார்.

அவரது வரகவித்தன்மைக்கு இன்னொரு உதாரணம்- அவரும் நானும் சம்பந்தப்பட்ட அனுபவம்-நீங்காத நினைவாக என்றும் நிலைகொண்டு நன்றியுணர்வுடன் ரீங்காரம் செய்யும் அனுபவம் அது.

1970 ம் ஆண்டு பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். கல்முனை வட்டாரப் போட்டியின் இறுதி அங்கமான நாடகப்போட்டி கல்முனை கார்மேல் மகளிர்கல்லூரியில்நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.நடுவர்களில் ஒருவராக ஈழமேகம் அவர்களும்பங்குபற்றிக் கொண்டிருந்தார். நான் எழுதி நெறிப்படுத்திய 'ஆபிரகாம் லிங்கன்' நாடகமும் மேடையேறியது. கலி வெண்பாவில் எழுதிய கவிதை நாடகம். சிறுவன் ஆபிரகாம் லிங்கனாகவும், தாயாகவும் நடித்த பத்து வயதேயுடைய சிறுவனும்



அரசினர் பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை

சிறுமியும் தங்களை மறந்து, கதையில் ஒன்றி பாத்திரங்களாகவேமாறி நடித்தனர். சோக ரசம் பிழியும் கதைப்புணர்ப்பு இருவரும் மாலை மாலையாக கண்ணீர் சிந்தி நடித்தனர். அந்த நடிப்பும், நடிப்புக்கு உயிரூட்டிய வெண்டளையில் அமைந்த உரையாடலும் எல்லார் மனங்களையும் பிணித்து உருக வைத்தன. பார்வையாளர்களையும் கண்ணீர் சிந்த வைத்த அற்புதம் அது.

ஈழமேகம் மத்தியஸ்தம் செய்ய வருகிறார் என்பது எனக்குத் தெரியாது. எனது நாடகம் என்பதும் அவருக்குத் தெரியாது. மேடையில் நான் தலைகாட்டவும் இல்லை மருதமுனையிலிருந்து வந்த நாடகம் என்பதை எப்படியோ அவர் அறிந்து கொண்டார் போலும். வெளியில் நின்ற என்னிடம் ஒரு காகிதத்துண்டை ஒருவர் கொண்டு வந்து தந்தார். அதில் அழகான எண்சீர் விருத்தப்பா ஒன்றும் கீழே ஒரு குறிப்பும் எழுதப்பட்டிருந்தது. ஈழமேகம் என்றும் பொறிக்கப்பட்டிருந்தது. அவ்விருத்தப்பா அழித்தல் திருத்தல் இல்லாது, உருவச் செழுமை யோடு, சந்தம் பிழைக்காமல் எழுதப்பட்டிருந்தது. நடிப்பைப் பாராட்டி, நெறியாள்கையைப் பாராட்டி, மொழி நடையைப்பாராட்டியிருந்தது விருத்தம்.

அங்கே கலைஞர்களுக்கிடையேயான ஆத்ம தரிசனம் நெடுங் கோபுரமாக எழுந்து நின்றதை காணமுடிந்தது. மருதமுனை என்றதும், வெண்சீர் வெண்டளை மிகுந்த வெண்டளையில் இப்படியொரு நாடகத்ததை நான்தான் எழுதியிருப்பேன் என்று நிச்சயித்த அவரது மதியுகம் என்னை வியப்பில் ஆழ்த்தியது. அந்தச் சந்தடிக்குள்ளும் வெட்டித்திருத்துதல் இல்லாது திருத்தமான ஒரு விருத்தப்பாவை எழுதியிருந்த அவரது கவிதா சாமார்த்தியத்தை எண்ணி ஆச்சரியப் பட்டேன்.

'சிங்க மறக்குலத்துச் செம்மல் கொலம்பஸின்
தங்கக் கதையைத் தருகின்ற புத்தகத்தை
பங்கப்படுத்திய பாவியெனைக் கொல்லுங்கள் '

என்ற இந்த வரிகளையும் குறிப்பிட்டு 'இவை என் நெஞ்சை உலுக்கிவிட்டன' என்றும் எழுதியிருந்தார். அவரதுசெவிப்புல நுட்பத்தையும் மனப்பாட ஆற்றலையும் எண்ணி அதிசயித்தேன்.

நாடகம் இரு காட்சிகளைக் கொண்டது. 15 நிமிட நாடகம். 'செற் அமைத்துக் காட்சி மாற்றங்களைக்க காட்டமுடியாது. ஆபிரகாம் லிங்கனின் ஏழைக்குடிசையிலும், பிரபுவின் மாளிகையிலும் காட்சிகள் நிகழவேண்டும். காகித அட்டையில் ஒட்டிய ஏசுநாதர் படத்தை முதற் காட்சியின்போதும், கண்ணாடிச் சட்டமிட்ட பெரிய ஏசுநாதர்

படத்தை அடுத்த காட்சியிலும் பாடசாலைச் சுவரில் தொங்கவிட்டேன். இந்த உத்தியையும் பாராட்டி எழுதியிருந்தார். இந்த நுணுக்கத்தைக் கண்டு பிடித்தவர்கள் இருவர். ஒருவர் ஸக்காப் இஸற் மௌலானா, அடுத்தவர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்கள். ஈழமேகத்தின் கலாரசனைக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

**மழையும் துளிகளும்** என்ற அவரது கவிதைத் தொகுதி, அவரது கவிதா விற்பன்னத்துக்கான சரியான அறுவடை என்று சொல்ல முடியாது. பல பார காவியங்களை எழுதிக் குவித்திருக்க வேண்டிய வல்லபம்-அருட்கொடை அவருக்கி-ருந்தது. அதை அவர் செய்யாது விட்டது பேரிழப்பாகும்.

மேடைப் பேச்சும் வானொலிப் பேச்சும் அவரைத் திசைதிருப்பி விட்டன. சொற்பொழிவில் காட்டிய ஆர்வத்தை கவிதையாக்கத்தில் அவர் காட்டியிருந்தால் உமறுப்புலவருக்கு நிகராகவோ, புலவர் நாயகம் சேகுனாப்புலவருக்கு நிகராகவோ, எழுந்து நின்றிருப்பார். அர்ப்பண சிந்தையுடன் பாடசாலைகளில் அதிபர் வேலை பார்த்ததுவும் ஒரு காரணமாயிருக்கலாம். எனது சொந்த அனுபவம் இப்படிச் சொல்ல வைக்கிறது. இப்பாடசாலை அர்ப்பணிப்பு பல கலைஞர்களின் சக்தியைத் திசைமாற்றம் செய்து விட்டன.

அச்சில் வராத அவரது கவிதைகள் நிறைய இருக்கலாம். அவற்றை நூலுருவாக்கி வெளிக்கொணர்வது இலக்கிய சமுதாயத்தின் தலையாய கடமையாகும்.

13812



**வைர விழாவின் போது தாறுல்உறூப் வித்தியாலயத்தின் சார்பில் அதன் அதிபர் அல்ஹாஜ் கே.எல்.ஏ.றசூல் அவர்களால் பொற்கிழி வழங்கப்பட்டது.**

# இந்தியத் தமிழகத்தின் காளமேகம் மட்டக்களப்புத் தமிழகத்தின் ஈழமேகம்

- அல்ஹாஜ் எம் எம் எம் மஹ்றூப் கரீம்

இலக்கிய வரலாற்றிலே காளமேகப் புலவர் காலத்தால் மறக்கமுடியாத அளவிற்கு கருத்தைக் கவர்ந்தவர். அதேபோல் அவருக்கு இணையாக உள்ளவர் என தமிழ் நாட்டு புவலா பெருமக்களே உவந்து அழைத்த சிறப்புப் பெயரை உடையவரே ஈழமேகம் பக்கீர்த் தம்பி ஆசிரியர்- அதிபர் பெருந்தகையாவார்.

இந்தியத் தேசமாம் தென்னகத்தில்
காயற் பட்டினம் என்றொரு நாடு
இதற்கீடு இலங்கையில் எல்லாவகையிலும்
காத்தான்குடி என்று பாடு.
.... .... .... .... .... .... ....
முன்னாலே வந்த மூதாதையர் தந்த
வியாபார சமய அறிவோடு
பெயர் முன்னெழுத்தாக
முழங்கிடும் காவன்னா
காவன்னா முன்வரும் சோடு... ...

என்று, முந்நூறு வருடங்களுக்கு முன்பு காத்தநகரின் மூத்த தமிழ்ப் புலவர் ஒருவர் காயல் பட்டினத்தையும் காத்தான்குடியையும் இணைத்து சிறப்பித்துக் குறிப்பிடுகின்றார். இச் சிறப்பான ஈர் ஊர்களுக்கும் ஈழமேகத்துக்கும் நெருக்கமாயுள்ள தொடர்பு இன்றும் எம் நெஞ்சங்களில் நீங்காத நினைவாக நிலைத்து நிற்கிறது.

1978ம் ஆண்டு இந்தியத் தமிழகத்தின் சங்கத் தமிழ் ஒலித்த வங்கக் கடலோரத்தில் பொங்கல் திருநாளன்று ஆரம்பித்தது அனைத் துலக இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மகாநாடு. இம்மகாநாட்டிற்கு ஈழத்திலிருந்து சென்ற இருபத்தியொரு பேராளர்களில் முதல்வராக எம்முடன் இருந்தவர் ஈழமேகம் பக்கீர்த்தம்பீ அதிபர் அவர்கள்.

மன்னார் வழியாக நீராவிக்கப்பல் ஊடாகச் சென்ற அந்தப் பயணம் இன்றும் நீங்காத நினைவாக பசுமரத்தாணி போல் அப்படியே பதிந்து நிற்கின்றது. பகல் நேரம் உச்சிவெயிலையும் துச்சமென மதித்து கப்பலின் மேல் தளத்தில் நின்று பரந்து விரிந்த கடலைப் பார்த்துக் கொண்டிருந்தபோதே கவிஞரின் ஹாஸ்ய வெடிகள் காதைத்

இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்...

துளைக்கின்றன. என்றாலும் நேரம் ஆக ஆக பசி வந்து பத்தும் பறக்கும் பரிதாபமான சூழ்நிலை என்ன செய்வோம் சேர் என்று கேட்டபோதே தனது பாதுகாப்புப் பையைத்திறந்து பத்து ரூபாய் இந்திய நாணயத்தை எடுத்துத் தந்து கப்பலில் அப்பிள் வாங்கி அனைவரும் உண்டதை இன்றும் நினைக்கிறேன்.

கப்பல், புகையிரதம், பஸ் என்று மாறி மாறி பயணம் செய்து அன்றிரவு 1.52க்கு அனைத்துலக இஸ்லாமிய ஆராய்ச்சி மகாநாடு நடக்கும் காயல் பட்டினத்தை அடைந்தோம். நாம் தங்குவதற்கு ஒழுங்கு செய்த வீட்டிற்கு முன்பாகவே அற்புதமான அலங்காரப் பந்தலுடன் மிக விசாலமான நீளமான பந்தல் போடப்பட்டிருந்தது. வந்த களைப்பையும் பொருட்படுத்தாது, முதலில் அப்பந்தல் அமைப்பைப் பார்ப்போம் வாருங்கள் என்று எம்மையும் அழைத்துச் சென்றவர் இறுதியில் இரவு இரண்டு மணியாகியும் இருப்பிடம் வந்து சேரவில்லை. கடைசியாக களைத்து இளைத்து வந்த அவரிடம் எங்கே சேர் இவ்வளவு நேரமும் சென்றீர்கள் என்று விசாரித்தபோதுதான்...மாநாட்டின் அமைப்புக்குழுத்தலைவர் அல்ஹாபிஸ் செய்யது அஹ்மத் அவர்களைச் சந்தித்து கதைத்த போது இங்குள்ள ஒவ்வொரு தூணிலும் ஒவ்வொரு புலவரின் பெயர் பொறித்துள்ளோம். உங்கள் ஊர்ப்புலவர் ஒருவரும் உள்ளார். கண்டு பிடியுங்கள் பார்ப்போம் என்று கூறினார். அதைத்தேடிக் கண்டு பிடிப்பதில்தான் இவ்வளவு நேரம் சென்று விட்டது' என்று கூறினார். வயதில் மூத்தவராய் இருந்தபோதும் இருபது வயது இளைஞனைப் போல் எம்முடன் சகல விடயங்களிலும் சுற்றிப் பார்ப்பதிலும் சுழன்றித் திரிவதிலும் தான் சளைத்தவரல்ல என்ற வகையில் நடந்து கொண்டார். மாநாட்டில் கவிக்கோ அப்துர் றஹ்மானின் தலைமையில் நிகழ்ந்த கவியரங்கில் ஈழமேகத்தின் இடி இடித்தது இன்றும் நினைவில் நிற்கிறது.

காயல் பட்டின வாசியாக காத்தான்குடியில் குடிபுகுந்த மீராலெப்பை ஆலிம் முகம்மதிஸ்மாயிலுக்கும் அதே காயலைச் சேர்ந்த- காத்தான்குடியிற் பிறந்த மஹ்மூதுலெப்பை ஹாஜியின் புதல்வி பாத்திமா மௌலவியாவிற்கும் இளைய மகனாக சம்மாந்துறையிற் பிறந்தவர்தான் இவர். காத்தான்குடியில் அன்று சிறப்புப் பெற்றிருந்த மர்ஹூம் மௌலானா மௌலவி அபூபக்கர் லக்னவீ (புத்தளத்து ஆலிம்) அவர்களிடம் ஆரம்பக் கல்வியுடன் ஆறு கிதாபுகள் வரை ஓதினார். இடையே தமிழ் ஆர்வம் ஒருபக்கம் ஈர்க்க முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரின் ஊரவரான பண்டிதர் சிவசம்பு ஆசிரியர் அவர்களிடம் அட்டாளைச்சேனை சாதனா பாடசாலையில் தமிழ் இலக்கண, இலக்கியங்களை ஐயந்திரிபறக் கற்றார். 1944ல் சிரேஷ்ட

தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தார். 1945-46 ஆண்டுகளில் அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெறும்போது அங்கு தமிழ் கற்பித்துக்கொண்டிருந்த பண்டிதர் செ.பூபாலபிள்ளையிடம் மேலும் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்று அறிவை வளர்த்துக்கொண்டார். வெண்பாவிற் புகழேந்தி என்றதற்குப் பின் வெண்பாவிற் புலவர் மணி என்று சிறப்பித்துக்கூறும் தீர்க்கதரிசிக் கவிஞர் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களை ஏகலைவனைப் போல் குருவாகக்கொண்டு வெண்பா இயற்றி ஒரு போட்டியில் முதற் பரிசும் பாராட்டும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. பயிற்சி பெற்ற முதல் ஆசிரியராக 1947ம் ஆண்டு காத்தான்குடியின் ஆதிப்பாடசாலை யான பழையதெரு அ.மு.க. (தற்போது அல் ஹிறா) பாடசாலையில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்து இவ்வூரின் பல்வேறு சிறப்பு மிக்க மாணவர்களை உருவாக்கினார். இலங்கைப் பல்கலைக்கழக, புறூணைப் பல்கலைக்கழக பேராசிரியராக இருந்த டாக்டர் ஏ.சி.எல். அமீர் அலி (கவிஞர் அப்துல் காதர் லெவ்வை அவர்களின் ஏக புத்திரன்), காத்தான்குடி பட்டின ஆட்சிமன்ற தலைவராகவிருந்த மாஹூம் அஷ்ஷெஹீத் அகமது லெவ்வை போன்றோர் அவரது மாணவர்களில் குறிப்பிடத்தக்க சிலராவர். விதியின் சதியால் பதியைப்பெறுகின்ற பாக்கியம் இவருக்குக் கிடைக்கவில்லை. இல்லாவிடில் இவர் நிரந்தரமாக காத்தான்குடி வாசியாகவே மாறியிருப்பார்.

இவரின் பிறப்புப் பரம்பரை, முதல் ஆசிரியப் பிரவேசம் இவற்றைத்தவிர இவருடைய புதல்வர் எனது மாணவர் ஐந்து வருடங்களுக்கு மேல் இவரின் ஆசிரியராக விடுதி ஆசிரியராக காத்தான்குடி மத்திய மகாவித்தியாலயத்தில் கடமை யாற்றியபோது மாணவரின் தந்தை என்ற வகையில் பல முறை இவருடன் நெருங்கிப்பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இதைத்தவிர இவர் சிறப்புப் பேச்சாளராக கலந்து கொண்ட பல மேடைகளில் நானும் பேச்சாளராகக் கலந்து கொண்டேன். அங்கு ஆயிரக்கணக்கான மாணவ மணிகளை இலக்கிய ஆர்வலர்களை, பேச்சாளர்களை இளங்கவிஞர்களை உருவாக்கியவர் என்ற வகையில் இன்றும் அவ்வூர் மக்களால் நினைவுகூரப் படுகின்றார்.

'... ... ...
குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை,
கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை
நிலம் மலை நிறைகோல், மலர் நிகர் மாட்சியும்,
உலகியல் அறிவோடு உயர் குணம் இணையவும்
அமைபவன் ஆசிரியரன்ன... ... ...'

என்று ஒரு நல்லாசிரியரின் நற்பண்புகள் பற்றி நன்னூலாசிரியர்

நயம்படக் கூறுவதற்கேற்ப அத்தனை பண்புகளும் ஒருங்கே அமையப் பெற்ற ஓர் உத்தம ஆசிரியராக அவரைத் தரிசிக்கின்றோம்.

ஹாஸ்யத்துடனிணைந்த கருத்துரைகளை அழகான அடுக்கு மொழியில் எடுத்துக்கூறும் ஆற்றல் படைத்த இவரது பேச்சுக்கள் பல கூட்டங்களிலும் விழாக்களிலும் இலங்கை வானொலியிலும் ஒலித்ததை நாம் கேட்டிருக்கின்றோம். சர்க்கரைப் பந்தரில் தேன்மழை பொழியுமாப் போன்று இவரது பேச்சு இன்றும் எமது காதுகளில் தேன் மழையாக ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

1978 காயல் மாநாட்டில் கலந்து கொண்டு நாடு திரும்பியவர்களில் எமது மட்டக்களப்புத் தமிழகத்தைச் சேர்ந்த கவிஞர் ஈழமேகம் அவர்களையும், புலவர் மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களையும் காத்தான்குடிக்கு அழைத்து வரவேற்பு அளிக்கப்பட்டது. அஸ்ஸெய்யிது செயின் மௌலானா பள்ளிவாசல் தலைவர் மர்ஹூம் ஜின்னா ஹாஜியார் அவர்களின் தலைமையில் நான் செயலாளராக-விருந்து சிறப்பு விழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்விழாவில் கவிஞர் ஈழமேகம் அவர்களை இரவு பத்தரை மணிக்கு பேச்சுக்கு அழைத்தபோது 'மாதமோ சித்திரை நேரமோ பத்தரை நீங்களோ நித்திரை, நான் கூற வந்ததோ கருத்துரை' என்று தொடங்கி பன்னிரண்டரை மணிவரை அவர் ஆற்றிய உரையும் அவையோரை அலுப்பேற்படாது தனது சிறந்த பேச்சினால் சிரிக்க வைத்த நிகழ்ச்சியும் இன்றும் எனது உள்ளத்தில் நீங்காத நினைவாக இடம் பெற்றுள்ளது.

இயற்கையிலேயே கவித்துவ வல்லமை மிக்க இவர் வாய் திறந்த உடனேயே கவிதை கூறும் வல்லமை படைத்தவர்.ஒரு சந்தர்ப்பத்தில் அல்குர்ஆனைப் பற்றி அழகு தமிழில் கூறுங்கள் என்று அறிஞர் ஒருவர் கேட்டபோது,

'கல்விக்குத் தாயாகி கலையுமாகி
கலைஞானப் பொக்கஷத்தின் வடிவமாகி
வல்லகலை ஞானத்தின் வழியதாகி
வாழ்கின்ற சமுதாய வரம்பதாகி
எல்லாமே உள்ளுறைந்த இன்பமாகி
ஏகத்துவக் கொள்கை ஏடதாகி
கல்லுமே கரைந்துருக ஞானமீந்த
கலைச்சுரங்கம் அல்குர்ஆன்.'


என்று கேட்டோர் அதிசயிக்க பாட்டாகக் கூறிமுடித்தார். இன்னும் சீதனக் கொடுமையை எதிர்த்து பல கட்டங்களில் தமது கவிதை

அம்பால் துழைத்துக் காட்டிய கவிஞர்,

'உழைத்தவர் உதிரம் உண்டு
உயிர் பிழைக்கின்ற பேடி
குலமெனும் பெருமை காட்டி
குடி கெடுக்கின்ற பேடி
கற்பதைச் சூறையாடி
களி பெறுகின்ற பேடி.
சீதனப் பேடிக்கெல்லாம்
செருப்படி கீரன் காதை.'

என்று நாவலாசிரியர் இளங்கீரன் எழுதிய 'நீதியே நீ கேள்', 'இங்கிருந்து எங்கே? தொடர்கதைகளைப் பாராட்டிய ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்கள் எம்மைவிட்டு இன்று மறைந்தாலும் அவரது பீரங்கிப் பேச்சும் ஹாஸ்ய வெடியும் ஆழ்ந்த ஆன்மீக அற்புத சிந்தனைகளும் எமது உள்ளத்தில் உறைந்துள்ள அவரை ஒரு நவயுக நக்கீரன் என்று கூறினால் மிகையாகாது.

---



**வித்துவான் FXC நடராசா ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்களுக்கு நாவலர் பட்டம் வழங்கிக் கருத்துரை வழங்குகிறார். மேடையில் அன்றைய அமைச்சர் எம்.ஏ. அப்துல் மஜீத் வீற்றிருக்கின்றார்.**

# இறைவனின் அருட்கொடை ஈழமேகம்

**- மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத்**

1954ம் ஆண்டு என நினைக்கிறேன். நான் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது நிகழ்ந்த சம்பவம்.

ஆண்டு சரியாக நினைவில்லா விட்டாலும் நிகழ்வு பசுமையாக நினைவிருக்கிறது.

எனது ஊரில் எனது வீட்டிற்கு அண்மையில் இரண்டாம் குறிச்சி தைக்காப்பள்ளியில் மீலாத் விழா.

மேடை கட்டி அம்மேடையை அலங்காரம் செய்திருந்தார்கள். இஷாத்தொழுகையின் பின் விழா ஆரம்பமாகியது.

இந்த விழா பற்றி ஊர் முழுவதும் ஒரே பிரச்சாரம். அதுவும் அடுக்கு மொழி சொற்பொழிவாளர் சம்மாந்துறை பக்கீர்த்தம்பி மாஸ்டரின் வருகை பற்றியதே பிரச்சாரத்தின் முழு நோக்கமுமாக விருந்தது.

எனது வகுப்பாசிரியரும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் இவரது பேச்சை தி.மு.க. பேச்சாளர்களின் பேச்சோடு ஒப்பிட்டுப் பேசியதும் எனது ஞாபகத்திற்கு வந்தது.

நானும் எனது பாடசாலை மாணவ மன்றத்தில் குட்டிப் பேச்சாளன் என்பதனாலும் பேச்சுக் கலையிலே தேர்ச்சி பெற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி நின்றபடியினாலும் நேரகாலத்தோடு மீலாத் விழா நடைபெறும் இடத்திற்கு சென்று விட்டேன்.

மேடைக்குப் பேச்சாளர்கள் வந்து சேர்ந்து விட்டார்கள். எனக்கு அருகில் நின்றவர்களிடம் யார் அந்தப் பக்கீர்த்தம்பி என உசாவி னேன். நீலத் தொப்பி போட்டிருப்பவர் எனச் சொன்னார் ஒருவர். சில மௌலவிமார் கேட்பவர்களை மனத்திலே கொள்ளாது மணித்தியாலக் கணக்கில் பேசிக்கொண்டிருந்தனர். எனக்கு அலுத்துவிட்டது. நேரமும் இரவு பதினொன்றைத் தாண்டிவிட்டது. வீடு போவோம் என நினைத்த போது, பேசிக்கொண்டிருந்த மௌலவி பேச்சை முடித்துக் கொண்டார்.

'நீங்கள் எல்லோருமே ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக் கும் அடுக்கு மொழிப் பேச்சாளர், பெருமானாரின் வாழ்க்கையை

இலக்கிய நயம்பட எடுத்து பேசக்கூடியவர், பல மேடைகளில் பேசியவர், பேச்சுப் போட்டியிலே தங்கப் பதக்கம் பெற்றவர்' எனப் புகழ் மாலை சூட்டி, 'அன்னாரை இப்போது பேச அழைக்கின்றேன்.' என்றதும் பக்கீர்த்தம்பி அவர்கள் எழுந்தார். கரகோஷம் வானைப் பிளந்தது. பின்னர் கூட்டம் அமைதியாயிற்று.

நான் கொஞ்சம் கொஞ்சமாக மேடையின் அருகே போக எத்தனித்தேன்.

பக்கீர்த்தம்பி அவர்கள் பேச ஆரம்பித்தார்.

'தகைமைசால் தலைவர் அவர்களே! 'கணீர் என்ற குரல். 'கண்ணியமிக்க உலமாக்களே! 'அக்குரலிலே ஓர் இனிமை இழை-யோடியது 'எந்த மண்ணிற்குமில்லாத மகிமை இந்த மருதூர் மண்ணிற்குண்டு. அதனால் இம்மண்ணிலே பிறந்தவர்களை நான் நேசிக்கிறேன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே அல்ஹம்துலில்லாஹ் என்றதும் சபையிலேயிருந்து 'அல்லாஹு அக்பர்' 'அல்லாஹு அக்பர்அல்லாஹு அக்பர்'என ஒலி எழுந்து வானோடு கலந்து சென்றது.

நான் உடல் சிலிர்த்து மெய் மறந்து நின்றேன்.சரியாக ஒரு மணித்தியாலம் பேசினார். இன்னும் பேசமாட்டாரா? என்றிருந்தது எனக்கு.

அவர் பேச்சிலே அடுக்கு மொழிகள் அலை புரண்டோடின. பழமொழிகள் பகட்டுக் காட்டிச் சென்றன. இடையிடையே கவிதை-கள்,அழகு காட்டின. அவர் கவிதைகளைச் சொன்ன பாணி கவியரங்-குகள் தோற்றுப் போகும். ஹாஸ்யங்கள், கதைகள், சம்பவங்கள் என எத்தனையோ விடயங்கள் அவர் பேச்சினுள் அடிமையாகி நின்றன.

இரம்மியமான இரவு என என்னுள் நான் நினைத்துக் கொண்டேன். எனது தகப்பனார் எனைப்பார்த்து '**இறைவனின் அருட்கொடை**. அதனால்தான் அவரது பேச்சு அவ்வளவு கவர்ச்சியாக இருக்கிறது.' எனக்கூறியவாறு என்னை வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

இந்நிகழ்வுக்குப்பிறகுநான்அவரைச் சந்தித்தது 1960ம் ஆண்டு, அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் ஆசிரிய மாணவனாக இருந்தபோது.

நான் மாணவ மன்றத்தின் செயலாளர் என்ற வகையில் பக்கீர்த்தம்பி அவர்களை மாணவ மன்றத்திற்கு விசேட பேச்சாளராக

அழைத்திருந்தேன். அழைப்பினை ஏற்று வருகை தந்து ஆசிரிய மாணவர்களின் அபிமானத்தைப் பெற்றுச் சென்றார்.

இதன்பிறகு எனக்கும் அவருக்குமிடையே நெருக்கமான தொடர்பு இருந்தது. இடையிடையே மடல் எழுதுவார். அவர்கள் என்னைப் பார்த்து 'தம்பி' என அழைப்பது இன்றும் என் காதுகளிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அவரது நினைவு வரும்போதெல்லாம் அவரின் 'உரைமலரைப்' பார்த்துக் கொள்வேன்.

பக்கீர்த்தம்பி அவர்கள் பேச்சுக் கலையோடு மனித நேயமிக்க உணர்வுகளை இரண்டறக் கலந்து, கலகலப்பான ஒரு ஜீவனாக நடமாடினார் என்பதற்கு அவரது நண்பர்கள் சாட்சியம் கூறுவார்கள்.



**போர்த்தப்பட்ட பொன்னாடையுடன் ஈழமேகம்**

# நாவலர் ஈழமேகம்- சில நினைவுகள்

- மருதூர் வாணன்

கவியரசர் என்ற பட்டம் யாராலும் சூட்டப்படாவிட்டாலும் நாங்கள்-கல்முனைப் பிரதேசத்து மக்கள்- 1960 களில் பக்கீர்த்தம்பி பாவலர் என்றே புகழ்ந்து மதித்து அவரின் நாவன்மையைக் கேட்டு வந்தோம்.அவர் பாடாத கருப்பொருளே இல்லை என்பேன். 1951ல் அவர் சுதந்திரன் வாரமலரில் எழுதிவந்தார்.

1970 ல் எனது 'முதல் இரவு' சிறுகதைத் தொகுதி வெளியீடு செனட்டர் மசூர் மௌலானா தலைமையில் மருதமுனை கிராமச் சங்கக் கட்டிடத்தில் நடந்தபோது பாவலர் பக்கீர்த்தம்பி கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார். அவர் பேசும்போது, நாங்கள் எல்லாம் அரசாங்க உத்தியோகம் பார்த்து பல ஆயிரம் ரூபா சம்பளம் எடுக்கிறோம். சாதாரண கூலி நெசவுத் தொழிலாளியான மருதூர் வாணனால் எப்படி இவ்வாறு அழகிய சிறுகதைத் தொகுதி போட ஆயிரக்கணக்கில் பணம் மிச்சம் பிடிக்க முடிந்தது.' என இடித்துரைத்த சங்கநாதம் இன்னும் எனது செவிகளில் ரீங்கரித்துக் கொண்டிருக்கின்றது. அவ்விழாவில் கொத்தன், மருதூர்க்கனி, அ.ஸ., முத்துமீரான், முகில் வண்ணன் போன்றவர்களும் ஈழமேகத்தின் இடித்துரைப்பை இறுமாந்து கேட்டுக்கொண்டிருந்தனர். இதனை என்னால் மறக்க முடியுமோ?

1971ல்அக்கரைப்பற்று பெரிய பள்ளியில் அ.ஸ.அப்துஸ்ஸமது தலைமையில் நடந்த மீலாத்விழாவில் நாவலர் ஈழமேகம் நயந்துரைத்த கவிதாமொழிகளில், இஸ்லாமியன் என்ற பெயரில் நாமெல்லாம் முகம்மது இஸ்மாயில். முகம்மது இப்றாஹீம் என்றெல்லாம் முத்திரை குத்திக் கொண்டு இஸ்லாமிய ஷரீஅத்துக்கு மாறாக சுரண்டல் வியாபாரம் செய்கிறோம். அந்நியர் கலாசார நடை, உடை, பாவனை, கஞ்சா, சாராயம் போன்ற போதை வஸ்துக்களை நுகர்கின்றோம். கூத்து, கும்மாளம், நாடகம், சினிமா என்றெல்லாம் காலங்கடத்துகிறோம். பாங்கு ஒலி கேட்பதையும் பொருட்படுத்தாது பஜனை செய்கிறோம். இதுவா இஸ்லாம்? இதுவா இஸ்லாமிய நாகரிகம்? .....ஆ ! இன்றும் நாவலர்பெருமான் பக்கீர்த்தம்பி அவர்களின் கணீர் என்ற இஸ்லாமியச் சங்கநாதம் என் நினைவுச் செவிகளுள் முரசடித்துக் கொண்டிருக்கிறது.

# இலக்கியத் தந்தை நாவலர் ஈழமேகம்

**- கவிஞர் ஈழக்குயில் இத்ரீஸ்-**

பத்திரிகையில் வரும் கவிதைகளைப் படித்து, இரசித்துப் பார்ப்பதில் மிகவும் அலாதி கொண்டவன். பி. டி. சாமியின் துப்பறியும் நாவல்களில், நாளொன்றுக்கு இரண்டு புத்தகங்கள் வீதம் வாசித்து முடிப்பவன், பாடசாலையில் மூன்றாம் வகுப்பு வரை கற்று, தொடர்ந்து படிக்க முடியாத நிலையில் இருந்தாலும், மேற்கூறப்பட்ட வாசிப்பு பழக்கத்தினாலும் ஏழை எளிய மக்களுக்கு பிச்சைச் சம்பளம், கூப்பன், வெள்ள நிவாரனம் என்பவற்றுக்கான விண்ணப்பங்களை எழுதிக் கொடுப்பதினாலும் (பல்வேறு எழுத்துப் பிழைகளுடன்) விரைவாக எழுதும் பயிற்சி கிடைக்கப் பெற்றவனாகவும் இருந்த எனக்கு, கவிதை எழுத வேண்டும் என்ற அவா மிக வேகமாக தோன்றியது.

தினபதி கவிதா மண்டலத்தில், மகாகவி பாரதியின் படத்துடன் வரும் கவிதைகளை மிகவும் கவனமாக படித்து, அதுபோன்ற கவிதைகளை எழுத வேண்டும் என்று துணிந்து, எனது மனதில் பட்ட, எனது சொந்த விடயமொன்றினை கற்பனை சேர்த்து **'வெயில் வளம் வேண்டும்'** என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதினேன். அன்றிரவு நித்திரை மறுத்து நின்றது. விடியும் காலைப் பொழுதினைக் காணவே கண்கள் ஏங்கின.

சம்மாந்துறை மகா வித்தியாலயத்தில் ஒரு கவிஞர் கற்பித்தார். அவரிடம் சென்று என்னை அறிமுகப்படுத்தி, நான் எழுதிய கவிதையினையும், தினபதி கவிதா மண்டலத்திற்கான பிரவேசக் கூப்பனையும் கொடுத்தேன். அவைகளைப் பெற்றுக் கொண்டு பாடசாலையிலிருந்து வெளிக்கிட்ட அக்கவிஞர், என்னையும் அழைத்துக் கொண்டு **'நெல்லு பிடிக்கட்டடி'** யில் உள்ளதொரு கடைக்கு அழைத்துச் சென்று சாப்பிடவும் குடிக்கவும் ஏற்பாடு செய்தார். பின்பு ஒரு கவிதை சொன்னார்.

**'சின்ன சின்ன கற்கள்**
**சேர்ந்து ஒன்றாய் கூடியே**
**விண்ணு யர்ந்த கோபுரம்**
**வீதி தோறும் காண்கிறோம்'**

என்று பாடினார். மேலும், 'தம்பி, கவிதை எழுதுவது இப்படி இருக்க வேண்டும். இவ்வாறான நல்ல, அழகான கவிதைகளை எழுதுங்கள், நான் அறிமுகம் செய்கிறேன்' என்றார். என் மனதுக்குள்

சற்று சலனம் ஏற்பட்டது. இருந்தாலும் அவரது உபசாரம் என்னை மகிழ்வித்தது. அதன் பின் எந்தவொரு கவிதையும் அவரிடம் கொண்டு சென்றதுமில்லை. படித்துக் காட்டியதுமில்லை. இருப்பினும் அக் கவிஞரை ஆற்றடியில், வீதியோரத்தில், கடைத்தெருவில் எங்கு கண்டாலும் அவரது உபசாரமே நினைவு வரும். அவருடன் பேசுவேன் அவரும் என்னுடன் பேசுவார். கவிதை, இலக்கியம் சம்பந்தமான விடயங்களை நடந்து நடந்து, குளித்துக்கொண்டு, குளித்த அரைகுறை யோடு பக்கத்துக்கடைக்குச் சென்று தேனீர் குடித்தும் பேசுவார். அதுவும் ஒரு வகையில் எனக்கு ஏணிதான்.

சம்மாந்துறை மகாவித்தியாலயத்தில் இருந்து நேராக 'தாறுல் உலூம்' பாடசாலைக்குச் சென்றேன். அப்பாடசாலையில் இன்னுமொரு கவிஞர் கற்பித்தார். அவரைப்பற்றி கேள்விச்செவி. அங்கு அவரிடம் பேசினேன். அவரும் சிரித்த முகத்துடன் பேசினார். உறவு கொண்டாடி னார். அது எனது இலக்கிய பயணத்தின் உந்து கோலாக மாறியது. அதன்பின், அக்கவிஞர் அவர்களே எனது இலக்கியத் தந்தையானார். நான் முதன்முதலாக சந்தித்த கவிஞர், தேனீர் உபசாரத்துடன் தன் னைப்பற்றி பேசினார். என்னைப்பற்றிப் பேசவில்லை. அவரது கவிதைகளைப்பற்றி பேசினார். என் கவிதைபற்றி பேசவில்லை. அதனால் என் இலக்கிய தந்தையாகும் பாக்கியத்தை இழந்தார். பின்பு சந்தித்தவர் தன்னை மறந்தார். என்னைக் கண்டார். நான் அவரைக் கண்டேன். அவரது மனைவி என் தாயார் ஆனார், அவர் மகள் சகோதரியானார். அவரது இரு பிள்ளைகளும் சகோதரர்கள் ஆனார்கள். இத்தகப்பனை புகழ்ந்து பேசுவதில் என்ன தவறு? அவரின் பெருமைகளைப் பேசுவதில் என்ன தப்பு?

என் இலக்கியப்பயணத்தை ஆரம்பத்தில் முளையிலேயே கிள்ளிவிடக்கூடிய ஒரு கவிஞரைக் கண்டேன். அவரது பெயர் எமக்குத் தேவையில்லை. இரண்டாவது சந்தித்த கவிஞர் என்னை வளப் படுத்தினார். வழி நடத்தினார். அவர் யார் தெரியுமா? அவர்தான் எமது மதிப்புக்குரிய மர்ஹூம் **நாவலர் எம்.ஐ.எல். பக்கீர்த்தம்பி ஈழமேகம் ஐயா அவர்கள்.** சம்மாந்துறை பட்டின சபை மண்டபத்தில் இருந்த நூலகத்தில் இருந்து நாவலரைச் சந்திக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மாலை நான்கு மணியளவில் வெளிக்கிட்டேன்.

நூலகத்தில் என்ன வேலை என்று கேட்கின்றீர்களா? அங்குதான் என் வாசிப்பு பழக்கம் அதிகமாகியது. நாளொன்றுக்கு சுமார் மூன்று, நான்கு மணித்தியாலங்களை செலவு செய்தேன். அதன் பயன்தான் இன்று நான் அனுபவிக்கும் திரண்ட செல்வங்கள். நாவலர் வீட்டுக்குப் போகும் எண்ணமும், அவரைச் சந்திக்க வேண்டும் என்ற அவாவும் ஒன்று கூடி பூமரச்சந்தியடியினால் நடந்து வந்தேன்.

கையில் ஒரு பிரயாணப்பையும், கமுக்கட்டில் தலையணை ஒன்றும் இருந்தன. குறுந்தாடி, மங்கலான வெள்ளை நிறம், புன்னகை பூத்த முகம், ஒளி பொருந்திய கண்களும் கொண்ட அந்த உருவம் என்னைக் கண்டதும் புன்னகை செய்தது. நான் குழைந்துபோய் குருவுக்குரிய மதிப்பும், தந்தைக்குரிய மரியாதையுடன் அருகில் இணைந்து நடந்தேன். அன்பே உருவாகி, அறிவுக் கடலாகி தென்பட்ட அந்த உருவம் சொன்னது 'இலங்கை வானொலியின் ஒரு பேச்சுக்குப் போகிறேன்'. அந்த புனித மனிதரின் கையில் இருந்த பிரயாணப் பையை வாங்கிக் கொண்டு கூடவே சென்று, பஸ் வரும் வரை காத்திருந்து வழியனுப் பினேன். அதன்பின் கொழும்புக்கு போவதற்கு முன்பே என்னிடம் சொல்லுவார். நான் அவரது வீட்டுக்குச் சென்று அவரது பொருட்களைச் சுமந்து கொண்டு கடுகதி பஸ் நிலையம் வரை சென்று வழியனுப்புவேன். அவரது ஒரு பயணத்தின் போது மட்டக்களப்பு ரயில் நிலையம் வரை சென்று அவரை வழியனுப்பி மீண்டுள்ளேன்.

சீதனப்பேய், தாயே உனக்காக, அன்பே மேகம் போன்ற என் கவிதைகளை சிபார்சு செய்தது மட்டுமல்லாது, கையோடு கொண்டு சென்று தினபதி காரியலயத்தில் ஒப்படைத்து பிரசுரிக்கப்படும் நாளையும் வந்து சொல்லுவார். ஊரில் நன்மதிப்புடன், நல்லாசானாக இருந்த அன்னார், எனது கவிதைகளை வெளியிடுவதிலும் முன்னின்று உதவியிருந்தார் என்றால் அவரது நல்ல சிந்தனை வேறு யாருக்கு வரக்கூடும்.

1971ஆம் ஆண்டில் இருந்து 1977ஆம் வரையிலான காலப் பகுதியில், நாவலர் வீட்டுக்குப் போய், அவருடன் தாறுல் உலூம் பாடசாலைக்குச் சென்று மாலை 6.00 மணி வரை பேசுவோம். நாவலர் அவர்கள் கவிதை பற்றிய பல்வேறு விடயங்களையும் சொல்லுவார். நல்ல சிறப்பு மிக்க கவிஞர்களின் கவிதைகளையும் கவிஞர்களையும் அறிமுகம் செய்து விளக்கம் கொடுப்பார். அவர் பார்வையில் மரபு கவிதையாளர்களே சிறந்து விளங்குவர். தமிழ் இலக்கியம் என்றால் என்ன? என்று அறியாத எனக்கு வழி காட்டினார். இன்று பல்வேறு பெரும் புலவர்களும், அறிஞர்களும் எனக்கு அறிமுகமாகி, அவர் களுக்கு நான் அறிமுகமாகி இருக்கின்றேன் என்றால் அவற்றுக்கு காரணமாகியவர் நமது நாவலர் ஈழமேகம் எம்.ஐ.எம். பக்கீர் தம்பி ஐயா அவர்கள்தான்.

கவிஞர் மாறன் யூ.செயின் அவர்களுக்கும் எனகும் அறிமுகம் இருந்தாலும், இருந்த அறிமுகம் இறுக்கமாவதற்கும், ஈழமேகம் ஐயா



அமீர் அலி பொது நூலகம்
நகர சபை - சம்மாந்துறை

அவர்கள்தான் காரணமாக இருந்தார். 1973 பங்குனியில், ஒரு நாள் நாவலர் ஈழமேகம் ஐயா அவர்களின் வீட்டில் அவர்களுடன் நானும், கவிஞர் மாறன் யூ. செயின் அவர்களும் கதைத்துக் கொண்டிருந்தோம். அப்போது, இனிமேல், 'ஈழக்குயில் சுலைமான் இத்ரீஸ்' என்ற பெயரில் கவிதை எழுதும்படி கூறினார்கள்.'அதன்பின், நான் மேகம் பொழிகின்றேன், நீ குயில் கூவும் என்றார். இதனை அவதானித்த கவிஞர் மாறன் யூ. செயின் அவர்கள் 'ஈழக்குயில் இத்ரீஸ்' என்ற பெயரில் எழுதுமாறு வேண்டினார். அதனை சரியென மீண்டும் ஈழமேகம் ஐயா ஏற்புரை வழங்கினார்கள். இந்த இருவரது ஊக்கத்தின் நிமித்தம் அன்றுமுதல் ஈழக்குயில் இத்ரீஸ் என்ற பெயரைப் பயன்படுத்தத் தொடங்கினேன். அன்று நாவலர் ஈழமேகம் ஐயாவுடன் சேர்ந்து ஈழக்குயில் இத்ரீஸ் ஆக என்னை மாற்றிய கவிஞர் மாறன் யூ. செயின் அவர்களுடன் முன்பிருந்த அறிமுகம் நேசம் கொண்ட உறவாக மாறியது.

கவிஞர் சம்மாந்துறை அஸீஸ், ஏறாவூர் கவிஞர் புரட்சிக்கமால், மருதமுனை புலவர் மணி, ஆ.மு. சரீப்தீன், கவிஞர் மருதூர் வாணர், அறிஞர் ஜே. எம். எம்.அப்துல் காதர் போன்றவர்களையும் எனக்கு உறவினர்களாக தேடித்தந்தார்கள். கவிஞர் சம்மாந்துறை அஸீஸ் வீடு தவிர்ந்த மற்றவர்ளின் வீடுகளுக்கு என்னை அழைத்துச் சென்று அறிமுகம் செய்தார்கள். அவர்களின் உணவுப்பரிமாற்றங்களில் என்னையும் இணைத்துக் கொண்டார். கவிஞர் மருதூர் வாணர் வைத் திருந்த சிறிய புத்தகக் கடையில் மூன்று புத்தகங்களை வாங்கித் தந்தார் ஈழமேகம் ஐயா அவர்கள்.

சம்மாந்துறை மக்களினால் இன்றும் மறக்க முடியாத ,புன்னகை பூத்த வண்ண முகத்தானின் உள்ளன்பு கொண்ட உறவு, கிடைத்திருக்காதுவிடின், என்கண்கள் ஊனக்கண்களே! என்பது உண்மையாகும். தற்போது கல்வியில் சிறப்புப் பெற்று சிறப்பான கண்களையுடையவன் என்று துணிவதற்கு முடியாது போயிருக்கும். நாவலர் ஈழமேகம் ஐயா அவர்களின் தொடர்பு கிடைக்-காது இருப்பின், பொய்யாமொழி புலவர் திருவள்ளுவர் கூறுவது போல எனது முகத்தில் இரு புண்களே இருந்திருக்கும்.

1968ஆம் ஆண்டில் இருந்து புரட்சிகர அரசியல் இயக்கத்தில் ஈடுபட்டு, பல மேதினக் கூட்டங்கள், புரட்சிகர அரசியல் கருத்தரங்குகள், அரசியல் வகுப்புக்களை ஒழுங்கு படுத்தி, முதலாளித்துவத்திற்கும் நில பிரபுத்துவத்திற்கும் எதிராக செயற்பட்டு சுவரொட்டிகளையும், அரசியல் எதிர்ப்புக் கோஷங்களையும் எழுப்பிக் கொண்டிருந்த என்னை, நாவலர் அவர்களின் தொடர்பு திசை மாற்றியது.

பாட்டாளி மக்களின் விடுதலைக்காக, கூலி உயர்வுப் போராட்டங்களில் கலந்துகொண்டு பேசும் வல்லமையை (மறைந்திருந்து) நெறிபடுத்தித்தந்தார். எனது பாதையிலுள்ள மேடு பள்ளங்களை மெல்ல மெல்ல தெளிவுபடுத்தி தேசிய அபிவிருத்தியில் நாட்டத்தை செலுத்தும்படி என்னை மாற்றிய பெருமை நாவலருக்கே உரியது. நாவலர் அத்தகைய அறிவுரைகளை மெல்ல மெல்ல என்னுள் புகுத்தி என்னை வழி நடாத்தாதிருப்பின் இன்று இவற்றை கூறுவதற்கு என்னை அடையாளம் கண்டிருக்க முடியாது. என் எலும்புக்கூட இறந்து அழிந்து போயிருக்கலாம்.

சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தியில் ஒரு சந்தை (மார்க்கட்) எழுந்து நிற்கிறது. யார் யாரோ தங்களின் கைங்கரியங்கள் என்று மார்தட்டிக் கொள்கின்றனர். அதன் ஆரம்பத்தை, ஆறு மரக்கட்டைகள் கொண்ட கால்களை நாட்டி கொட்டில் கட்டி அவ்விடத்தில் மீன் வியாபாரிகளைக் கொண்டு, மீன் விற்க வைத்து இரவானதும், எட்டு, ஒன்பது மணிக்கு தண்ணீர் ஊற்றி கழுவி விட்டு சந்தையை ஆரம்பித்த பெருமை எனக்குரியதல்ல, அப்போது கிராம சபை தலைவராக இருந்த மல்கம்பிட்டி உதுமாலெவ்வையுடன் சண்டை போட வைத்த துணிச்சல் எமது நாவலருக்குரியதே. அந்த சந்தையினை தொடர்ந்து நடாத்தும் முயற்சியில் என்னைத் தொடர்ந்து எனது சகோதரன் முகம்மது தம்பி (தற்போது ப.நோ.கூ. சங்க கிளை முகாமையாளர்) அவர்கள் அந்தச்சந்தையினை கூட்டி துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டார். மூன்றாவதாக அவரைத் தொடர்ந்து நான், எனது நண்பன் காதரை அழைத்து வந்து அந்த பணியில் ஈடுபடுத்தினேன். (பின்பு வீசிக்காதர் என்று பெயர் பெற்றவர்)

சம்மாந்துறை பல நோக்குக்கூட்டுறவு சங்கத்தின் SP/14 ஆம் கிளையைப் பிரித்து SP/19 ஆவது கிளையை உருவாக்குவதற்கு, அப்போது ப.நோ.கூ. சங்க தலைவராக இருந்த ஜனாப் ஐ.எல். உதுமாலெவ்வை JP (ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் சம்மாந்துறை அமைப்பாளர்) அவர்களின் அனுசரனையினைப் பெறும் வழி வகையினையும், ஆலோசனைகளையும் எனக்குத் தந்த பெருமை நாவலரையே சாரும்.

சம்மாந்துறை மக்கள் கலை வட்டம், உழைப்பாளர் கலை-இலக்கிய ஒன்றியம், கூலி விவசாயிகள் சங்கம், அறுவடை கூலி விவசாயிகள் சங்கம் போன்ற பல சங்கங்களை நான் உருவாக்கி,

கவியரங்குகள், கருத்தரங்குகள், கூலி உயர்வுப் போராட்டங்கள், என்பவற்றினை நடாத்துவதற்கு, நான் சார்ந்திருந்த அரசியல் தோழர்கள் சிலரும் குறிப்பாக வீ. ஆனந்தன், தோழர் இஸ்மாயில் (தினகரன்) போன்றோருடன் நாவலரின் ஆலோசனைகளும் மதிக்கப்பட வேண்டியதாகும்.

சம்மாந்துறை கிராமிய சபையில் ஒரு நூலகம் அமைக்கும் பொருட்டு, குமரன் வாசகர் வட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுப் பதற்கு, எனக்கு வழி காட்டிய பெருமையும் நாவலர் ஈழமேகத்தையே சாரும். இந்த நூலகத்திற்கு முதல் நூலகராக வீசிக்கந்தோர் சுலை மான் என அழைக்கப்படும் சுலைமாலெவ்வையே செயற்பட்டார். இவ்வாறான பலவேறு அபிவிருத்தி முயற்சிகளை 'புளக்-ஜே' பகுதியில் என்னாலும் நான் சார்ந்த அமைப்புக்களாலும் தோற்றுவிக்-கப்பட்டன என்றால் அவைகளுக்கு வழிகாட்டி ஆலோசனை வழங்கியவர் மர்ஹூம் நாவலர் ஈழமேகம் ஐயா அவர்கள்தான் என்பதை என்னால் உறுதிப் படுத்த முடியும்.

1985 மார்ச் மாதம் 18ஆம் திகதி சம்மாந்துறை முழுவதும் மட்டுமல்லாது இலங்கையின் பல்வேறு கிராமங்களிலும் வெள்ளைக் கொடிகளால் நிறைந்து கிடந்தன. என் வீட்டில் ஒரு வெள்ளை கொடி தொங்கவிட முடியவில்லை. அதனை தொங்க விடும் அளவிற்கு என் சிந்தை தெளிவுறவில்லை. அது சோகத்தினால் நிறைந்து கிடந்தது. நல்ல சிந்தனையுள்ள நலமிக்க ஒரு மகனை சம்மாந்துறை இழந்து நின்றது. திருமதி. பக்கீர் தம்பி அவர்கள் சிறப்பான பண்புகள் நிறைந்த ஒரு கணவனை இழந்து நின்றார். நாவலரின் பிள்ளைகள் அன்பு மிகுந்த ஒரு நல்ல தகப்பனை பறி கொடுத்து அழுதனர். ஆனால் நான்...


இலக்கியத்தின் ஆசானை, பெயர் சூட்டிய தந்தையை என் தவறுகளைத் திருத்தும் பொருட்டு, செயற்பட்ட இடித்துரைப்பானை,. என் சிந்தையின் போக்கை மாற்றிய ஒரு திறன்மிகு வழி காட்டியை எனக்கு பல வகையான தொடர்புகளையும் ஏற்படுத்தித் தந்த ஒரு தொடர்பாளனை, எல்லாவற்றுக்கும் மேலாக நான் கண்ட மனிதருக் குள்ளே இருந்த, காமியப்பணி செய்யாது, நிஷ்காமியப்பணி புரிந்து நின்ற ஒரு மாணிக்கத்தை, ஒரு நல்ல மனிதனை இழந்து நின்றேன்.

இன்னாலில்லாஹி வஇன்னாஇலைஹி றாஜிஊன்

அன்னாருக்கு இறைவன் சுவன பதியைக் கொடுப்பானாக, நாவலர் எம்.ஐ.எல். பக்கீர் தம்பி - ஈழமேகம் ஐயா அவர்கள்

மறைய வில்லை. என் உள்ளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர் வழி காட்டலில் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

---



**நாவலர் வைர விழாவின்போது ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்களுக்கு பாராட்டுப்பத்திரம் வழங்கப்படுகிறது. பத்திரம் வாசித்துக் கையளிப்பவர் கவிஞர் மன்சூர் ஏ.காதர்**

AMIRALI PUBLIC LIBRARY
PRADE...
SA...

# ஈழமேகம் இன்னும் மரணிக்கவில்லை!

- மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் (முன்னாள் அமைச்சர்)

கவிதை எழுத ஆரம்பித்த காலத்தில் என்னை ஊக்குவித்த எனது சிறிய தந்தை மர்ஹூம் ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்களுக்காகப் பிரார்த்திக்கின்றேன். ஈழமேகம் பக்கீர்த்தம்பி எனது நெருங்கிய உறவினர் அவரை 'சாச்சா' என்று அன்பாக எப்போதும் அழைப்பதுண்டு. அவருடைய சீவிய காலத்தில் எமது குடும்பத்தி-லிருந்த என் வயதையொத்த எவருக்கும் இலக்கிய ஆர்வம் இரந்ததில்லை. சம்மாந்துறைப் பிரதேசத்தில் கலாபிவிருத்திக் கழகம் அமைத்து தமிழை இலக்கியச் சுவையை அறிமுகம் செய்தவர் அவர்தான் என்றால் அதுவும் மிகைப்பட்ட ஒரு கூற்றல்ல.

தனது குடும்பத்தில் ஒரு பிள்ளை தமிழிலும் இலக்கியத்திலும் ஆர்வம் காட்டுவதைக்கண்டு பெரிதும் ஆறுதல் அடைந்திருந்தார். எனது தந்தையும் ஓர் இலக்கியப் பிரியனாக இருந்தது இப்போதுதான் எனக்குத் தெரிய வருகின்றது. எனது தந்தை ஒருபோதும் எழுதியவரல்லர். நிறைய வாசிப்பவர். தனது மகன் வாசித்து வளர வேண்டும் என்பதில் எப்போதும் அக்கறையாக இருந்து வந்தவர்.

எனினும் -எனது தந்தை மரணித்து ஏறத்தாழ பத்தாண்டு-களின் பின் அவர் எனக்கு எழுதி வைத்த மரணசாசனத்தை அண்மையில் வாசித்தபோது அப்படியே அதிர்ந்து விட்டேன். அப்போதுதான் அவரது எழுத்தாற்றலின் வல்லமை தெரிய வந்தது. கவிதைத் துறையிலும் எனது தந்தை ஈடுபா: கொண்டிருந்தார்.

''யூசுப் சுலைஹா' காவியம் சாரண பாஸ்கரனால் வெளியிடப்பட்டபோது அதை ஒவ்வோர் இரவும் எழுதி வாசிக்காத எனது தாய்க்கு எங்களுக்கும் இசையுடன் பாடிக் காட்டுவார். தமிழ் இலக்கிய நூல்கள் மட்டுமன்றி ஞான இலக்கிய நூல்களும் அவரிடம் நிறைய இருந்தன.

எனது எழுத்துக்களை பத்திரிகைகள் பிரசுரிக்கத் துவங்கிய காலங்களில் தனது மகிழ்ச்சியை ஒருபோதும் என்னுடன் பகிர்ந்து கொண்டதில்லை. காரணம்- அவ்வாறு செய்வதால் எனக்கு ஏற்படும் உற்சாகம் எனது கல்வியைப் பாதிக்குமென அவர் தயங்கியிருக்கலாம்.

இருப்பினும் கூட இரவு நேரங்களில் விழித்திருந்து கல்வியில் காட்டிய அக்கறையை விடவும் - கூடிய அக்கறையை தனது மகன் எழுத்தில் காட்டிய வேளைகளில் அவர் ஒருபோதும் அவனைக் கடிந்து கொள்ளவோ எச்சரிக்கவோ இல்லை.

எனது தந்தை அவருடைய நண்பர்களோடு தனது மகனின் எழுத்தார்வங்களைப் பிரஸ்தாபித்து எனது கவிதைகளை வாசித்துக் காட்டுவதில் நிச்சயம் மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும். அவ்வாறு தனது மகிழ்ச்சியை எனது தந்தை பகிர்ந்து கொண்டவர்களில் ஒருவர் தான் ஈழமேகம் பக்கீர்த்தம்பி சாச்சா அவர்கள். அவர் குச்சவெளியில் கல்வி கற்பித்துக்கொண்டிருந்த காலகட்டங்களில் கவிதையில் அவருக்குக் கடிதம் எழுதுகின்ற பழக்கம் எனக்கிருந்தது. எனது கவிதைகளைக்கூட அவருடைய பார்வைக்காக அவ்வப்போது அனுப்பி வைத்திருக்கின்றேன். அவர் எனக்கு எழுதிய கவிதைகளில் இரண்டு அதிர்ஷ்டவசமாக என்னிடம் இப்போதும் இருக்கின்றன.

அவர் உயிரோடு இருந்திருந்தால் எனது இலக்கிய முயற்சிகளில் மட்டுமல்ல எனது அரசியற் பரிசோதனைகளிலும் ஒரு முன்னணிப் போராளியாக இருந்திருப்பார். அவர் இன்னும் மரணித்ததாக நான் எண்ணியதில்லை. கனவில் ஓரிரு தடவைகள் வந்து என்னோடு கதைத்திருந்து விட்டுப்போயுள்ளார். அவர் உயிரோடு இருந்திருந்தால் அவரிடமிருந்தும் நிச்சயம் ஓர் ஆசி இத்தொகுப்புக்குக் கிடைத்திருக்கும். அக்குறையை 1969ல் அவர் எழுதியனுப்பிய கவிதைக் கடிதம் நிறைவு செய்கின்றது.

ஈழமேகம் சாச்சாவுக்காகப் பிரார்த்திக்கும் அதேவேளை எனது தந்தையை நினைக்கும்போதெல்லாம் பொங்கிவரும் வெப்புசாரங்களையும் கண்ணீர்ப்பூக்களையும் அன்னாரின் ஆன்மாவின் காலடிக்கு அனுப்பி வைக்கின்றேன்.

AMIRALI PUBLIC LIBRARY PRADESIYA SABHA SAMMANTHURAI

1969ம் ஆண்டில் கவிஞர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி
இளங்கவிஞர் அஷ்ரபுக்கு எழுதியனுப்பிய
ஆசிக்கவிதை

# வண்ணத்தமிழ் பேசு

காத்திருந்த என் கரத்தில்
கரும்பு மொழிச் சாறு பிழிந்து
பார்த்திருந்த என்னிரு கண்
பாவை மலர் தேன் சிந்த
வார்த்தெடுத்து வடித்தெடுத்து
வண்டமிழிற் கோர்த்தெடுத்து
ஆர்த்த அளி மொய்த்த மலர்
அழகு கவி நீ புனைந்தாய் !

பார்த்ததுமே என்னிதயம்
பாகாய் உருகிவிட
பூத்ததடா கண்மணியே
பூரித்த என்னுடலம்
வேர்த்ததடா உன் கவியின்
வேகத்தைத் தாங்காமல்
ஆர்த்த அளி மொய்த்த மலர்
அழகு கவி நீ புனைந்தாய் !

சோற்றுக்கும் கூழுக்கும்
சொன்னாள் கவியவ்வை
காற்றில் மிதந்த கடிதம்
வரைந்தளித்தாய்
சேற்றில் தான் நட்டாலும்
செழித்து வளருமடா
ஆற்றல் செறிந்த மகன்
அஷ்ரப் நீ ! அளித்த கவி !

ஆயிரத்தில் நீயொருவன்
அழகுத் திருத்தமிழ்க் கவிஞன்

பாயிரத்தில் காணா
பண்புக் கலையார்வம்
நீயொருத்தன் பெற்று
நிலைத்தால் அது எனக்கு
ஆயிரமோ கோடியோ
அதிலும் பெரு மகிழ்ச்சி
சேயிருக்காய் என்று
சிரித்தேன் கவி மகனே
வாயிருக்கு மட்டும்
வண்ணத் தமிழ் பேசு !

குறிப்பு: நாவலர் கவிஞர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்களுக்காக நினைவுச்சுவடுகள்வெளியிடுவது பற்றிக்குறிப்பிட்டுஅதற்காக நினைவுக் குறிப்புக்கள் எழுதி வழங்குமாறு மாண்புமிகு அமைச்சரும் கவிஞரும் உறவினருமான எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களிடம் பல தடவைகள் கோரியிருந்தோம். அப்போதெல்லாம் 'சாச்சா' பற்றிய குறிப்பினைக் கட்டாயம் தருவேன் என அவர்கள் வாக்களித்தே இருந்தார்கள். ஈற்றில், பொது வாழ்க்கையின் கெடுபிடிகளில் எந்திரம் போல் இயங்கும் அமைச்சரின் நேர அவகாசமின்மையை உணர்ந்தோம்.அதனால் அமைச்சரின் 'நான் எனும் நீ'' கவிதைத் தொகுதியில் ஈழமேகம் பற்றி நினைவுகூர்ந்த குறிப்புக்களையும் ஆசிக் கவிதையையும் நன்றியுடன் சேர்த்துக் கொண்டோம்.

*தொகுப்பாசிரியர்*

# இலக்கிய மேடைப் பேச்சுக்களால் அனைவரையும் கவர்ந்த ஈழமேகம்

ஈழமேகம் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து பல ஆண்டுகள் கடந்து விட்டன. எனினும் அன்னாரின் இலக்கிய உரைகளின் இனிய நினைவுகள் எம் உள்ளங்களை விட்டும் அகலவில்லை. புகழ்மிக்க மேடைப்பேச்சாளராக விளங்கிய அவர், தமிழ் மொழியின் ஆற்றலை, அதன் சிறப்பை தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சிறப்படையச் செய்தவர். அவரின் உரைகளைக் கேட்கும் பாடசாலை மாணவர்கள் கூட தமிழ் மொழியை உயர்தர வகுப்புகளில் கற்பதற்கு ஆர்வம் காட்டியதை எம்மால் அவதானிக்க முடிந்தது.

ஈழமேகம் என்பது தமிழ் நாட்டில் வைத்து அவருக்கு அறிஞர்களால் வழங்கப்பட்ட சிறப்புப் பட்டமாகும். ஈழத்தின் இனிய தமிழை எழில் பெறச் செய்யும் அன்னாரின் பணியை மனங்கொண்டு **“ஈழமேகம்”** என்னும் பட்டம் கிடைத்தது. இலங்கையில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் அன்னாருக்கு நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் பல கௌரவங்கள் கிடைத்தன.

ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்களை அறியாத தமிழ் பேசும் மக்கள் ஈழத்தில் இருக்க முடியாது. அந்த அளவுக்கு அவரது நாவன்மையால் பெயர் பிரபல்யம் பெற்றிருந்தது. 1978ம் ஆண்டில் தென்னிந்திய காயல் பட்டணத்தில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகா நாட்டுக்கு அவருடன் இணைந்து செல்லும் பாக்கியம் கிடைத்தது. “இஸ்லாம் எங்கள் வழி, இன்பத் தமிழ் எங்கள் மொழி” என்னும் பதாதைகளுடன் ஆரம்பமான அம்மகாநாட்டில் ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்களும் இலக்கியக் கட்டுரை ஒன்றைச் சமர்ப்பித்ததன் பேரில்இலக்கியப் பேராளர்களின் நன் மதிப்புக்-குரியவரானவர்.

கிண்ணியாவில் அன்னார் கடமையாற்றிய காலங்களில் மீலாத் மேடைகளில் அவரின் இஸ்லாமிய உரைகளைக் கேட்கும் வாய்ப்புக்கள் நிறையக் கிடைத்தன. இலக்கிய நயமிக்க அன்னாரது உரைகளைக் கேட்பதற்காக பெருங்கூட்டமே திரண்டு விடும். அவ்வாறான அனைவரையும் வசீகரிக்கும் பேச்சாற்றலையும், நாவன்-மையையும் இறைவன் ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்களுக்கு வழங்கியிருந்தான். கிண்ணியாவில் அவர் வாழ்ந்த காலங்களில்

பள்ளிவாசல்களிலும், பாடசாலைகளிலும், பொது வைபவங்களிலும் அவரது உரைகளைத் தாராளமாகக் கேட்கக் கூடியதாக இருந்தது.

ஆழ்ந்த புலமையும், ஞானமும் அன்னாரிடம் நிறைந்திருந்தன. கவிதை நடையிலும், கவிதையும் பேச்சும் கலந்த உரைநடையிலும் பேசும் தனி ஆற்றல் அன்னாரிடம் சிறப்பாகக் காணப்பட்டது. தனக்கெனத் தனிப்பாணியைக் கொண்டிருந்த ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்கள், தமது தனித்துவத்தால் "ஈழமேகம்" எனும் புகழ் நாமத்துக்குரியவராக மாறினார். அவரது ஆசிரிய சேவையும் சமூகப் பணியும் இலக்கியப் பங்களிப்பும் எமக்கெல்லாம் முன்மாதிரியாக அமைந்தன. எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரை "ஜென்னதுல் பிர்தௌஸில்" நீடூழி வாழப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரது பணிகளை வெளிக்கொணர எடுத்த முயற்சியினை நாம் பெரிதும் பாராட்டி வரவேற்கின்றோம்.

இவ்வண்ணம்,
**கலாநிதி. கே. எம். எச். காலிதீன்,**
**பீடாதிபதி,** *கலை, கலாசார பீடம்,*
**தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**
**21-02-2001**



**1978ம் ஆண்டில் சம்மாந்துறை பொதுமக்களும் ஆசிரியர் சங்கமும் இணைந்து எடுத்த பாராட்டுவிழாவின் போது மேடையில் ஈழமேகம் பக்கீர்த்தம்பி (மத்தியில்) வாழ்த்துரையை செவிமடுக்கிறார்**

# ஈழமேகத்தின் மழையும் துளிகளும்

**- அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல் எம்.ஏ.**

சம்மாந்துறையைச் சேர்ந்த நாவலர் எம்.ஐ.எல். பக்கீர்த்தம்பி அவர்களின் கவிதைத் தொகுதி 'மழையும் துளிகளும்' என்பதாகும். இந்நூலினைப்பற்றி தினபதி- சிந்தாமணி பிரதம ஆசிரியராகவிருந்த எஸ்.டி.சிவநாயகம் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

*'மேகம் என்பது மூன்று காரியங்களைச் செய்யும். ஒன்று மின்னும், இரண்டு முழங்கும், மூன்று பொழியும். அது காளமேகமாக இருந்தாலும் சரி, ஈழமேகமாக இருந்தாலும் சரி. இந்த மூன்று காரியங்களையும் செய்தே ஆகவேண்டியதுதான். நம்மிடையே வாழும் 'ஈழமேகம்' என்று பெயர் கொண்ட கவிஞர் பக்கீர்த்தம்பி அவர்களிடமும் நாம் மின்னலையும் காணலாம், முழக்கத்தையும் காணலாம். தீமையைக்கண்டால் அவர் நெருப்பாக மின்னுவார். அநீதியைக்கண்டால் அவர் கொதிப்போடு முழங்குவார். இந்த உணர்ச்சிகளையெல்லாம் திரட்டி அவர் ஈற்றில் கவிதை மழையாக பொழிந்து தள்ளுவார். கவிதை மழையாகப்பொழியும்போது அங்கு இதம், இனிமை, குளிர்ச்சி எல்லாம் தென்படும். அவர் உள்ளத்தில் உணர்ச்சிப்பிழம்பும் உண்டு. மகிழ்ச்சிப்பிழம்பும் உண்டு. இந்த இரண்டின் ஒருமித்த கலவைதான் ஈழமேகம் என்ற கவிஞனின் வெளிப்பாடு, தோற்றம், அண்டம், அகண்டம், அடக்கம் எல்லாம்.' முகம்மது இஸ்மாயில லெப்பை பக்கீர்த்தம்பி என்ற இந்த முதுபெரும் கவிஞரின் பல்வேறு கவிதைகளைப் பல்லாண்டு காலமாகப் பத்திரிகையில் ஏற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு கவிதையையும், முதல் வாசகனாகப் படிக்கும்பொழுது நான் உவகையில் மிதந்திருக்கிறேன். உணர்ச்சியில் புரண்டிருக்கிறேன். இப்போது அக்கவிதைகளில் பல ஒன்று சேர்ந்து 'மழையும் துளிகளும்' என்ற பெயரில் நூலாக மலர்கிறது என்பதை அறிந்து பெருமகிழ்வடைகிறேன். ஈழமேகம், மழையையும் துளிகளையும் தருவது மிகப் பொருத்தம். இக்கவிதைகள் நிச்சயம் கவிஞர்களின், கலைஞர்களின் இலக்கியத் தாகத்தைத் தீர்க்கும் வாரிதியாக விளங்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு' எனக்கூறுகிறார் எஸ்.டி.சிவநாயகம்.*

1983 இல் வெளிவந்த இக்கவிதைத் தொகுப்பில் மொத்தம் 40 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் அவரது முதற் கவிதையான 'மழைவளம் வேண்டும் அல்லாஹ்' என்பதுவும் அடங்கி யுள்ளது. அதன் சில பகுதிகள் வருமாறு:

AMIRALI PUBLIC LIBRA
PRADES... SABH
SAMMANTHURAI

'நாடி நரம்பு தளர்ந்து உலர்ந்திட
நாடி வரண்டுமிழ் நீருமே வற்றிட
ஆறிடுமேடு அலைகட லோய்ந்திட
ஆவி துடித்துயிர் ஆலாய்ப்பறந்திட
கத்தரி கொச்சிப் பயிரகளும் செத்திட
காய்கறித் தோட்டமும் காய்நது வரண்டிட
கோடுறு கானகம் கூட வரண்டிடக்
கோடை வரட்சி கொடுமை மிகைத்ததே.

அறநெறி பொய்த்ததோ ஆகமம் பொய்த்ததோ
ஆண்டவன் பள்ளிக் கதவடைபட்டதோ
மதநெறி மாய்ந்து மனுக்குலம் கெட்டதோ
மார்க்கத்தில் மூர்க்கம் வலிந்து புகுந்ததோ
குறைபொறுத்தேழைகள் பாவிகள் செய்திடும்
கொடுமைகளைப் பொறுத்தேக இறைவனே
அருட்கொடையாளனே ஆதி பராபரா
ஆண்டவனே மழை பெய்திட வேண்டுமே.'

ஆசிரியராகப் பதவியேற்ற இளமைக் காலத்திலிருந்தே பேச்சு, எழுத்து, கவிதை, சமூக சேவைத்துறைகளில் பக்கீர்த்தம்பி மிகவும் ஈடுபாடுகொண்டு உழைத்தார். அதிபராகப் பதவி வகிக்கும்பொழுது அவை மேலும் மெருகுபட்டன. 1985 மார்ச் மாதம் 18ம் திகதி அவர் மறைந்த நாள் வரை அப்பணிகள் தொடர்ந்தன.

எஸ்.டி.சிவநாயகம் குறிப்பிடுவதுபோன்று, அநேக கவிதைகள் அநீதியைக் கண்டு பொங்கியெழுவதன் வெளிப்பாடாகும். ஏழை, எளியோரின் வாழ்வு சிறக்க வேண்டுமென அவை அவாவுறுகின்றன. வேர்வைக்குமுண்டோ விலை, கண்ணீரே தீயாய் மாறி, கடன் பட்டார் நெஞ்சம், தேநீரும் செங்குருதியும், பெருநாளிற் குடிபுகுந்தான், பொற்பதக்கம், நாயும் சிரிக்கிறது போன்றன இவ்வகையைச் சார்ந்தனவாகும். இஸ்லாமிய த்ததுவத்தை விளக்குவனவாகவும், இயற்கை எழில் வர்ணனையாகவும், சமுதாய நிலமையைச் சித்தரிப் பனவாகவும் மேலும் பல கவிதைகள் அமைந்துள்ளன 'வேர்வைக்கு-



இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்.

முண்டோ விலை' எனும் கவிதையின் சில அடிகள் வருமாறு:

கூதற்பனியும் குளிரும் குளிர் காற்றும்
சாதி மழையும் சலசலப்பும் -தோதிடினும்
போர்வையகற்றியுழப் போகின்ற பாட்டாளி
வேர்வைக்குமுண்டோ விலை.

கோழி சிறகடித்துக் கூவியெழுப்பிவிடக்
தோழியெழுந்து சுடுசோறாக்க - மேழி நுனிக்
கூர்வைக்கக் கூனிரும்பு கொள்ளுமுன் மேனி
வேர்வைக்குமுண்டோ விலை.

பாணித் தயிரன்ன பண்ணாக்கி நீ விதைத்த
காணி விழைந்த கதிரழகை- காண்பதற்கு
ஆர்வங் கொளுமுன்றன் அரிவை பிறை நுதலின்
வேர்வைக்குமுண்டோ விலை.

இத்தகைய கவிதைகளைத்தான் மட்டும் பாடினாற் போதாது: மாறாக, தனதூரில் ஓர் இலக்கியப் பரம்பரையே உருவாக வேண்டும் என விரும்பினார். அதற்காகக் கலாபிவிருத்திக் கழகம் எனும் ஒன்றை உருவாக்கினார். அதன் மூலம் பல இளைஞர்களுக்கு உற்சாக மூட்டியார்.. இதனைப் பற்றி ஈழக்குயில் இத்ரீஸ் தனது கவிதை யொன்றிற் குறிப்பிட்டுள்ளார்

காணிக்கும் கல்விக்கும் கடதாசி நோட்டுக்கும்
கூலிக்காரனுக்கு இடமில்லை என்றபோது
கலாபிவிருத்திக் கழகத்தின் எழுச்சிக்கு வழிகாட்டி
எமதூரின் இளைஞர்களின் அறிவுக்கு ஒளியூட்டி
நின்றவொரே ஆசிரியன் நீயாகி
எழுச்சி பெற எமதூர் முன்னின்ற தலைமகனே!

என்கிறார் இத்ரீஸ்.

ஈழமேகத்தின் இவ்வூர்ப்பற்றினை அவரது 'சம்மாந்துறை எங்களுரே' எனும் கவிதையிற் காண்கிறோம்.

சங்குடன் சிப்பி மோதத் தருமிசை கமுகிற் பாய்ந்து
அங்கிளம் பாக்கு வீழ்த்தும் அரு வரால் மீன்களுண்டு
பொங்குபால் மேதிக்கூட்டம் பொலியவே பாலை ஓட்டும்
சங்கையாம் வளந்திகள் சம்மாந்துஜற எங்களுரே

பட்டியிற் கறந்தபாலைச் சட்டியிற் காய்ச்சி மீதி
இட்டமாயேழைக் கீந்து இரங்கிடு முழவர் கூட்டம்
அட்டமாதிக்கும் வாழ அமுதமா முணவையீந்து
சட்டமுமரசும்சூழ் சம்மாந்துஜற எங்களுரே' எனத் தொடர்ந்து

செல்லும் இக்கவிதை.

இந்நூலுக்கான சாத்துக்கவியை புலவர்மணி அல்ஹாஜ் ஆமு ஷரிபுத்தீன் அவர்கள் வழங்கியுள்ளார். அணிந்துஜரயை மகாவித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராசா அவர்கள் அளித்துள்ளார்.

புலவர்மணி ஷரிபுத்தீன் அவர்கள் தமது சாத்துக் கவியில்,

மேகந்தரு மழையால் மேவுந்துளி யீழ
மேகம் தரு மழையும.்.தேபோல் - மேகம்
துளிகண்டேன் பார்வை தொடர்ந்தேன் பெரிதும்
களிகொண்டே னுள்ளம் கனிந்து.

அமீர்அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை

தாயகத்தின் சீர்மை தரவேண்டும் சீர்திருத்தம்
ஆயபொருள் பலவும் ஆய்ந்தாய்ந்து -தூயவுளம்
கொணட மகிழ்வும் குறித்த மனச்சோர்வும்
விண்ட தமிழ் என்று விளம்பு.

என விதந்துரைக்கிறார்.

இதேபோன்று மகாவித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராசா அவர்கள் தமது அணிந்துரையில் கூறுவதுபோன்று 'இலகுநடை, சொற்சுருக்கம், பொருட்தெளிவு, துள்ளறப்பாணி, தெள்ளுதமிழ், உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் வண்ணங்கள் இவையெல்லாம் பொலிந்து விளங்கும் இக்கவிதை நூல் இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சியிலும் எடுத்தியம்பக்கூடிய தன்மை வாய்ந்ததாகும்.'


இவர்கள் இருவரும்தான் பக்கீர்த்தம்பி அவர்களுக்கு நாவலர் என்ற பட்டத்தை வழங்கியோருமாவர். 1983இல் சம்மாந்துறையில நடைபெற்ற மாபெரும் விழாவொன்றில் ஷரிபுத்தீன் அவர்களால் பிரேரிக்கப்பட்டு, எப்.எக்ஸ்.சி. அவர்களால் ஆமோதித்து அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 'நாவலர்' பட்டம் வழங்கப்பட்டது.

இதற்கு முன்னதாக 'ஈழமேகம்' என்னும் பட்டம் தென்னிந்தியாவில் காயல்பட்டணத்தில் வைத்து பேரறிஞர் அண்ணாத்துரையினால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பாவலர் பஸீல் காரியப்பர் இந்நிகழ்ச்சியைப் பின்வருமாறு வர்ணிக்கிறார்.

ஈழத்தின பெருமை தன்னை- அன்று
இந்தியா கொண்டு சென்றீா
கோலத் தமிழ் மழையை - மேகம்
கொணர்ந்ததாய் இவரை வென்றீா
காயல் பட்டணத்தில் - நீங்கள்
கவிமழை பெய்கையிலே
நேயமாய் 'ஈழமேகம்' -எனும்
நாமத்தைப் பெற்றுவந்தீா.
அந்நாமமும், கவிதா வளமும் 'மழையும் துளிகளும்'
மூலம் என்றென்றும் நிலைத்திருக்கும்.

(குறிப்பு: இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில்
13-01-2001 அன்று '**நூல் உலா**'வில்
இடம்பெற்ற ஆக்கம்.)

---



**எ.ம்.ஏ.அப்துல் மஜீது (அன்றைய அமைச்சர்) வைரவிழாவின் போது நாவலருக்கு பொன்னாடை போர்த்துகிறார்.**

# பக்கீர்த்தம்பி ஓர் இலக்கியம்

- கவிஞர் ஏ. இக்பால்-

இந்து சமுத்திர நித்திலம்
அந்நித்திலம் ஈன்ற மாணிக்க வகைகள்
இந்த உலகில் மதிப்புடைத்தாமே!
நம் தமிழ் இலக்கியம் ஈந்த
நயமிக்கச் செம்மல்கள் வரிசையில் இன்று

கணக்கிடும் மாந்தரில் பக்கீர்த்தம்பி
இலங்கையில் இந்திய நாட்டின்
சனங்களின் மத்தியில் இமாலயம்போல
துலங்கிடும் நாவலர் எனும் பேற்றினாலே
ஈழமேகம் எனும் பெயர் பெற்று
உயர்ந்து சிறந்ததால் நாங்களும் உயர்ந்தோம்!

ஆழமாம் சிந்தனை ஊற்று
அறிவு நிறைந்த பொருள் உணர்வாலே
மேகங்கள் முழங்கும் மேன்மையாம் பொழிவு!
எங்கும் ஒலித்தது இளவல்கள் மொய்க்கப்
பங்கு கொண்டு ஒருகூட்டம்
பயின்று இலக்கியம் சொற்செட்டுக்கள்பெற்று
நன்கு சிறந்தனர் ஈழமேகத்தினாலே!

மாணவர் மாணபுடை எழுத்தினை வருத்தி
மற்றவர் போற்றும் இலக்கியம் ஆக்கத்
தானவர் மூவர் தகைபெரும் ஆசான்
போன இடமெல்லாம் புகழினைப்பரப்பித்
தேனுறும் பேச்சால் திளைத்திடும் நோக்கால்
ஆனபெரியார் அவரையே நோக்கின்

சம்மாந்துறையின் சன்மார்க்கசீலர்
சளைத்திடா நபிவழி சார்ந்த கருத்தை
நம்மாந்தர் முன்னே முழக்கமே செய்த
நல்லவர் இன்று இலங்கையின் சொத்து
இம்மானிலம் இவர் பெருமையைச் சொல்ல
'உரைமலர்' நூலே உரைத்து முன்னிற்கும்

பொன்னான 'மழையும் துளிகளும்'
பொற்புகழ் பெற்ற கவிதையின் ஊற்று
என்னால் மதிப்பிட இன்னும் இவர்
எழுத்தெலாம் வெளிவர ஏற்பாடு செய்வீர்!

வாழ்நாளில் அதிகமாய் மக்கள்
வாழ்ந்த இடமெல்லாம் பொழிந்தவை யாவும்
தேனாகச் சேர்த்து வெளியிடும் பணியை
ஏனோ நாங்கள் செய்திடவில்லை!

இவ்விதம் நமது முதுசங்கள் எல்லாம்
இடந்தெரியாமல் மறைந்தது தெரியும்
ஈழமேகம் சொல்லின் செல்வன்
ஈந்துவந்த தமிழ் அறிவும்
இக்கணமே உயர்ந்து ஏற்றும் இஸ்லாமியச்
சிக்கலற்ற சிந்தனையும்
சம்மாந்துறை நிலத்தில் நின்று
சகல இ.டமும் சஞ்சரித்து
எல்லையற்று விரிந்துசென்ற
ஏற்றம் நன்று பதியவில்லை
இடத்தைப் பெரிதாய் அறியவில்லை!

அறிய வேண்டும் அந்த அற்புதங்கள்
இலங்கை எங்கும் செறிந்துநின்று
நெறிவளர்த்த நேர்மையினை
உரியமுறை எடுத்தாண்டு
ஏற்றமிட்ட இலக்கியத்தார்
இலங்கையெங்கும் வாழுவதால்
பக்கீர்த்தம்பி பரந்துவிரிந்த
பண்புநிகர் இலக்கியமாம்!
அறிந்தவர் அறிவர் இதனை
அறியாதோர் அறியவேண்டும்.!

# இன்சொற் புலவன் ஈழமேகம்.....
## "சாரணா கையூம்"

'காளமேகம்' என்று படிக்கும் பொழுதெல்லாம் ஈழமேகமே ஞாபகத்துக்கு வருகின்றது. வன்சொற் கவிஞர் காளமேகம், இன்சொற் கவிஞர் ஈழமேகம்.

மிகவும் பணிவான - இனிய பண்புகளையும் குணவியல்பு களையும் கொண்ட கனிவான கவிஞர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்கள்.

எனக்கும் ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்களுக்கும் ஓர் உறவு உண்டு.அது கவிஞர் அப்துல்காதர் லெப்பை அவர்களின் வழி வந்த உறவு. நாம் இருவரும் கவிஞர் லெப்பை அவர்களின் மாணாக்கர் என்ற உறவு.

கற்றோனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. கவிஞனுக்கு காலமெல்லாம் சிறப்பு. தமிழகத்தில் கவிஞர் ஈழமேகம் அவர்களின் கவிமழையில் நனைந்த அறிஞர் அண்ணாத்துரை ஈழமேகம் என்று பட்டம் சூட்டி பாராட்டிய பொழுதை மறக்கமுடியாது.

ஒரு முறை ஹஜ்ஜுப் பெருநாள் கவியரங்கில் கலந்து கொள்வதற்கு இலங்கை வானொலி என்னையும் அழைத்திருந்தது. கவியரங்கில் கலந்துகொள்ள ஈழமேகமும் அழைக்கப்பட்டிருந்தார். அந்தச் சந்திப்பை என்னால் மறக்க இயலாது.

ஒலிப்பதிவு செய்வதற்கு முன் கவிதைகளைப் பாாக்கவேண்டும் என்று நிகழ்ச்சிப் பொறுப்பதிகாரி கவிதையைக் கேட்டார். அதே போன்று ஈழமேகத்திடமும் கேட்டார்.இருவரும் கவிதைக்களைக் கொடுத்தோம். படித்துப் பார்த்துவிட்டு ,

'யானைகள் அழிந்தன. சேனைகள் சிதறின.' என்ற வரிகளை சற்று மாற்றி அமைத்தால் நல்லது. முடியுமோ என்று பாருங்கள். என்று கூறி பிரதிகளை எம்மிடம் தந்தார். நாங்கள் மிகவும் சங்கடத்துக் குள்ளானோம். அதற்கு என்ன காரணம் என்பதை சிந்தித்துவிட்டுச் சிரித்தோம்.

யானைகள் அழிந்தன என்று சொல்வதில் தவறு ஏற்பட்டு விட்டது. இதற்கு வேறு அர்த்தங்களும் உண்டு என்று நான் கூறினேன். 'ஏதும் அரசியல் இருக்குமோ? தெரியவில்லை.'

அரசியலேதான் சந்தேகமில்லை. யானை கட்சிச் சின்னம் அல்லவா? அதைச் சின்னாபின்னமாக்கி காட்டுவது பொருத்தமில்லை அல்லவா? என்று மெல்லக் கிசுகிசுத்தேன். நீங்கள் குறிப்பிட்டது சரியானதே. யானையின் அழிவு கட்சியை மாசுபடுத்துவது போலாகும். அதனால் பொறுப்பதிகாரி சமயோசிதமாக நடந்து கொள்கிறார். நமக்கேன் வம்பு. 'என்று ஈழமேகம் சொன்னார்.

யானை என்ற சொல்லை மாற்றி வேறு சொல்லை உபயோகித்து கவிதைக்கு அனுமதி பெற்றுக் கொண்டோம். ஒரு கவிஞன்தன் கருத்துக்களை வெளிக் கொணர்வதற்கு சுதந்திரமில்லாத போக்கினைக் கண்டு வேதனைப்பட்டோம்.

'ஒரு கவிதையிலிருந்து ஒரேயொரு சொல்லை எடுத்து விட்டாலும் கூட அந்தக் கவிதையின் பொருளையும் எண்ணத்தையும் அழித்ததாகிவிடும.' என்று அல்லாமா இக்பால்(ரஹ்) அவர்கள் குறிப்பிட்டார். குறிப்பிட்ட வாசகம் என் நினைவுக்கு வந்தது.

இலங்கையில் மூத்தகவிஞர். ஓசை நயத்தோடு கருத்தாழமும் கொண்ட கவிதைகளைப் புனைய வல்லமைபெற்ற கவிஞர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி அவர்கள் என்பதை நாடறியும்.

அப்துல் காதர் லெப்பை அவர்களைப் பாராட்டி ஒரு கவிதை எழுதியனுப்பியிருந்தார் ஈழமேகம். அக்கவிதையை இங்கு குறிப்பிட்டுக் காட்டுவது பாநயம் காண உதவும் என்று நினைக்கின்றேன்.

'பொன்பூத்த தீந்தமிழ்க் கவிபடைத்துப்
புகழ் பூத்த முதுகவி அப்துல் காதர்
மண்பூத்த மட்டுமா அன்னைபெற்று
மகிழ் பூத்த சமுதாய ஆசானாக
கண்பூத்த நற்குருப் பதவி தாங்கி
கனிபூத்து ஓய்வுற்ற இற்றை ஞான்று
தண்பூத்த பாராட்டு மலரைக் காண
தமிழ்பூத்து மகிழ்கிறேன் ஈழமேகமே!

அருள்வாக்கி அடியொற்றி மலையகத்தில்
ஆண்டாண்டு வாழ்ந்திட்ட அறிவு மேதை
பொருள் கண்ட இக்பாலின் இதயமீந்த
புகழ் கண்டு தமிழ் பூத்து பூரித்திட்டார்.
இருள் கண்ட மயிலாக சமுதாயம்
இணைபாடப் புகழ் கண்ட காத்தான்குடி
மருமகனாகப் பிறந்திட்ட பெருமை கண்டு
மகிழ் பூத்த மலருக்கு வாழ்த்தோதுவாம்.

மாணாக்கர் உலகமே இறும்பூதெய்த
மதிமிக்க அறிவூட்டி மகிழ்வு கண்டார்.
காணாத சிந்தனைக் கவிதையூற்றில்
கருவுற்ற கவியாற்றை ஓடவைத்து
தேனாக இறசூலின் சதகமெனும்
தீதாறைப் பாடிய தெய்வ ஞானி
வானாறு பொங்குபே ரின்பஞான
வாருதி மலருக்கு வாழ்த்தோதுவாம்.

ஆநெயும் பூநெயும் அளந்தெடுத்து
அழகுமுக் கனியொடு பாற்கலந்து
வானுயர் அமுதபாற் கடற்கடைந்த
வாறெனத் தீந்தமிழ் கவிதை செய்யும்
ஞானியைப் பாவலர் ஷேகுத்தம்பி
நாவண்ணக் களஞ்சியத் தமிழையோதும்
பாவலர் வரகவி அப்துல் காதர்
பாராட்டு மலருக்கு வாழ்த்தோதுவாம்

கடைச்சங்க காலத்து நக்கீரனோ?
கலயகக் கவி யப்துல் காதாலெப்பை
பிற்சங்க காலத்து உமறை வென்ற
பெருங்கவி யானெனப் பெருமை கொண்டு
பாராட்டு மண்டலம் பரிசு பெற்ற
பைந்தமிழ்க் கவிகளின் முன்னோடியே
சாரணா மற்றுளோர் வாழ்த்துகின்ற
சமரச மலருக்கு வாழ்த்தோதுவாம்.

இது உங்கள் நூல்

இவ்வைந்து பாக்களும் தெவிட்டாத தேன்கனியாய் இனிக்கின்ற தன்மையை படிப்போர் எளிதில் அறிந்துகொள்வர். சொற்களைக் கையாளும் முறை எதுகை, மோனை, சந்தம், கருத்தாழம் நயக்கத்தக் கனவாகும்.


’ஆநெயும் பூநெயும் அளந்தெடுத்து
அழகுமுக்கனியொடு பாற்கலந்து ”

என்ற வரிகள் சங்க இலக்கிய சுவை சொட்டுவனபோல் இருக்கின்றன.

’இருள் கண்ட மயிலாக .... என்ற வரி குறுந்தொகையை ஞாபகப்படுத்துகின்றது.

கவிஞர் அப்துல் காதர் லெப்பை அவர்கள் மீது ஈழமேகம் பக்கீர்ததம்பி கொண்ட அபிமானம் பாக்களில் இழையோடி இன்பமூட்டு வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

---



**வைரவிழாவின் போது கவிஞர் மன்சூர் ஏ. காதர் பாராட்டுப் பத்திரம் வாசிக்கின்றார்**

# மறைவின் மறுகணம் உதிர்ந்த கண்ணீர்ப் பூக்கள்

# துயில்கின்ற வசந்தங்கள்

தமிழ் கூறும் நல்லுலகின் சரித்திரமாய் நிலைத்தவனே,
அமிழ்தான கவிதையினை அஸ்திரமாய்க் கொண்டவனே,
ஈழத்து இலக்கியத்தின் இயக்கத்துட் கலந்தவனே,
மேடைகளில் கோடையிடி முழக்கங்கள் செய்தவனே,
சம்மாந்துறைத் தாயின் சரித்திர நாயகனே,
தாயவளின் பெருமையினை தமிழ் நாடு வரை கொண்டு
போனவனே ஈழமேகம் பக்கீர்த்தம்பி ஐயா
பன்னீர்த்துளிகளின் சாகரமாய் நின்று விட்டு
கண்ணீர்த்துளிகளிடை சங்கமமாய் போனாயோ.............?
சங்கமமாய்ப் போனதினால் சாஹித்தியம் அழுகிறதே...........!
அழுகின்ற சாஹித்தியம் இனி யாரிடம் தான் தஞ்சமுறும்?

சாதனை பலவற்றை உன் சரிதம் கொண்டதினால்
வேதனையால் அழுகின்றோம்; வெந்து மனம் நோகின்றோம்.
சாதனைகள் புரிந்து வருகையில் கண்திருஷ்டி
போக்கிட நாம் விழாவெடுத்து எம்தரத்தை உயர்த்திட்டோம்
ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து மூன்றில் உம்
அறுபதாம் வயது நிறை வெய்துகையில் பெருமிதத்தால்
ஊரார் ஒருமித்து உனக்காக வைர விழாத்
தோரணமாய் இட்டனர். உன் தோட்டத்து புஷ்பங்கள்
'**மழையும் துளியும்**' எனும் மகுடத்தின் வருகையிலே
ஒவ்வோர் புதல்வரும் ஒருமுகமாய் மகிழ்ந்தனரே!

இளைய தலைமுறையின் இயக்கமாய் எப்போதும்
வலம் வந்த வாலிபனே! வார்த்தைகளின் தோரணமே!
வார்த்தை நரம்புகளால் யாழிசைத்த குத்திலனே,
கவிதை மலர்களினால் தேர் செய்து தந்தவனே.
எங்களது பாரதியே, இளையவரின் பிர்தௌசே,
'ராஜ வசந்தத்தின் ஷெண்பகத்தூதாய்' பணி செய்த
பாவினத்தின் ஊர்வலமே, பசித்தவரின் பேரமுதே!

சொர்க்கத்தில் உனையழைத்துச் சோபனக் கவி கேட்க
அங்குள்ளோர் அவாக் கொண்டு அழைத்தனரோ?
எப்போதும் சிரிப்பது போல் இப்போதும் நீ சிரித்து

போய் வருக பெருமகனே உன் பேர் சொல்ல நாம் உள்ளோம்
போய் வருக உன்னை இறை பொருந்திக் கொள்வதற்காய்
இருகரங்கள் நாம் ஏந்தி இறைஞ்சுகின்றோம் போய் வருக

(பாவாக்கம்:*கவிஞர் மன்சூர் ஏ காதர்.*)

இவ்வண்ணம்

**சம்மாந்துறைப் பொதுமக்கள்**

18-03-1985

## ஈழமேகம்

**தோற்றம்- 06-05-23 மறைவு- 18-03-85**

*அன்புக்கோர் உறைவிடமாய்*
*அகிலம் தன்னில்*
*அழகு தமிழ் ஆசானாய்*
*இலக்கியத்தின்*
*பண்புசெறி ஆழியிலே*
*தோய்ந்து, பேச்சில*
*பரிசுபெற்றுத தங்கமெடில்*
*பலவும் தாங்கி,*
*மங்காத தமிழ்நாட்டின்*
*மேடையேறி,*
*மாபெரிய பிரசங்க*
*மாரி பொழிந்து*
*அங்கீழ மேகமென*
*அண்ணா வாழ்த்த*
*அமரர்பதி மீண்ட தமழ்க்*
*கவியே ஆற்றோம் !*

*****

-சம்மாந்துறை ஆ. அஸீஸ்

# ஈழமேகம் பக்கீர்த்தம்பி எனும் இனியவர் காலமானார்

சொற்பொழிவாய் கட்டுரையாய் கவிதைகளாய்
உணர்வுகளைச்
சூல்கொண்டு பெய்த மேகம்
புற்றரையாய் இருந்த எங்கள் தாய் நிலத்தில்
பூக்களினைப் புஷ்பித்து நின்ற மேகம்
கற்றவரும் பாமரரும் களிகொள்ளும் வகையாகக்
கதைபொழிந்து நின்ற மேகம்
அற்புதமாம் எங்களூர் அழகுதமிழ்ச் சொற்களினை
அயலெல்லாம் பெய்த மேகம்
சற்றுமெதிர் பாராதவிதமாக எமைப்பிரிந்து
சலிப்பிற்குள் ஆழ்த்தி விட்டார் !

நிலைக்காத பணச்சங்கம் பலப்பலவும் முளைத்தழிந்த
காலத்தில் இவர் எழுந்து
கலைக்காகச் சங்கமொன்று அமைத்திடவே
இளைஞரிடைக் கருத்துக்கள் பெய்து நின்று
கலாபிவிருத்திக் கழகமெனும் உயர் சங்கம் எம்முரில்
கனபணிகள் செய்யவைத்த
கலைத்தருவாம் ஈழமேகம் தனியே ஒரு பாணியாய்க்
கலைக்கோலம் தந்த காட்சி
பலப்பலவாய் மனத்திரையில் படம்காட்டும் வேளையிலே
பாரத்தீ பரவுதையா !

ஈழத்தில் சிறந்த ஒரு பேச்சாளர் வேண்டும் என
இந்தியா விழைந்தபோது
காலத்தால் அழியாத கலைமகனைக்
கலைத்தூதாய்க் காயல்பதி அனுப்பி வைத்தோம்
'ஈழத்தின் மேகம் இவர்' என அவர்கள்
நயந்தார்கள் எமக்கெல்லாம் பெருமை சேர்த்தார்
சீலத்தால் சன்மார்க்கப் போதனையால் தன்னுடைய
சிறப்பான குருத்துவத்தால்

பாலகனைப் போலமனப் பாங்குகளால் பெளவியத்தால்
பழகுமுறை லலிதங்களால்
காலமெலாம் எம்மிடையே களிப்புதர வாழ்ந்தவரே
கண்ணீரில் நீந்த விட்டார்.

உரைமலரை அறவழிக் கீதம் எனும் உன்னதத்தை
மழையும் துளிகளும் எனும்
சிறப்புடைய கவித்தொகுப்பை எமக்கீந்து எப்பொழுதும்
சிரித்தமுகத் தோடிருந்து
மறக்கவொணா இசைக்குரலால் வானொலியில்அவர்தந்த
மாழாத செவிக்கமுதை
இனிக் கேட்கமுடியாது ஏங்குகின்ற தெங்கள் மனம்
எவர் மனமும் நோகாமலே
இனிமையுடன் பழகுமுயர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி
ஏங்கவைத்துச் சென்றுவிட்டார்.

இலங்கையிலே சிறந்த ஒரு பேச்சாளர் எனத்தங்கப்
பதக்கத்தை அணிந்த நெஞ்சை
வளமான சொல்லாட்சி வரிக்குவரி நகைச்சுவையை
வழங்குகின்ற உயர்நாவையும்
மழைபெய்த பேனாவைப் பிடித்திருந்து பணிசெய்த
மறக்கவொணா அக்கறையும்
சளைக்காது மேடைதொறும் ஏறுதற்காய் விரைந்துசென்ற
மிடுக்குநடைக் கால்களையும்
இழக்கவென இன்றெம்மைப் பிரிந்து சென்ற
இனியவர் பக்கீர்த்தம்பி.

பொன்விழாக் கண்டோம் பொற்கிழி வழங்கினோம்
பொன்னாடை போர்த்தி நின்றோம்
இன்னுமின்னும் எத்தனையோ இரசனைவிழாக் கண்டோம்
இறுதியாய் மணிவிழாவும்
கண்டுமனம் களிகொண்டோம் கனக்க ரஸித்திருந்தோம்.
காண்போம் நூற்றாண்டு விழா
என்றுமனம் எண்ணியது எங்களுக்குத் தெரியாதே
இப்படியாய் முடியுமென்று
வென்றவரே எங்களது நாவலர் பக்கீர்த்தம்பி
விழிகளைக் குளமாக்கினார்.

சொல்லொணாத்துயர் கொள்ளும் மனைவி மக்கள்
பௌஸியா நஸிர் ஜெமில் ராஸிக்
அல்லசல் குடும்பம் அழும் ஒலி ஒரு கூரையுள்
அடங்கிவிட மாட்டாது எம்
அல்மர்ஜான் எனும் உயர் கல்விமனைதனை இங்கு
ஆக்கியோருள் ஒருவர்
நல்லவர் மர்ஹூம் எம்.ஐ.எல்.பக்கீர்த்தம்பி ஜே.பி.
நாம் அதை மறக்கவில்லை
எல்லோருடனும் சம்மாந்துறை மக்கள் இன்னும்
இலக்கிய மனங்களோடும்
'கல்பால் துயரில் கலந்து அவர்
மறுமைவெல்லக் கைகளை ஏந்துகின்றோம்.

**ஆக்கம்: பாவலர் பஸீல் காரியப்பர்**

அல்மர்ஜான் வித்தியாலய அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்
சம்மாந்துறை 18-03-85



**வைரவிழா முடிவில் ஏற்பாட்டுக் குழுவினருடன் எடுத்துக் கொண்ட படம்**

# பிரார்த்தனை தூதுகள்

அன்று
காயல் பட்டணம் சென்று
கவிதை மழை பொழிந்த
ஈழமேகமே......
ஓ... இன்று நீ மரணித்து விட்டாய்

ஆம் மரணித்தே விட்டாய்
ஆனாலும்- உன்
படைப்புக்கள் மரணிக்கா
ஏன்
உன் பெயர் கூட மரணிக்கா

காலத்தை வென்ற
ஞாலக்கவிஞன் நீ
நீ - மரணிக்கவில்லையய்யா
உன்
உடல்தான் மரணித்தது.

ஈழமேக நாவலா.............
நீ மரணித்து விட்டாயா
நம்ப மறுக்குதே மனம்
உண்மையாகுமா தினம்

அந்த ஆகிரத்தில்..........
சுவனபதியில் இறைவன்
உனக்கோர் சிம்மாசனம்
உவந்து தர எங்கள்
பிரார்த்தனைத் தூதுகள்
வந்து கொண்டேயிருக்கும்.

ஆக்கம்- **செல்விகள் மசூறா ஏ மஜீட், ராதா வேல்முருகு**
நிறைமதி கலை வட்டம்
சம்மாந்துறை

## சுருதியாய்....
## ஏமாற்றி ஏகிவிட்டாய்!
## ஏன்?

ஞாலத்தை வாழவைக்கும் மேகத்தை உன்மீதே
மேலாடை காயலிலே போரத்தார். உன்பாடலினால்
பேச்சால், நளினத்தால் பெற்றாய் முதற்பரிசு.
வீச்சான தங்கப் பதக்கம். உனக்கென்றோர்
தாளலயமுண்டோ ! தனித்துவமாய் மேடைகளில்
ஆழ்ந்த தமிழ் செய்வாய், அசையாமற் கேட்டிருந்தோம்
சங்கத்தமிழவளின் சாரதியாய் நீதுலங்கி
எங்கள் ஊருக்கு எழுப்பம் விளைவித்தாய்.
நாவல்லோனாயிருந்தாய் நாவலனாய்க் கௌரவித்தோம்.
பாவல்லோன் உன்பிரிவால் பதைபதைத்து ஏங்குகிறோம்.
சா வெல்லார் வாசலையும் நாடும். சடுதியாய்
ஏமாற்றி ஏகிவிட்டாய் ஏன் ?

இக்கல்வி விருட்சத்தின் வேராய் நின்ற
கனிஷ்ட வித்தி யாலயத்தைத் தரமுயர்த்தி
எக்காலும் அறிவுச்சாறு உண்ணத்தக்க
மகாவித்தியாலயத்தின் வித்து நட்டாய்.
முக்கியமாய் இலக்கிய மன்றம் ஒன்றில்
மூழ்குவித்து 'கலாபாசம்' எனும் பேராலே
தக்கதொரு கையெழுத்து ஏடும் ஆக்கித்
தளைக்க விட்டாய் அத்தோட்டம் பூக்குதிங்கே.

மாண்யமுறைச் சிந்தனைகள் மலிந்தகாலம்
மக்களுக்கு வழிகாட்டி இல்லாவேளை
கான்பாயும் புதுவெள்ளச் சிந்தையால் நற்
கருத்துகளை முன்னெடுத்து நாம் நடக்க
ஊன்றுகோலாயிருந்தாய் இளையோரிங்கே
உறுதியுடன் தனித்துவமாய் சிந்தித்தார்கள்
ஏன்? இன்னும் எத்தனையோ மறுமலர்ச்சி
எம்முள்ளே புதுக்கிட நீ காலாய் நின்றாய் !

சம்மாந்துறையில் புத்தூக்கம்
சுரக்க நின்றாய்
அவ்வழியே
எம்மால் தொடர முடியுமென
உன்மேலாணை பூட்டிநின்றோம்.
நீ அல்லாஹ்வின் நற்கதியை அடைக !
என்றும் எம் நினைவுள்
இம்மாவித்தியாலயத்தின்
இலக்கிய மன்றத்து இரங்கல்கள்.....

(பாவாக்கம்- **பொன். சிவானந்தன்.**)

கலை இலக்கிய மன்றம்
சம்மாந்துறை
முஸ்லிம் மத்திய மகாலித்தியாலயம்
85-03-27



**ஈழமேகத்தின் மழையும் துளிகளும் கவிதை நூலின் முதற்பிரதியை (அமைச்சர்) அப்துல் மஜீதிடமிருந்து டாக்டர் எம்.மீராலெப்பை பெற்றுக்கொள்கிறார்.**



இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்

# இரங்கலும்
# பிரிவாற்றாமையும்

# பிரிந்தார் பெருமை
# நாவலர் ஈழமேகம்

பிரபல கவிஞரும், மேடைப்பேச்சாளருமான நாவலர் ஈழமேகம் எம்.ஐ.எல்.பக்கீர்த்தம்பி இப்பொழுது எங்கள் மத்தியில் இல்லை. கடந்த 18.3.85இல் அவர் இவ்வுலக வாழ்வை நீத்து இறையடி எய்திவிட்டார். சம்மாந்துறையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபரும், சமாதான நீதவானுமாகிய மர்ஹூம் பக்கீர்த்தம்பி புகழ் பெற்ற மேடைப்பேச்சாளராகவும், கவிஞராகவும் திகழ்ந்தார். ஆசிரியராக, அதிபராக, கட்டுரையாளராக, கவிஞராக, சமூகசீர்திருத்த வாதியாக சன்மார்க்க போதகராக, செழுமைப்பண்புகள் கொண்டவராக, மேடைப் பிரசங்கியாகத் திகழ்ந்து பல சாதனைகளையும், சேவைகளையும் புரிந்தவர் அவர்.

சம்மாந்துறை தாருல் உலூம் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய பின் 6.5.83 இல் ஓய்வு பெற்றார். பேச்சுத்துறையின் மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்த அவர் பின்னர் பிரபல்யம் மிக்க கட்டுரையாளராகவும், சிறந்த கவிஞராகவும் விளங்கினார். 1983 ஆம் ஆண்டு அன்னாருக்கு எடுக்கப்பட்ட வைர விழாவில் பொற்கிழி வழங்கியும், பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டு 'நாவலர்' பட்டமும் அளிக்கப்பட்டது. காயல் பட்டணத்தில் நடைபெற்ற மீலாத் மேடை ஒன்றில் வைத்து அறிஞர் அண்ணாவினால் ஈழமேகம் எனப் பாராட்டி கௌரவிக்கப்பட்ட அவரது நினைவாக உரைமலர் அறவழிக்கீதம், மழையும் துளிகளும் எனும் நூல்கள் திகழ்கின்றன

படல்கும்புறை அரசினர் வைத்தியசாலையின் உதவி வைத்திய அதிகாரியான ஜனாப் முகம்மது நஸீர், ஜனாபா பௌஸியா அலியார், ஜெமில், ராசிக் ஆகியோரை தமது பிள்ளைச் செல்வங்களாகப் பெற்ற நாவலர் ஈழமேகம் தமது 62வது வயதில் இறையடி சேர்ந்தார் அன்னாருக்கு ஜென்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தில் இறைவன் இடமளிப்பானாக.

நன்றி- தினபதி 6-4-85

# வேதனைக் கென்பதில் பக்கீர்த்தம்பி

- புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் -

சென்றாயிவ் வுலகினைத் திரஸ்கரித்து- நீ
செல்லுமிடங் கண்டு சென்றுவிட்டாய்
என்று முனையினிக் காண்பதில்லை-என்று
ஏங்குவார்க் கென்பதில் பக்கீர்த்தம்பி.

நாட்டில் ஒருவிழா நடந்துவிட்டால் -அங்கு
நாவல ரொலிமிகக் கேட்டிடலாம்
வீட்டிலே நிம்மதி கண்டவரே- மக்கள்
வேதனைக் கென்பதில் பக்கீர்த்தம்பி

காயல் நகரினில் ஈழத்திருந்து-ஒரு
கார்மேகம் வந்து பொழிந்ததென்றார்
நேய மிகுதியால் ஈழமேகம்- என
நினைத்தவர்க் கென்பதில் பக்கீர்த்தம்பி.

மூத்தமகன் கண்ணை மூடிவிட்டான்- என்று
மூப்பிருந் திளையவர் கலங்குகின்றார்.
ஏத்தும் குருவென விசைத்து நிற்பார்- உன்
இதயத்தார்க் கென்பதில் பக்கீர்த்தம்பி.

தம்பியென் றேன்தமிழ்த் தாய்க்குமகன்- எனும்
தருக்கினைக் கொண்டிங்கு வாழ்ந்து வந்தேன்.
எம்பி யெனைவிட்டு எங்கு சென்றாய்- நையும்
என்றனுக் கென்பதில் பக்கீர்த்தம்பி.

சமய விவகாரம் சார்ந்து நின்றாய்- பெற்ற
தாயக மீதினில் அன்பு கொண்டாய்
அமையுபத் தினிபாலர் வருந்துகின்றார்- அவர்
அவலத்துக் கென்பதில் பக்கீர்த்தம்பி.

மறுமையின் வாழ்க்கையை விரும்பி விட்டாய்-இறை
மாநபி கூட்டுற வாக்கி வைப்பான்
பொறுமையை வேண்டிடு முன்னினத்தார்-ஆறி
இருந்திட வென்பதில் பக்கீர்த்தம்பி.

# பாவேறு ஈழமேகம் பக்கீர்த்தம்பி

- ஏ.எம்.எம்.அலி-

நாவூறுந் தீந்தமிழில் நாம் நுகரப் பாட்டிசைத்த
பாவேறு! 'ஈழமேகம்' பக்கீர்த்தம்பியே
தமிழன்னை ஈன்றெடுத்த தமிழ்ப் புதல்வ ! ஓயாது
அமிழ்தனையக் கவிபடைத்த அன்புருவே! கவிக்கோவே
காசுபணம் வேண்டாம் கைநிறையப் பொருள் வேண்டாம்
பேசுதமிழ்ச் செல்வப் பெட்டகமே பெரிதென்று
காலமெலாம் வாழ்ந்தவரே! கவிப்பூவைச் சொரிந்தவரே!
சுவனச் சோலைக்குள் சுகங்கண்டாற் போதுமென்றோ
புவனத்தை விட்டுப் புறப்பட்டுப் போனீர்கள்?

சொல்லாட்சி நல்ல சுவையாட்சி அழகென்னும்
நல்லாட்சி சேர நற்றமிழிற் கவி தந்த
தங்கத்தமிழ்ப் புதல்வ தாங்கள் சுவர்க்கத்தில்
தங்கிக் கவி புனையத்தான் அங்கு சென்றீரோ?
நாவலராம் நீங்கள் நாற்றிசையும் போற்றுகின்ற
பாவலராம் நீங்கள் பாட்டென்ற பேரிகையை
ஈழத்தில் மட்டுமல்ல இந்திய நாட்டினிலும்
கோலத் தமிழ்க் கழிகொண்டு கொட்டிக் களித்தவரே.!

எங்கள்மா வட்டம் எழிற்றிரு கோணமலை!
அங்குள்ள கிண்ணியா அக்கிராமத்திலொரு
'மீலாதுந் நபி' விழா மேடையிலே வீற்றிருந்து
சூல்கொண்டு சுவைகொண்டு சொன்மாரி பொழிந்திட்ட
அந்நாளை நினைக்கின்றேன் அதுபோலும் இன்னுமொரு
பொன்னாள் இனிவருமா? புலவரே ! போய்விட்டீர் !

பிறப்பொடு இறப்புண்டு பெரியவர்கள் சிறியவர்கள்
எனப்பாகு பாடில்லை எவருக்கும் மரிப்புண்டு
எனும் நியதி ஒன்றினை இதயத்திற் கொண்டேதான்
மனுவாழ்க்கை என்றாலும் மரணம் வந்திடுங்கால்
'கல்' என்று வாழ்ந்தவரும் கண்ணீர் சிந்திடுவார்

'நில்' லென்று உனதுயிரை நிற்பாட்டிப் பிடித்தற்கு
வல்லமைதான் எமக்குண்டா? வான்முகிலாய்க்
கவிவானில் சொற்கொண்டு பொழிந்திட்ட
சுந்தரக் கவியேறே ! திக்கெங்கும்
உங்களது திருப் பெயரின் வாசனைதான்!

கலங்காத உள்ளங்களும் கலங்கிக் கதறிடவே
அலங்காரச் சந்தூக்கில் அமைதியுடன் படுத்தபடி
வேடிக்கை வாழ்க்கைக்கு விடை கூறிப்போகின்ற
வாடிக்கையாளனே! வண்டமிழ்க்கவிஞனே!
சொல்லைச்சுமந்தவனே! 'துக்கம் எனும்' பெரிய
கல்லை நெஞ்சங்களில் கவிழ்த்து வைத்து விட்டே
கவிபாடும் வாய்மூடி... கண்மூடிப்போனாலும்
புவிவாழும் வரைக்கும் புகழ்நாமம் நிலைக்கும்!

'கவியீழ மேகமே ! -
சுவனத்தில் நீங்கள் சுகபோகமுடன் வாழ
மகிபரனை இறைஞ்சுகிறோம்! ஆமீன்--! ஆமின்---!!

(நன்றி--- சிந்தாமணி 24-03-85)

**உள்ளத்தில் உதிப்பதையே!**
**ஒழித்தங்கு வைத்திடாமல்!**
**பள்ளத்து நீர்போலவே - மேடையில்**
**பகன்றிடுவார் ஈழமேகத்தார்.**
- சம்மாந்துறை அஸீஸ்

# ஒரு மாணவியின்
# இரங்கற்பா

- ஹில்மியா அமீர்

அல லாஹ்வின் அருள் சொரிந்த
அடியவர் மிக விரைவில்
பொல்லாத கூற்றுவன் பால்
போவதே சகஜமென்பார்
நல்லன செய்து வாழ்ந்த
நல் கவிஞரே பக்கீர்த்தம்பி
சொல்லிடா தோடிவிட்டாய்
துவழ்கின்றேன் உன் பிரிவால்

அறிவினில் கதி ரொளியே
அமைதியின் புவியுருவே
செறிவினில் மலை வளனே
சிறப்பினில் மதி நலனே
நெறியினில் உறை கலனே
நேர்வழி காட்ட வந்த
பெரு மகனே ! ஈழமேகம் !
பொதுவழி தன்னில் நின்றாய் !

முத்தமிழ் இன்பம் சூழும்
முத்தூராம் மூதூரின்
வித்தியா சாலை தன்னில்
வேந்தனே உன்னைக் கண்டு
நித்திய வருடமோ பதினெட்டு...
நின்னது பண்பை ஓர்ந்து
எங்களது சொத்தே; கல்வி
தழைத்திட உழைத்து நின்றாய் !

பொதுவினில் ஈழநாட்டு
புகழினைப் பாடும் வேளை
விதியினால் இறைவன் பாலில்
விரைவினில் ஏகிவிட்ட
முதுபெரும் அறிஞர் வாழும்
சம்மாந்துறையின் கண்மணியே
இது உன் மாணவியின்
இரங்கற் பாவே ஏற்றிடுவாய் !

(நன்றி- தினகரன்: 25-03-85)



இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்.

# மேகம் கலைந்தது

- க.லெ.முஸம்மில்

கிழக்கிலங்கை தனில் கீர்த்தியுடன் வந்துதித்த
முதுபெருங் கவிஞராம் 'ஈழமேகம்' பாவலர் அவர்கள்
இயற்கை எய்தினார் என்னும் ஈனச் செய்தி எட்டி
ஏங்கியே விட்டது மனம் கலங்கியே விட்டன கண்கள்

சம்மாந்துறை சிறப்புடன் தந்த சாந்தர் சற்குண சீலர்
பைந்தமிழ்ப் பாவலர் செம்மல் பைக்கீர்த்தம்பி அவர்கள்
சேர்ந்தார் மறுவுலகு என்ற சோகக் கதை கேட்டு
விம்மியே விட்டது கலையுலகு வெகுவாக வெதும்பியே
விட்டது

அன்பொழுக அடுக்கு மொழியில் அருமையான நல்ல பல
கருத்துக்களைத் தேன் சொட்டும் தீந்தமிழில் தெவிட்டாமல்
கேட்பதற்கு திறம்பட அள்ளித்தந்த அந்த அன்புக்குரல்
அடங்கி விட்டது எங்கோ ஒடுங்கி விட்டது

நாற்றிசையும் போற்றிட நல் இலக்கியம் படைத்த
நற்குண நாயகராம் நம் ஆசிரிய ஜோதி இம்
மண்ணை விட்டும் மறைந்தே விட்டது
வெகு தொலைவில் விரைந்தேகி விட்டது

எளிய நடை இதமான பேச்சு, இனிய தொனி, புன்சிரிப்பு,
எழில் தோற்றம்,பண்பான பழக்கம், ஏதுவான வாழ்வு பூண்டு
நல்லான் என எல்லோராலும் நனி போற்றப்பட்டு,
ஒளிவிட்டு பிரகாசித்த உதய தாரகை உதிர்ந்துவிட்டது
அந்தக் கலைக் கதிரோன் 'ஈர மேகத்துள்' மறைந்து விட்டது

பார் போற்றிட பாட்டுக்கள் படைத்த உன் பேனாவும்
உலர்ந்ததுவோ
பக்கம் பக்கமாய் எழுதிக் குவித்திட்ட உன் படைப்புக்களும்
ஓய்ந்தனவோ
தரணியெலாம் சென்று தான் பொழிந்திட்ட சொற்களும்
சேர்ந்தனவோ

இன்றும் உன் குரல் எம் காதுகளில் ஒலிக்கின்றது
இனி எங்கு ஒலிக்கப்போகிறது இகமதை எங்கே கேட்கப்
போகிறது

நாடு போற்றிய நல்லாசானாய்
நனி ஆற்றிய நல்லதிபருமாய்
வீடு போற்றிய தலைவனாய் தந்தையாய்,
வேதம்உணர்ந்த சன்மார்க்கப் பத்தனாய்
பாட்டுடைத்தலைவனாய் புகழ்பூத்த
பேச்சாளனாய், சமாதானத் தொண்டனாய்,
வாழ்ந்து போந்த உத்தமனார் இங்கில்லை
விரைந்தே சென்று சேர்ந்து விட்டார்

'உலகினில் தோன்றிடும் ஒவ்வொரு உயிரும்,
என்றோ ஒரு நாளில் இறப்பது திண்ணம்'
எனும் வரை வகுத்த இறைவா
இவ்வுலகை விட்டும் உமதடி வந்த
அன்னாரின் குற்றங்கள் களைந்து
அவர்தம் நற்கிரிகைகள் ஏற்று அவரை
இனிய சுவனத்தில் சேர்த்திடு
அவர்தம் சுற்றங்களும் காத்தருள் இறையே

(நன்றி- தினகரன் 29-03-1985)

# பிரிவு மழையின்
# இரங்கற் தூவானம்

- எஸ்.எம்.எம். றாபிக்

காளமேகமோக் கவிமழை பொழிந்த
ஈழமேகமே.....
நீங்கள் பிரிந்த சேதி கேட்டு எங்கள்
இதய வானம் இருண்டது
சோக மேகங்கள் கூடி விழி
மழை பொழிந்தது

வைர விழாக் கண்ட நாவலரே
மழைகளோடு துளிகளைத் தந்தீர்
உங்கள் மழைத்துளிகள்
உலர முன்னர்
எங்கள் விழிகளில்
நீர்த்துகளிகள் பூத்தன.

மேடைகளில் நின்று நீர்
கோடையடி முழக்கங்கள் செய்தீர்
இன்று சந்தூக்கில் நீது
படுத்திருந்ததைக் கண்டு
பாமகளும் பாவலரும்
பாமரரும் அழுதனர்

தென்னகத்து ஈழமேகம்
மண்ணகத்தில் மறைந்ததுவோ?
அந்த
விண்ணகத்தில் உமக்கோர்
விழுமிய புகழிருக்கும்

நன்றி : அல்ஹூதா

# இகம் மாறிய கவிஞர் ஈழமேகம் அவர்களுக்கு இதயாஞ்சலி

-எம்.எம். சாஹுல் ஹமீது, கல்பிட்டி

மேதையாம் விபுலானந்த வித்தகர் விளைந்த மண்ணில்
ஏதையா அறிவுப் பஞ்சம் என்றிட்ட ஈழமேகம்
காதையாய்,கவியாய்,பாட்டாய் கலந்துமே கரைத்துத்தந்த
போதையால் எங்கள் உள்ளம் பூரித்துப் புகழுதையா

எம்.ஐ.எல். பக்கீர்த்தம்பி என்றிடும் ஈழமேகம்
நம்மவர் கூட்டத்துள்ளே நடுநிறை மேலோன்
சிம்மமாய் இலக்கணத்தில் நிலைத்திட்ட தீரன்
தும்மிடும் வேலைக்குள்ளே தொடர்கவி யாற்றவல்லோன்

ஈந்துரைக்கின்ற போழ்து எம்மவர்க்காக வேசம்
மாந்துறைப்பகுதியில் தோன்றிசன் மார்க்கத்தில்
அறிவும் பெற்று
சாந்தமும் பொறுமை தோய்ந்த தமிழ்த்திரு ஆசானாக
தோய்ந்தவன் தமிழ்த் தேனாற்றில்சொல்லிட
எம்மாலாமோ?


பாரதம் சென்று மாபாராட்டினைப் பெற்றபோதும்
தீரமே செயலுமாற்றல் தெளிவுறப் பெற்ற மேதை
வேறெதும் பாராக்கல்வி விருப்பினில் விளைந்த வித்து
மாறி யெம்மைவிட்டு மறைந்ததை மனம்தான் தாங்குமோ

அன்பரே அறிவு சூழ்ந்த அறிஞரே பக்கீர்த்தம்பி
என்றிடும்போது எந்தன் இதயமே குமுறுதையா
தென்புறு தமிழில் பேச்சும் திறம் சூழ் கவிதையார்வம்
பண்புறப் பெற்றநண்பா பாரிடை பிரிந்ததேனோ

அறுபதாம் ஆண்டு அலர்ந்த அழகிய எமது நட்பு
வீரநம்வெளியாம்குச்ச வெளியினில்தொடங்கிற்றுநண்பா
குறைவற நுமது கீர்த்தி குவலயம் உள்ள ஞான்றும்
நிறைவுற வேண்டும் நின் புகழ் ஓங்க வேண்டும்.

காளமேகத்தை யொக்கும் கவிநடை ஈழமேகம்
நாளது மாறாக் கீர்த்தி குவலயம் உள்ள ஞான்றும்
ஆழமாய்ப் பெய்து மக்கள் அகந்தனில் இடம்பிடித்த
வேளை பாவேறு விலகியே மர்ஹூமானார்

பவனமோ நீரோ மண்ணோ பகுத்தறியாத மேலாம்
சுவனமா பதியில் நீங்களும் சுகம் பெற வாழ்கவென்று
பகலிரவாக யானும் பண்புறு குடும்பத்தோரும்
இகபரம் காக்கும் இறைவன் எழில் பதம்
இறைஞ்சுகின்றோம்



**நாவலரின் வைரவிழாவையொட்டி சம்மாந்துறை தாறும்உலூம் வித்தியாலய ஆசிரியர் குழாத்துடன் எடுத்துக்கொண்ட படம்**

# இதய அஞ்சலி ....
# எங்கள் ஈழமேகத்திற்கு....

**-கல்முனை ஜுல்பிகா ஷெரீப்**

'ஈழமேகம் இறந்து விட்டார் ....'
கத்தி நின்ற அந்த
வானொலிச் செய்தி கேட்டு ....
கலங்கியே துடித்து விட்டே(ன்)ாம் ...

என்ன !

'எங்கள் ஈழமேகம்'
இறந்து விட்டார்களா ...?
என்னால் நம்ப ... நம்பவே முடியவில்லை ....
அந்த வானொலிப் பெட்டியையே
அடித்துடைக்கத் துணிந்தது மனம்
மறுகணம் ....
நிஜம் என்பதுபோல
நின்றுவிட்டதெல்லாம் ....
ஓ ....

ஈழத்தில் தனக்கீடா யொரு கவி
இல்லை யெனும் வண்ணமிங்கு ...
ஆழத்தில் முத்தெடுத்த
அன்புருவே .... நீங்கள்
வாழவேண்டும் பல்லாண்டென்று
வாழ்த்தி நின்றோமே....
வல்லவன் உங்களை
வரவழைத்ததேன் தன்னிடம் ?
அந்தப் பிரிவிற்காய்
அழுது வடிக்கின்றோமே.
எந்தப் பொழுதில் ஐயா இனி ....
எங்கள் விழி உங்களைக் காணும்?

சிந்துகின்ற கண்ணீர்க்குள்ளும்
சிரிகின்றீர்கள் ஐயா நீங்கள்....

'பந்த விலங்கை' உடைத்து விரைவாய்
பறந்தோடிய மர்மம் என்ன?
விந்தையல்லதான் மரணம் என்பது
எனினும்...,
வித்தகன் உங்கள் பிரிவால்
விக்கித்தே நிற்கின்றோம்....

எத்தனையோ மேடைகளில்
ஏறிய நீங்கள் ...
முத்தான செந்தமிழால்
முகம்மலரச் செய்திடுவீர்கள்...
பத்திரமாய் நீங்கள் இங்கு
பண்ணி நின்ற பணிகளைத்தான்
பாரிது மறக்குமோ.....?
அத்தர் மணமாக... அல்ல !
அத்தனையும் அதியுயர்ந்த
கஸ்தூரியாய்... பரிமளமாய் ...
காலமுள்ளவரை மணக்கும்...
மனதில் வாழும் ஐயா...
வாழுமுண்மை !
ஆம் !

மக்களுக்காய் இலக்கியத்தை
மாபெரிதாய் படைத்தளித்து
'பொற்கிளி' கண்டிட்ட
'பொன்னாடை' போர்த்திட்ட
ஒப்பில்லாப் புலவனன்றோ நீங்கள்...?
உங்களுக்குத்தான் எத்தனை
பட்டங்கள்... பதவிகள்... பதக்கங்கள்...
பாராட்டுப் பத்திரங்கள்...
அப்பப்பா....!
'சின்னக் கவி' எனையும்
சிறப்பாக...
வண்ணக் கவியரங்குகள் பலதில்

வாழ்த்தி யழைத்து....
பண்ணிசைக்க வைத்த
பாங்கினைத்தான் என்று மறப்பேன்?
பாரதி விழாக்களிலும் எனை
பாராட்டிய விதம்தானென்னே!
அன்றொருநாள்...
அட்டாளைச் சேனையில்
அலங்காரப் பந்தலிட்டு
இலக்கியப் பட்டாளங்கள் எடுத்திட்ட
இலக்கிய விழாவொன்றில்...
கொட்டிநின்ற மழையினையும்
கொஞ்சமும் பொருட்படுத்தாது...
மெட்டெடுத்து கவியீழ
மேகமென நீங்கள்...
கெட்டியாய் கவிமழை பொழிய
கீர்த்தி பெற்றனர் அங்கு மக்கள்.. !
ஆம் !
கொட்டிய மழையதற்கு
குடையானது நம் கவியரங்கு
வெட்டி முழங்கியே
வெள்ளமாய் வந்த மழையும்
வெட்கித் தலைகுனிந்து...
தன்வேலையை
விட்டெறிந்து சுவைத்துங்கள்
விவேகம் கண்டு வியந்ததன்றோ.. !
பனித்திரையாம் இவ்வாழ்க்கையென
பாரினிற்கு உணர்த்தி நீங்கள்
தனியாகவே சென்றுவிட்டீர்கள்
தவிக்கின்றோம் நாங்கள் இன்று!
ஆம். !
'மழையும் துளிகளும்' என்னும்
மணக்கும் நூல் தந்து
சளைக்காது பணி செய்த
சரித்திர நாயகன் நீங்கள்...
உங்களை...
பண்பற்றோர் பாசமற்றோர்

மறந்திடினும்
அன்புருவே...
அழகுதமிழ்ப் பற்றுடைய...

எந்த உள்ளமுமே
இங்கு மறக்காது...
அந்த நிகழ்வுகள்கூட அப்படியே...
எந்தன் 'டயறிகளில்' கலங்கி நிற்கிறது.

துன்பத்திலும் இன்ப ஒளியாய்...
துலங்கிநின்ற நெஞ்சமே...
'கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்கி
பண்ணுகிறோம் இதய அஞ்சலியை..
பாவலா... நாவலா...
'முன்னோன்' உங்களுக்கு
'முகப்பத்'தாய் நற்சுவனம்- 'பிர்தௌசை'
எந்நாளும் தந்திட்டடும்...
இறைஞ்சுகிறோம். ஆமீன் ! ஆமீன் !

(நன்றி: இளநிலா (சஞ்சிகை) 1985)

## நாவேந்தன் பக்கீர்த்தம்பி

நாற்றிசையும் நாவசைத்த
நாவேந்தன்
நானிலமும் நனி போற்றும்
பண்பாளன்
நாலடியார் அபூபக்கர் உமர் உதுமான்
அலி புகழ்பாடி
நாயனின் தூதர் நாயகத் திருமேனி
புகழ் ஓதி
நாவலர் எனும் நற்பெயர் பெற்ற
எங்கள் தம்பி
—அபுல் கலாம் பளீல் மௌலானா—

# மேகம் கலைந்தது

- ஆஷீ:ப் நஸீர், பதுளை

விம்மி அழுகின்றோம் விடியும் வரைதானிருந்து
கத்தி அழுதாலும் கதறித் துடித்தாலும்
நித்தம் என் மனதில் நிலையாக வீற்றிருக்கும்
உத்தமராய் உயிராய் ஊரே மதிக்கின்ற
தத்துவங்கள் பேசி தரணியிலே பூத்திருந்த
வித்தகரை இழந்திட்டோம் வீரகவி பாடுகின்ற
மொத்த மேகத்தை ஒத்ததுபோல் ஒரு -ஈழ
மேகத்தைக் காணாமல் விம்மித் துடிக்கின்றோம்.

பால் குடிக்கும் பருவத்தில் பாஊட்டிவளர்த்தெம்மை
தோளில் சுமந்தும்- தொங்கு பாலமும் காட்டி
வாழைப் பழமும் வண்ணத் தேன் கனியும்
சாலையில் நடை பயின்று, சரித்திரங்கள் பல காட்டி
ஓடி விளையாடி ஒய்யாரப் பூச்சூட்ட- எம்
நாடி நரம்பில் நல்லதொரு முறுக்கேறும் !
வேடிக்கை பல கோடி வீண் வம்புதானில்லை
மோகமில்லை எமக்கன்று ! மேகமில்லை எமக்கின்று !

கவியரங்கெல்லாம் கைவந்த கலையாச்சு !
தாளித்துப் பாட்டிசைக்கும் தனிப்பாணி உங்களுக்கு!!
மாளிகையில்உள்ள மன்னர்குடிகூட தேடிவந்துகவிகேட்பர்
தேனமுதம் போல பல தென்றல்களும் கூடவரும்
நாவசைத்து நாதமிட நாடொன்றே ஓடிவிடும்
வீட்டுக்குள் இருந்து விடியும்வரை கவி கேட்கும்
தேட்டமில்லை இப்போது தெவிட்டாத தேன்துளிகள்
பாட்டிசைக்க இன்று பக்கீர்த்தம்பியில்லை

பிள்ளைகளாய் நாங்கள் புவிமண்ணில் இருந்தாலும்
உங்களைப்போல் ஒரு கவியாய் உருவாகமாட்டோமா?
'ஜென்னத்துலபிர்தௌஸில்' ஜொலிக்கின்ற தாரகையாய்
கண்ணுக்குள் நின்று கவிநூறு சொல்லுங்கள்
எல்லையில்லா துயரத்தில் ஏழைகள் துடிக்கின்றோம்

சொல்லி அனுப்பி சொற்கவிப் போர் தொடுப்பதற்கு
எல்லையில்லா ஆசை எப்போதும் எமக்குண்டு
ஆதலினால் வாப்பா
வில்லை வளைப்போம் விரைந்தோடி வாருங்கள்

(நன்றி: தினகரன்- 03-05-98)



**காயல்மேகம் பாராட்டு விழாவின்போது ஆசிரியர் பாவலர் பஸீல் காரியப்பர் கவிஞருக்கு மாலை சூடி மகிழ்கிறார்.**

*with the best compliments from*

# JAWAHIRA HARDWARE

**For Tractor, huller, cycle spares, makita power Tools, Electrical Goods & General Hardwares**

Dealers for Brown & Co. LTD
&
**GOVT. Building Contract**

**150, Amparai Road,**
**Sammanthurai - 01.**

**Tel : 067 - 2260025  Fax: 067 - 2260992**

---

*with the best compliments from*

# SABEER TRADERS

Dealers in
- Hardwares
- Electrical Goods
- Pipe Fittings
- Paints and
- Other Building Materials

***120, Police Road,***
***Sammanthurai***
**Tel: 067 - 2260447**

*with the best compliments from*

# ***LANKA FILLING STATION***

## ***PROP : ALHAJ S.M. FAROOK***

***AMPARAI ROAD,***
***SAMMANTHURAI.***

**Tel 067 - 2260736**

*with the best compliments from*

# C.O. LESTHAKIR INTERNATIONAL COLLEGE

## STUDY

FROM NURSERY
TO
O/L & A/L IN
ENGLISH MEDIUM

**AND**

- ENGLISH CLASSES
FOR
GRADE 1 to A/L

***No : 2 B, Main Street, Ninthavur***
***Contact :*** 067 - 2250265



with the best compliments from





MADEENA

# GOLD HOUSE

FOR

**Genuine gold in 22 ct,**

**CENTRAL ROAD, SAMMANTHURAI.**

**Tel : 067- 2260027**








***with the best compliments from***

# SAFEENA GOLD HOUSE

**Reputed and Trusted Place For Genuine Jewelleries**

**&**

**For Comfortable Lodging with vehicle park**



*24, Central Rd,*
*Sammanthurai*
*067 - 2260010*



*Ismail Building*
*137 forbes Road,*
*Colombo - 10.*
*011-2685788*



ISBN 955 - 95831 - 3 - 1